OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 SEP 1926
MADRAS

அஹல்யா பாய்

அல்லது

இந்தூர் நாட்டரசி

முருகவேள் துணை.

அஹல்யா பாய்

அல்லது

இந்தூர் நாட்டரசி.

இருக்கம். நா. மரகதவேலு, பி. எ.,

எழுதியது.

பிரசுரகர்த்தர்:

இ. சீனிவாஸ் அண்டு சன்ஸ்,

நாகவிலாசம்,

புரசைவாக்கம்.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்] [விலை அணா 12

PRINTED AT
THE TATA PRESS,
5, THAMBU CHETTY ST., MADRAS.

224695

TO

My Beloved and Revered Master

M. R. RY. C. R. NAMASIVAYA MUDALIAR Avl.,

Lecturer in Tamil, Queen Mary's College

THIS BOOK

IS

DEDICATED

AS A HUMBLE TOKEN OF LOVE AND GRATITUDE

BY

One of his 'Boys'

THE AUTHOR

' Assistance given by those who ne'er received our aid,
Is debt by gift of heaven and earth but poorly paid '—*Tirukural.*

INTRODUCTION.

The name Ahalya Bai is music to the ear. Its puranic association linking all earthly loveliness to ascetie austerity is representative of all the tragedy of ill-matched marriages made on earth. Its historic association is, however, of a widowed queen of unsullied reputation, unmatched strength of will, unequalled powers of statesmanship and nobility of character.

If this praise seems high-pitched and the language strong, a study of the great heroic figure in its historic setting presented with all the fidelity of this painstaking, cautious and conscientious author will go far to dissipate such a notion.

Mr. Maragadavelu has already scored a great success with his work on *Aurangazebe* and this on *Ahalya Bai* is another feather in his cap. The unfortunate millions of our people, who are by a variety of circumstances cut off from all opportunities of having access to the history of their own country, will find in these volumes, a sufficiently authentic, and for all practical purposes, complete account of the life and times of the eponymous hero and heroine.

It is from the point of view of affording easy accessibility to historical knowledge that I value Mr. Maragadavelu's work and recommend it to the extensive and well-deserved patronage of the Tamil public. The style is chaste and pure, classical and correct; it is simple and stately, and ought to serve as a model to students of Tamil composition in schools and colleges.

T. B. KRISHNASWAMI,
M.A., B.L., (M.E.S.)
District Educational Officer,
RAMNAD.

ஆக்கியோன் குறிப்பு.

‘எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்’

என்று நமது திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளியபடி, அநேக விஷயங்களில் சிறப்புற்று விளங்கும் அஹல்யா பாய் அம்மையாரின் திவ்விய சரித்திரத்தை வாசிப்பதிலும் கேட்பதிலும் நந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் உற்சாகம், மனத்தூய்மை, அறநெறி முதலிய அரிய குணங்கள் எய்தப் பெற்றுத் தத்தம் எதிர்கால வாழ்க்கையை இனிது நடத்தவல்லராவர் என்னும் துணிபுகொண்டு இச்சிறு புத்தகத்தை எழுதி வெளியிடுகின்றேன்.

இதுபோன்ற நூல்கள் பல எழுத எண்ணியுள்ளேனாதலால், பொதுஜனங்களும் கல்வியிலாகா அதிகாரிகளும் மற்றையோரும் இந்நூலை யாதரித்து என்னை இத்துறையில் மேன்மேலும் ஊக்குவார்களென்று நம்புகிறேன்.

இதற்கு மனமுவந்து அங்கில மொழியில் முகவுரை எழுதித் தந்த திருவாளர் T. B. கிருஷ்ணசாமி முதலியார் M. A., B. L. அவர்கட்கும் இப்புத்தகம் அச்சிலிருக்கும்போதே பிழையறப் பரிசோதித்துதவிய என் அரும் தமிழ் ஆசிரியர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கட்கும் நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

இருக்கம். நா. மரகதவேலு.

ALL RIGHTS
RESERVED BY THE
AUTHOR.

உ

முருகவேள் துணை.

அஹல்யா பாய்

அல்லது

இந்தூர் நாட்டரசி.

முன்னுரை.

ஒரு தேசத்தின் நாகரிக முதிர்ச்சியைச் செவ்வனே அறிந்துகொள்வதற்கு அத்தேசத்துப் பெண்மக்களின் நிலைமை ஒரு சாதனமாகும் என்ப. பலப்பல தேசங்களின் முன்னேற்ற முகாந்தரத்தைத் துருவி ஆராய்ந்துள்ள அறிஞர் அநேகர் இக்கூற்று உண்மையேயென ஆமோதிக்கின்றனர். அதுகாரணம் பற்றி, தமயந்தி, சாவித்திரி, ஜானகி ஆகிய மாதுசிரோமணிகளின் பிறப்பிடமெனப் பொலிவுற்று விளங்கும் நம் இந்திய தேசம் இப்பரந்த உலகிலுள்ள தேசங்கள் அனைத்திலும் தலைசிறந்த நாகரிகத்தில் மேம்பாடுற்றது என்றுஉரைப்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

தொன்றுதொட்டு இத்தேசத்தில் — நிலமகட்கு ஓர் இருதயகமலமெனப் புகழ்ந்துரையாடப்பெறும் இப்புண்ணிய பூமியில், பாரத இராமாயண இதிகாச மலர்களின்வாசம் எந்நாளும் வீசப்பெற்ற இப்பாரத கண்டத்தில் கல்விச் சிறப்பினும், கவிபாடுஞ் சத்தியினும், கற்பின்

மகிமையிலும், கடவுள் வழிபாட்டிலும் தேசபரிபாலன நிபுணத்துவத்திலும் பரோபகார மாட்சிமையிலும் பன்னாட்டாரும் போற்றிப் புகழும் பெண்மக்கள் பலர் ஜனித்துப் புகழ்மணம்வீச வாழ்ந்து, 'மற்றின்றி வாரா நெறி' அடைந்துளர்.

ஔவையார், வெள்ளி வீதியார், சாருமதி, ஏக வாக்கிய அக்கதேவி, மீராபாய், பத்மினி என்னும் இந்து மாதரை அறியாதார் யாரே?—புகழுடம்பெய்திய இவர்களை நினைத்துப் பெருமையடையாதவர் இந்நாட்டில் எவரும் இலர் என்பது திண்ணம்.

இத்தகைய ஒப்பற்ற இந்திய பெண்மக்களில் அஹல்யாபாய் என்னும் கீர்த்தி மிகுந்த இந்தூர் இராணியார் ஒருவரென மதிக்கற்பாலர். செல்வப் பெருக்கிலும் நாகரிக முதிர்ச்சியிலும் மதக் கோட்பாட்டிலும் தேச பக்தியிலும் இணையற்ற கம்பீர்ய நாட்டில்—மானிடர் அறிவுக்கு எளிதில் எட்டாததும், எக்காலத்தும் அழியப் பெறாததுமான மாண்பு பொருந்தி விளங்கும் இத்திவ்விய தேசத்தில் இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் அஹல்யாபாய் அம்மையார் மிகவும் பிரசித்தி பெற்றவர். இவர் தமது குடிகளின் விருத்தியைக் கருதி அவர்கள் பொருட்டுப் புரிந்த நன்மைகளுக்கு அளவேயில்லை. இவருடைய குண விசேஷங்களை அறிபவர் அதிக ஆச்சரியமும் அடங்கா மகிழ்ச்சியும் ஒருங்கே எய்துவர். இவருடைய மன வன்மையும் அமைதியும் மதிநுட்பமும் பரோபகார சிந்தையும் தெய்வ பக்தியும் அரசியல் மாட்சிமையும் மெச்சத்தகுவன. இந்தூர் (Indore) நாட்டையாண்டுவந்த மகாராட்டிய வமிசத்தைச் சேர்ந்தவர்களுள்

முருகவேள் துணை.

அஹல்யா பாய்

முதற் பகுதி.

பூர்வ வரலாறு.

அத்தியாயம்—1.

மகாராட்டியரின் முன்னேற்றம்.

'வாழ்வினை யுருத்த காலத் துயரவுத் தீர்வு நற்றம்
வீழ்முலை காத்த பாவ முண்டபின் வெய்ய நஞ்சா
மாழ்கடம் பிறந்த நஞ்சு முண்டபி னமிழ்த மென்றல்
வாழிய மாந்த செல்லா மீதுவினை வயத்தா மன்றோ'

—பிரமோத்தர காண்டம்.

பதின் மூன்றாம் நூற்றாண்டில் யாதவகுலத்தரசர் ஆட்சிக்குட்பட்டிருந்ததும், இந்திய தேசத்தின் மேற்கிலுள்ளதும் இப்போது பம்பாய் இராஜதானி (Bombay Presidency) என்று வழங்கப் பெற்றதுமான மலைப்பிர தேசத்தில் மகாராட்டியர் என்னும் இந்துக்கள் வசித்து வந்தார்கள். அவர்கள் வசித்து வந்த பாகத்திற்கு மகாராஷ்டிரம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று.

மகாராட்டியர் உருவத்திற் சிறியர்; ஆயினும் உரம் பெற்றுடையினர். அவர்கள் முகவசீகரமற்றவர்கள் என்று கூறலாகும். சுறுசுறுப்பும், எக்காரியத்தையும் எளிதில்

செய்து சாதிக்கவல்ல மனோவுறுதியும், விடாமுயற்சியும் வாய்க்கப்பெற்ற அவர்கள் ராஜ புத்திரரைப்போல் கர்வமும் வீண்டம்பமும் படைத்தவர்களல்லர். அவர்களில் அநேகர் உலகானுபவம் நிறைந்தவர்கள். அவர்களுக்குச்சோம்பல் என்பது இன்னதென்று தெரியாது. மகாராட்டியருக்குக் காரியம் பெரிதேயன்றி வீரியம் பெரிதன்று. அவர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தில் சித்தி பெறுவதற்குரிய மார்க்கம் நன்றெனினும் தீதெனினும் அதைக் கையாளுவதற்குச் சிறிதும் பின்வாங்கமாட்டார்கள். அவ்விஷயம் முடிவு பெறும் வரையில் அவர்கள் இன்ப நுகர்ச்சியை அறவே ஒழிப்பார்கள். தங்கள் உயிரையும் ஒருபொருட்டாகக் கருதமாட்டார்கள். ஆனால், அவர்கள் வீண் புகழைக்கருதி, தங்கள் சுப நலத்தையும் இன்னுயிரையும் இழக்க முன்வருவதில்லை.

அவர்கள் அனைவரும் குதிரையேற்றத்தில் தேர்ச்சிமிகுந்தவர்கள்; தங்கள் மட்டக்குதிரைகள்மீது இவர்ந்து நெடுந்தூரம் சலிப்பின்றிச் சவாரி செய்ய வல்லவர்கள். மழைக்காலமொழிந்த மற்றைக்காலங்களில் அவர்களுக்கு அவரவர்களுடைய குதிரைகளே வீடுவாசல்.

அவர்களுடைய வாழ்க்கை எவரும் மெச்சத்தகுந்தது. ஆடம்பரமற்றது. அவர்கள் எவ்விஷயத்திலும் அபரிமிதமான செலவு செய்வதேயில்லை. இதர இந்துக்களைப் போலன்றி, அவர்கள் உண்ணும் விஷயத்திலும் அளவுமீறி நடக்கமாட்டார்கள். கோதுமைரொட்டியைத் தின்று தண்ணீர் அருந்தித் தம் காலத்தைக் கழிப்பார்கள். அவர்களுக்குள் தனவந்தரும் வெகு தாழ்மையுடன் நடந்துகொள்ளுவார்கள். அத்தனவந்தரின் வாழ்க்கையும் சாதாரணமானதே. ஆயினும், 'போதுமென்னும் எண்ணமே பொன் செய் மருந்து' என்னும் கொள்கை, அவர்களில் மிகுந்த மதப்பற்றுடையவனுக்கும் இருந்ததில்லை. நாளுக்கு நாள் சகல விஷயங்களிலும் விருத்தியடைவதற்கான ஊக்கம் அவர்களுக்கு மிகுதியாயிருந்தது.

அத்தகைய மகாராட்டியர் வியவசாயமே (Agriculture) முக்கிய தொழிலாகக்கொண்டு ஜீவனம் செய்துவந்தனர். அஃதொழிந்த வேளைகளில் அவர்கள் மகாராஷ்டிரத்துக்கு அருகிலுள்ள ஆமத் நகரம் (Ahmednagar) பீஜப்பூர் (Bijapur) ஆகிய நாடுகளை ஆண்டுவந்த மகம்மதிய மன்னரின் சேனாவீரர்களாக இருந்துவந்தார்கள். அவர்களுடைய முக்கிய ஆயுதங்கள் கத்தியும் ஈட்டியுமே.

இவ்விதம், மகாராட்டியர், 'நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்' அனைய நிலையற்ற நிறை செல்வத்தைப் பிரதானமாகக் கருதினவர்களாய்த் தமது சுதேச முன்னேற்றத்தைக்குறித்த விஷயங்களை அறவேயொழித்துத் தம் இனிய வாழ்நாட்களைப் பிறருக்குத் தொண்டு செய்வதில் செலுத்தி வந்தனர். அதுவேயுமன்றி, அவர்களுக்குள் ஒற்றுமையுமில்லாதிருந்தது.

தத்தம் தொழில் காரணமாக, ஒற்றுமையின்றி அநேக வருஷம் தட்சிண தேசத்தில் சிதறுண்டிருந்த மகாராட்டியர் அனைவரையும் ஒன்றுசேர்த்து அவர்களுக்குத் தேசாபிமானம், மதாபிமானம் பாஷாபிமானம் முதலியவற்றைப் புகட்டி, அவர்கள் பெயரைச் சொன்னமாத்திரத்தில் எவரும் அஞ்சி நடுங்கும்படியான நிலைமைக்குக்

கொண்டுவந்தவர் சிவாஜி (1627-80) என்னும் வீர புருஷராவர்.

உலகப்பிரசித்தி பெற்ற இம்மன்னர் திலகம், ஔரங்கசீப் பாதுஷாவும் அஞ்சி நடுங்கிய இவ்வீரசிகாமணி 1680ஆம் வருஷம் விண்ணுலகமடைந்தனர். அவருடைய புதல்வன் சாம்பாஜி (Sambhaji), தன் தந்தையைப் போலல்லாமல் சிற்றின்பப் பிரிய மேலீட்டினால் ராஜரீக விஷயங்களைத் துறந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் (Western Ghats) சங்கமேசுவரம் என்னுமிடத்தில் தனக்கென அமைத்துக்கொண்ட இன்பநுகர்ச்சிக்குரிய அழகிய மாளிகையில் தானும் தன் இணைபிரியாத நண்பனான கலுஷாவும் சில கணிகை மாதருடன் வெகு உல்லாசமாய் வாழ்ந்து வந்தனர்.

ஔரங்கசீப் பாதுஷா அவ்விஷயத்தையறிந்து மகாராட்டியரை அடியோடு அழிப்பதற்குத் தருந்த தருணம் அதுதானெனத் தன் மனத்திலுன்னி அவரைப் பிடிக்குமாறு தாமதியாமல் அதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்ய ஆரம்பித்தார்.

ஆகலால், 1682ஆம் வருஷத்திலிருந்து மகாராட்டியருக்கும் மொகலாயருக்கும் யுத்தம் நடந்து வந்தது. முதல் முதல் ஔரங்கசீப் பலத்த மொகலாய சேனைகள் இரண்டை மகாராட்டியருக்கு விரோதமாய் அனுப்பி வைத்தார். அவ்விரு மொகலாய சேனைகளும் தோல்வியுற்றோடின. மொகல் பாதுஷாவோ மனத் தளர்ச்சியடையவில்லை. அவர் தம் எண்ணத்தை எவ்விதத்திலாயினும் நிறைவேற்றவேண்டும் என்னும் நிர்ணயத்தைக் கொண்டார்.

அந்நிர்ணயம் ஈடேறும் சமயம் நெருங்கிற்று. 1689ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஔரங்கசீப் அனுப்பி வைத்த மொகல் தளகர்த்தன் ஒரு சிறு சேனையுடன் சங்கமேசுவரத்துக்குச் சென்று, அவ்விடத்தில் இன்னும் சிறிது நேரத்திற்குள் தனக்கு நேரப்போகும் விபத்தை அறியாமல் மிகுந்த உல்லாசத்துடனிருந்த சாம்பாஜியையும் அவனுடைய மந்திரியான கலுஷாவையும், அவ்விருவர் [illegible] மயக்கத்திலெனக் கிடந்து, வேண்டிய [illegible] கணிகை மாதர் முன்னிலையில், பற்றி இழுத்துக் கொண்டுபோனான். அம்மொகல் தளகர்த்தனிடமிருந்து தப்பித்துக் கொள்ளும் சக்தி அவ்விருவரிடத்தும் இல்லாது போயிற்று. சிற்றின்ப வாரிதியில் [illegible] ராஜரீக விஷயத்தில் அசிரத்தையும் [illegible] விபத்து எங்கிருந்துதான் வராது!

சாம்பாஜியும், சிவாஜியின் குமாரனுக்குத் தகுந்த [illegible] சாம்பாஜியும் கலுஷாவும் [illegible] ஔரங்கசீப் இருந்த [illegible] இழுத்து இருமுறைத் [illegible] இறைவனைத் துதித்து நின்றார்.

அவர் அவ்விதம் கடவுளை நோக்கித் துதித்து நின்றதைக் கண்ணுற்றதும் சாம்பாஜியும் அவன் நண்பனும் அப்போது அவர்கள் இருந்த நிலைமையைக் கவனியாமல் முன் யோசனையின்றி அவரை இகழ்ந்துரைத்தனர். அவ்விகழ்ச்சி மொழிகளைச் செவியிலேற்றதும் அவர் கோபமுற்று அவ்விருவருடைய நாக்குகளையும் துண்டித்து

அவர்களை வதைத்துக் கொல்ல ஆக்ஞாபித்தார். நுணலும் தன் வாயாற் கெடுமன்றோ!

வெட்டுண்டிறந்த அவ்விருவர் தலைகளைக் கம்பங்களில் நாட்டி அக்கம்பங்களை இரண்டு மொகல் போர் வீரர் தங்கள் கைகளில் தாங்கிப்பிடித்தவண்ணம் தட்சிண தேசத்தின் முக்கிய இடங்களைச் சுற்றிப் பவனி வந்தனர். அப்பயங்கரமான காட்சியைக் கண்டோர் அனைவரும் மிகுந்த திகில் அடைந்தனர். 'என்னே ஔரங்கசீப்பின் கொடுமை!' என்று ஏங்கினர்.

இச்சம்பவம் நடந்தேறிய சிறிது காலத்திற்குள் மொகலாயர் ராஜகிரியைக்கைப்பற்றினர். சாம்பாஜியின் புதல்வன் ஸாஹு (Sahu) கைதியாக டில்லிக்குக் கொண்டு போகப்பட்டான். வெகு நாள் வரையில் அதாவது ஔரங்கசீப் இறந்துபோகும் வரையில் (1707 ஆம் மார்ச்சீ) அவன் டில்லியின் மொகல் அரண்மனையில் இருந்து வந்தான். அதனால், அவனுக்கிருந்த அரசாளுந் திறமையும் அறவே யொழிந்தது. அங்கிருக்கும்போதே அவன் இரண்டு மகாராட்டிய மங்கையரை மணந்தான். அவ்விவாகமும் மொகல் பாதுஷாவின் உத்தரவின் பேரில்தான் நடந்தேறியது.

சுத்த வீரரெனப் பெயர் படைத்து இந்துமதத்தை நிலை நிறுத்துவதற்கென்று மகாராட்டிய ராஜ்யத்தை ஸ்தாபித்து அஞ்சாநெஞ்சுடன் மொகலாயரை எதிர்த்து அவர்களை நடுங்கவைத்த நமது சிவாஜிவீரரின் கால்வழியில் தோன்றினவர்கள் சிற்றின்பப் பிரியத்தால் மனவுறுதி இழந்து இந்நிலைமைக்கு வந்த விஷயம் பெரிதும் விசனிக்கத் தகுந்ததே!

ஔரங்கசீப் பாதுஷா 1707-ஆம் வருஷம் மார்ச்சீ ஆமத் நகரத்தில் உயிர்துறந்தார். அவர் இறந்த பிறகு, மொகல் ராஜ்யத்தின் உரிமை பெறுவதற்கு அவருடைய புதல்வர்கள் ஒருவரோடொருவர் அமராடலாயினர். அவ்வமரில், இறுதியில் முயஸம் (Muazzam) வெற்றி பெற்று பகதூர் ஷா (Bahadur Shah) என்னும் பட்டத்துடன் மொகல் சிம்மாசனம் ஏறினான்.

அவன், தன் அரசாட்சியை ஸ்திரப்படுத்தக் கருதி மகாராட்டியருடன் சமாதானஞ் செய்துகொண்டு ஸாஹுவை விடுதலை செய்தான். சிறை விடுபெற்ற ஸாஹு தன் சுயநாடு சேர்ந்தான். சிவாஜி மன்னர்மீது மிகுந்த பற்றுடையவர்களாயிருந்த மகாராட்டிய வீரர் அனைவரும் அவனுக்கு உதவிசெய்ய முன் வந்தனர். அவன் அநேகவருஷம் தங்களை விட்டுப் பிரிந்திருந்து இப்போது வந்ததால் அவனைக் கண்டவுடன் அன்பாற் கனிந்தார்கள்.

ஆனால், ஸாஹுவின் சிற்றன்னையாம் தாராபாய் (Tara Bai) அவனிடம் ராஜரிக நிர்வாக சக்தியின்மைக்காக அவன் மீது வெறுப்புற்று அவனுக்கு விரோதமாய்க் கிளம்பினாள். ஸாஹுவைச் சேர்ந்திருந்த மகாராட்டிய வீரர் ஒன்றுசேர்ந்து அவளை முதுகு காட்டியோடச் செய்தார்கள். தோல்வியடைந்த தாராபாய் இறுதியில் கோலாப்பூர் (Kolhapur) என்னுமிடத்தில் மகாராட்டிய ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்து, அவ்விராஜ்யத்திற்கு மூட சிகாமணியாகிய தன் புதல்வன் ஒருவனை இரண்டாம் சிவாஜி (Sivaji II) என்னும்

பட்டத்துடன் அரசனாக நியமித்தாள். அவனோவெனில் 1712-ஆம் ஆண்டு இறந்துபோனான்.

தற்பெருமை, சுய நலம், பொறாமை ஆகிய துர்க்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்றதாராபாய் அமரில் தோற்று அளப்பரிய சினத்துடன் கோலாப்பூரை நோக்கிச் சென்று பிறகு, ஸாஹு சத்தாரா (Satara) என்னுமிடத்தில் அரியாசனத்தில் அமர்ந்தான். தனக்கு விரோதிகள் இருப்பதைக் கண்டும் அவனுக்குப் புத்திவர வில்லை. அரசன் என்னும் பட்டமும் அரண்மனை இன்பநுகர்ச்சியும் தனக்குப் போதுமானவை எனக் கருதி அவன் சச்சந்த மன்னனைப்போல் ராஜ்ய பாரத்தைத் தன் முதன் மந்திரியாகிய பாலாஜி விசுவநாதன் என்னும் மகாராட்டிய வேதியனிடம் ஒப்பித்து அரண்மனையின் அந்தப்புரத்தைவிட்டு அகலாதிருந்தான்.

'இனமா மென்றுரைப்பினு மேதமேனுக்
முனமாகிய பான்மை முளைத் தெழலாம்
புனமா மலர் வேய் நறும் பூங்குழலாள்
மனமா தெரி வோடிய மன்னவனே'

அத்தியாயம்—2.

பீஷ்வாக்கள் வரலாறு.

'தன்னிலையுந் தாழாத் தொழினிலையுந் துப்பெதிர்ந்தா
ரின்னிலையு மீடி லியனிலையுந்—துன்னி
யளந்தறிந்து செய்வா னமைச்சனும் யாதும்
பிளந்தறியும் போற்ற லான்'—சிறுபஞ்சமூலம்.

ஐரோப்பாவில் (Europe) கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிராங்கிஷ் நாட்டு (Frankish Kingdom) மன்னன் அரண்மனையில் மேஜர் டோமஸ் (Major Domus) என்னும் காரியதரிசி உத்தியோகத்தில் அமர்ந்திருந்தவன் சமயம் நேர்ந்தபோது தன் காரியத்திலேயே கண்ணாயிருந்து தன்னுடைய புத்தி சாதுர்யத்தால் ஒருவர் துணையுமின்றி அந்நாட்டரசுரிமையைப் பெற்று அதன் அரசனை ஒன்றுமில்லாதவனாக்கினான். தன் மூடத்தனத்தால் அரசியல் இன்னதென்பதை அறிந்து அதைச் சரிவர நடத்த முயற்சி செய்யாமல் யாவற்றையும் மேஜர் டோமஸ் கையில் விட்டுவைத்த அவ்வரசன் அக்காரியதரிசிக்கு விரோதமாய் ஒன்றுஞ்செய்ய இயலவில்லை.

அஃதேபோல், முதல்முதல் ஸாஹுவிடம் பீஷ்வா பட்டம் பெற்று மந்திரியாயிருந்த பாலாஜி விசுவநாதன் (1714—1720) ஸாஹுவுக்கு ராஜ்யபாரம் தாங்குவதற்கான வலிமை இல்லாது போனதுபற்றி, மிக்க மனமகிழ்ச்சியுடையவனாய் அத்தருணத்தை நெகிழ விடாமல் தன் புத்திசாதுர்யத்தாலும் விடாமுயற்சியாலும் நாளுக்

குநாள் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு வந்து இறுதியில் மகாராட்டிய அரசுரிமை பெற்று அவ்வுரிமையைத் தன் வமிசத்தவர்களே அடையத்தக்க வழியும் ஏற்படுத்திவிட்டான். ஸாஹு பெயரளவிலே அரசனாயிருந்தான். அவன் தன் உண்மை நிலைமையை அறிந்திருந்தும் பேஷ்வா பாலாஜி விசுவநாதனை அடக்கவாகிலும் அகற்றவாகிலும் யத்தனிக்கவேயில்லை. அவ்விதம் தான் எடுத்துக்கொள்ளும் முயற்சி பேஷ்வாவிடம் பலிக்காது என்று நம்பிவிட்டான் போலும்! தெய்வ சங்கல்பம் அவ்விதமிருப்பின் யார் என்ன செய்யமுடியும்?

பாலாஜி விசுவநாதன் தன் மனவுறுதியே தனக்குற்ற துணையெனக்கொண்டு முன்னுக்கு வந்தவர்களில் ஒருவன். முதல் முதல் இவன் தானாஜி (Dhanaji) என்னும் மகாராட்டிய தளகர்த்தனிடம் அலுவலில் அமர்ந்திருந்தான். அத்தளகர்த்தன் இறந்தபிறகு அவனுடைய புதல்வனுக்குத் தொண்டு செய்து வந்தான். இவனுக்கு நற்காலம் வந்தது. அதன் பலனை இவன், ஸாஹுவுக்கு விரோதமாய்க் கிளம்பிய ஒரு மகாராட்டியத் தலைவனை அடக்கினான். அதுவேயுமன்றி, மேற்குக் கடற்கரையோரத்திலிருந்தவண்ணம் கப்பலோட்டிகளையும் கப்பற் பிரயாணிகளையும் இம்சித்துவந்த ஆங்கர் (Angre) என்னும் மேனாட்டுக் கடற்கொள்ளைக்காரனிடம் (Pirate) ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டான். அவ்வுடன்படிக்கையின்படி, ஆங்கர், விசுவநாதன் அறியாவண்ணம் ஒரு காரியமும் செய்ய இயலாது போயிற்று. இவ்விரு சம்பவங்களால் விசுவநாதன் கீர்த்தி நாடெங்கும் பரவிற்று. இவன் கீர்த்தியைப் பற்றிக் கேள்விப்பட்ட

ஸாஹு, ராஜ்ய பாரத்தை தன் பொருட்டுத் தாங்கிக் கொள்ளத் தகுந்தவன் இவனே என்று மனத்திலுன்னி, இவனைத் தன் முதன்மந்திரியாக அமர்த்திக்கொண்டான்.

இவன் பேஷ்வாவாக இருந்த காலத்தில் நிறைவேற்றிய இரண்டுவிஷயங்கள் கவனிக்கத் தகுவன. அவ்விரு விஷயங்களும் இவன் வகித்திருந்த மந்திரிஸ்தானத்தையும் மகாராட்டிய ராஜ்யத்தையும் பலப்படுத்தின.

I. பாலாஜி விசுவநாதன் மகாராட்டியரில் வல்லவன் என்பதை அறிந்திருந்த ஸையத் ஹுஸேன் அலி (Sayyid Hussain Ali) அதுசமயம் டில்லியில் அரசாட்சி செய்துவந்த பரக்ஷியர் (Farrukh Shiyar, 1713-19) என்னும் மொகல் பாதுஷாவை ராஜ பதவியினின்றும் நீக்கி, மகம்மதுஷாவைப் (Muhammad Shah, 1719-48) பட்டத்துக்குக் கொண்டுவர நினைத்து, இவன் உதவியை நாடினான். பாலாஜி விசுவநாதன் ஹுஸேன் அலிவேண்டுகோளுக்கிணங்கி பலத்ததோர் மகாராட்டிய சேனையுடன் டில்லிக்குச் சென்றான்.

பரக்ஷியருக்கு எவரும் உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால், அவன்மீது பரிதாபங்கொண்டு, ராஜபுதனத்திலுள்ள அம்பார், பூந்தி என்னும் இருநாடுகளின் மன்னர் அவனுக்கு ஒத்தாசை செய்யத் தீர்மானித்து, அவனைப் போருக்கு ஆயத்தமாகக் கூறினர். அவர்களுடைய வார்த்தைக்கு அவன் இசையாமல் பயத்தினாலும், பெண்கள்மீதுள்ள மோகத்தினாலும் தன் அரண்மனையை விட்டு வெளியே வந்து அமராட இசையவில்லை. அவன் அரண்மனையின் அந்தப்புரத்தில் போர்வீரர் எடுக்

தடிவைக்கமாட்டார்கள் என்று நம்பினன். அந்நம்பிக்கை பழுதாயிற்று.

டில்லிக்குச் சென்ற பேஷ்வா பாலாஜி விசுவநாதன் தன் மகாராட்டிய சேனையின் உதவியால் பரக்ஷியரை அரியணையினின்றும் தள்ளி அதன்மீது மகம்மதுஷாவை அமர்வித்தான். அவ்வுதவியின்பொருட்டு, அவன் ஸையத் ஹுஸேன் ஆலியின் சிபார்சு பெற்று மொகல் பாதுஷாவிடமிருந்து தட்சிண தேசத்தைச் சேர்ந்த காந்தேஷ் (Khandesh) அவுரங்கபாத் (Aurangabad) பிரார் (Birar) பீடார் (Bidar) பிஜப்பூர் (Bijapur) ஹைதராபாத் (Haiderabad) என்னும் மாகாணங்களில் சர்தேஷ்முகி, சவுத் வரிகள் வசூலித்துக்கொள்ளும் அனுமதியை அடைந்தான்.

II மேலும், இவன் மகாராட்டியர் வசூலிக்கும் வரிப்பணத்தில் தனக்கும் தன்னரசனுக்கும் இன்னும் இதர மகாராட்டியத்தலைவர்களுக்கும் சேரவேண்டிய தொகை இத்தனை இத்தனை என்று வரையறுத்து வைத்தான். இவ்வேற்பாடு அத்தருணம் சிதறுண்டிருந்த மகாராட்டியரை ஒன்றுசேர்த்து அவர்களுக்குள் ஒருவித ஐக்கியத்தை உண்டாக்கிற்று.

பேஷ்வாவாக (Peshwa) இருந்து மகாராட்டிய அரசுரிமை பெற்று அவ்வுரிமை பெறாதவன்போல் நடித்து, ஸாஹுவின் மனத்தைக் களிப்பித்து எவர்மனமுங் கோணாமல் ராஜரிக விஷயங்களை நீதிநெறி பிறழாது நடத்திவந்த பாலாஜி விசுவநாதன் 1720-ஆம் ஆண்டு இறந்து விட்டான். அவனுக்குப் பிறகு அவன் புதல்வன்

பாஜிராவ் எவர் சம்மதியும் பெறாமல் ஸாஹுவுக்கு மந்திரியாயினன்.

பாஜிராவ் (1720-40) தன் தந்தையைக் காட்டிலும் அதிக சாமர்த்தியம் வாய்ந்தவன். இவனுக்குப்பின் வந்த பேஷ்வாக்களும் எவ்விதத்திலும் இவனுக்கு இணையாயிருந்ததில்லை. இவன் குலத்தில் பிராமணனேயாயினும் யுத்தத்தில் தேர்ந்தவன். அதனால் நாம் இவனை க்ஷத்திரிய பிராமணன் என்றுரைப்பதில் இழுக்கில்லை.

அரசமுறைமைகளைக் கற்றறிந்து அவற்றின்படி ஆளவேண்டுமென்னும் விருப்பம் பாஜிராவுக்கு இருந்ததில்லை. இவனுடன் பழகிவந்தவர்கள் இவனைப், 'போராசைப்பையன்' என்று இகழ்ந்துகூறினர். அதுவேயுமன்றி, இவன் கடவுள் பக்தியற்றவனென்பதும் போர் வீரனாயிருந்தானேயன்றி இவன் தேச க்ஷேமத்தின் பொருட்டு நீதிநெறியைக் கடைப் பிடித்தொழுகினவனல்லன் என்பதும் அவர்கள் கொண்ட அபிப்பிராயம்.

அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தீரயோசிக்குமளவில் அவ்வபிப்பிராயம் முழுவதும் உண்மையென்று நம்புவதற்கில்லை. பாஜிராவ் தன்னுடைய நிலைமைக்கேற்ற குணங்கள் வாய்ந்தவனே.

நைஸாமுல்முல்க் (Nizam-ul-mulk) என்பவனின் குயுக்தியையும் தந்திரத்தையும் முன்னதாக அறிந்து அதைத் தடுப்பதற்கேற்ற முயற்சிகள் செய்து அவன் எண்ணம் நிறைவேறாவண்ணம் செய்த பாஜிராவ் சாமானிய மனிதனல்லன். விடா முயற்சியும் புத்திசாதுர்யமும் வீரியமும் பிறரை மயக்கவல்ல வாக்குவன்மையும்

பொருந்திய பேஷ்வா சிவாஜி மன்னனைக் காட்டிலும் உயர்ந்தவனே; ஆயினும், இந்திய தேச சரித்திரத்தில் சிவாஜிக்கு இருக்கும் கண்ணியமும் பெருமையும் இவனுக்கு இல்லை என்பது எவரும் அறிந்த விஷயமே.

பாஜிராவ் முகவசிகர முள்ளவன். இவன் அமர்க்களத்தில் தன் நிலைமைக் கேற்றவாறு இடம்பத்துடன் இருக்கப் பிரியப்படவில்லை; சாதாரண யுத்த வீரனைப் போல் யுத்தகாலத்தில் உண்டியை வெறுத்துச் சகல கஷ்டங்களுக்கும் ஈடுபட்டு நிற்பான்.

பாஜிராவின் நடையுடை பாவனைகளை அறிந்து கொள்ளும் பொருட்டு, நைஸா முல்முல்க் தன்னிடமிருந்த சித்திரப்பட இலேககனை வரவழைத்து, 'நீ மகாராட்டியர் இராணுவம் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்று, பாஜிராவைக் கண்டு அவன் எந்நிலைமையிலிருக்கின்றானோ அதேவிதமாய் வர்ணப்படமொன்று வரைந்துவா' என்று ஆஞ்ஞாபித்தனுப்பினான்.

அச்சித்திரப்பட இலேககன் தன் எஜமானன் கட்டளைப்படி வர்ணப்படமொன்று தீட்டிக் கொணர்ந்தான். அப்படத்தில் பாஜிராவ் ஒரு சாதாரண மகாராட்டியனைப் போல் குதிரை இவர்ந்து, நீண்ட ஈட்டியொன்றைத் தோள்மேல் தாங்கித் தன் இருகரங்களினும் முதிர்ந்த சோளக் கதிர்களைத் தின்பதற்கென்று கசக்கிக் கொண்டிருந்தவிதம் காணப்பட்டது.

நைஸாமுல்முல்க் அவ்வர்ணப் படத்தைக் கண்ணுற்றவளவில் பாஜிராவ் சாமான்ய மனிதனல்லன் என்பதை உணர்ந்து கொண்டான்.

இவர் மிகவும் சிறந்தவர் என்பது இந்தியதேச சரித்திராசிரியர் துணிபு.

பழுதற்றதும் புகழ்மிக்கதுமான இவ்வம்மையாரின் இனிய சரிதத்தை விவரமாய்த் தெரிந்துகொள்வதற்கு இவர் ஆளுகைக்குட்பட்டிருந்த இந்தூர் நாட்டின் ஸ்தாபனத்தையும் அதை ஸ்தாபித்த வென்றிமறஞ் சிறந்த வீரசிகாமணியாம் முலஹரி ராவின் (Mulhar Rao) வரலாற்றையும் உணர்தல் இன்றியமையாததாகும். ஆதலால், முதன்முதல் முலஹரியைப்பற்றிய விவரங்களை எனக்குத்தெரிந்த மட்டில் எடுத்துக்கூறி, அதன்பிறகு அஹல்யா பாய் அம்மையாரின் விருத்தாந்தங்களைச் சாங்கோபாங்கமாக வரைந்து இந்நூலை ஒருவாறு முடித்திருக்கின்றேன்.

முருகவேள் எனதெண்ணம் இனிது முடியுமாறு அருள்புரிவானாக!

இத்தகைய பாஜிராவ், டில்லியில் அரசாட்சி செய்து வந்த மொகல் பாதுஷா மகம்மது ஷாவை, ஆட்டிப்படைத்தது ஆச்சரியமன்று. அப்பாதுஷாவிற்கு உதவியாக வந்த நைஸாம் மன்னன் (Nizam) இவனால் அடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை. ராஜரிக விஷயங்கள் அனைத்தும் இவனே நடத்திவந்ததால், ஸாஹூ இருந்த இடம் தெரியாதிருந்தான்.

பீஷ்வா பாஜிராவ் மகாராட்டிய சேனைகளை மொகல் ஆட்சிக்குட்பட்ட நாடுகளுக்கு விரோதமாய் நடத்தி வந்தான். மொகல் பாதுஷாவும் அவனைச் சேர்ந்தோரும் மகாராட்டியரின் முன்னேற்றத்தைக்கண்டு தங்கள் கதி என்னவாகுமோ என்று அஞ்சினார்கள். மொகல் ராஜ்யம் முழுவதும் மகாராட்டியரின் வெற்றி முழக்கம் தொனித்துக்கொண்டிருந்தது. பீஷ்வாக்களின் வல்லமையை என்னென்று உரைப்பது!

அது சமயம், வெற்றித் தருக்குற்ற பாலாஜியின் தளகர்த்தரில் நால்வர் தத்தம் கைவன்மையால் தமக்கென ராஜ்யங்கள் ஏற்படுத்திக்கொண்டனர். அந்நான்கு தளகர்த்தரும் ஏழைக்குடும்பங்களில் பிறந்து வறுமைப்பிணி வாய்ப்பட்டு வருந்தினவர்களாவர்.

அந்நால்வரில் ரகோஜி பான்ஸலே (Raghoji Bhonsle) என்பவன் மத்திய இந்தியாவில் (Central India) நாகப்பூர் ராஜ்யமும், பீலாஜி கெய்க்வார் (Pilaji Gaekwar) என்பவன் கூர்ஜ்ஜர (Gujaret) ராஜ்யமும், முலஹரி ராவ் ஹோல்கார் (Mulhar Rao Holkar) இந்தூர் (Indore) ராஜ்யமும் ரானோஜி சிந்தியா

(Ranoji Sindhe) குவாலியர் (Gwalior) ராஜ்யமும் ஸ்தாபித்து அந்தந்த ராஜ்யத்தில் அவரவர் அரசாள ஆரம்பித்தனர். இந்நான்கு ராஜ்யங்களில் நாகப்பூர் ஒழிந்த இதர ராஜ்யங்கள் இன்னும் சுதேச ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றன.

சரித்திரப்போக்கை இதனோடு நிறுத்திக்கொண்டு நம்முடைய விஷயத்துக் குரித்தானவற்றை விரித்துக் கூறுவோம்:

OFFICE OF THE REG...
27 SEP 1926
MADRAS

அத்தியாயம்—3.

மல்ஹாரிராவின் இளமைப் பருவம்.

‘கலையினை தகலமுங் காட்சிக் கின்பமுஞ்
சிலையினை தகலமும் வினைச் செல்வமு
மலையினி னகலிய மார்ப னல்லதி
வுலகினி லிலையென வோதுவ ளாயினான்’

—சீவகசிந்தாமணி.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பூனா (Poona) வைச் சேர்ந்த நிவாநதி பாலத்துக் கணித்தாக ஹோல் (Hol) என்னும் மகாராட்டிய கிராமத்தில் சில ஏழைக்குடியானவர்கள் வசித்து வந்தார்கள். அவர்களில் கந்தோஜி (Khandoji) என்பவர் ஒருவர். அவர் மணம் புரிந்து அநேக வருஷங்களாகியும் புத்திரப்பேற்றை அடையவில்லை.

‘புத்’ என்னும் நரகத்துக்கு ஆளாகா வண்ணம் அப்பெருங்குறையை நிவர்த்திக்க வேண்டி அவரும் அவர் மனைவியும் பண்டரிநாதனை அநவரதமும் ஆராதனை செய்துவந்தார்கள். உலகநாதனை உள்ளன்புடன் பூசிப்போர், தங்களுக்கு நேருங்குறைகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கப்பெற்று, நித்தியானந்தம் அடைவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோமல்லவா!

அந்நியோந்ய அன்புடன் இல்லற தருமம் இம்மியும் பிசகாது வாழ்ந்து வந்த உத்தம சதிபதிகள் இருவரின் வேண்டுகோள் வீண்போகவில்லை. பண்டரி நாதர் திருவரு

ளால் கந்தோஜி மனைவி கருப்பமுற்றாள். பத்துமாதங்கள் பறந்தோடின. அவள், 1694ஆம் ஆண்டில் ஒரு சுபதினத்தில் சூரியோதய காலத்தில் ஆண்குழந்தையொன்றைப் பெற்றெடுத்தாள். அதுசமயம் அவ்விருவரும் அடைந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. அவர்கள் அவ்வாண் குழவிக்கு முலஹரி ராவ் (Mulhar Rao) என்று நாமகரணஞ் சூட்டி, எளிய நிலையிலிருந்தும் தங்களால் இயன்றவரையில் அக்குழந்தையைப்போற்றி வளர்த்து வந்தார்கள். அவர்கள் அதன் குறு நடையைக் கண்டும் மழலைச்சொல்லைக்கேட்டும் அகமகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஆ, பிள்ளைப்பேற்றின் மகத்துவத்தை என்னென்றுரைப்பது! தென்புலத்தார் உவக்கும் கடன் முடிக்கும் மாண்பு பெற்ற அத்தகையோர் ஜன்மம் சாபல்யமாகும்.

'படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினு மிடைப்படக்
குறு குறு நடந்து சிறுகை நீட்டி
யிட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்து
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே'

கந்தோஜி, தன் முதுமைப் பருவத்தில் பிறந்த ஒரே புதல்வன் முலஹரிராவின் இனிய ஆடல்களைக் கண்டு நெடுநாள் மகிழும் பாக்கியம் பெறவில்லை. அவர் திடீரென்று நோய் கண்டு இறக்குந் தருணத்தில் இருந்தார். அப்போது அவர் தமது புதல்வனை ஆகமுறத்தழுவி அவனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கும்படி முழுமுதற் கடவுளை நோக்கி வேண்டிக்கொண்டு, தம்மருகில் விசனமுகத்

துடன் உட்கார்ந்துகொண்டிருந்த மனைக்கிழத்தியை நோக்கி, 'பெண்ணே, நான் இறந்து போவதைப்பற்றி நீ வருந்தவேண்டா. மானிட ஜன்மம் எடுத்தோர் அனைவரும் மாண்டொழிவது நிச்சயம். இவ்வுலகில் நிலைபெற்றிருப்பவர் எவருமிலர். நான் இவ்வுலகமென்னும் நாடகக் கொட்டகையில் ஆடவேண்டிய ஆட்டமெல்லாம் ஆடியோய்ந்தேன். இனி ஐயன்பதம் போய்ச் சேரவேண்டியவனாயிருக்கிறேன்........பண்டரிநாதர் அருளால் நமக்குப் பிள்ளைக்கலி தீரப் பிறந்த இக்குழந்தையைப் பாதுகாப்பது உன் கடமை. இவன் உன்னை உன் ஜீவகால பரியந்தம் காப்பாற்றுவான். இவனால் நாமிருவரும் நற்கதியடைவோம் என்பதற்கு ஐயமில்லை. இவனுடைய ஜாதகத்தைக் கூர்ந்து கவனித்த ஜோதிட நூல் வல்ல பெரியோர் இவன் உயர்ந்த நிலைமைக்கு வருவானென்று ஒரே விதமாய்க் கூறியிருக்கின்றனர்........அவ்வறிஞரின் கூற்றின் உண்மையை அறிந்துகொள்வதற்கு நான் கொடுத்து வைக்கவில்லை. யாவும் ஈசன் செயல்!' என்று கூறினார். இச்சம்பாஷணை நடந்த இரண்டாம் நாள் கந்தோஜி மண்ணுலக வாழ்வை நீத்தார். அப்போது முலஹரி ஐந்துவயது பாலகனாயிருந்தான்.

கந்தோஜி இறந்த சிறிது காலத்திற்குள் அவருடைய இனத்தாரில் சிலருக்கும் அவரது மனைவிக்கும் சிற்சில விஷயங்களில் விவாதமேற்பட்டது. அதனால், அவள் அவர்களுடன் வசிப்பது தனக்குத் தகாதென்று மனத்திலுன்னி முலஹரியைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு புக்ககத்தை விட்டுப் புறப்பட்டு இலோடிரவாய் நாராயணஜி என்னும் தன் சகோதரனிருந்த கான்தேஷ் (Khandesh)

நாட்டைச் சேர்ந்த தலந்தா (Talandah) கிராமத்தை நாடிச் சென்றாள். நாராயணஜீ சிறிது சம்பத்துடையவன்.

புருஷனைப் பறிகொடுத்துத் துயரம் மிகுந்தவளாய் மூலஹரியுடன் தன்னை நாடி வந்த தன் சகோதரியைக் கண்டதும் நாராயணஜீ போலி நாகரிக மிக்க இக்கலிகாலத்தில் சண்டாளத்துவம் நிறைந்த சகோதரரைப் போலல்லாமல் மிக்க பரிவுடன் முகத்தில் புன்னகை தவழ இன்சொல்லுரைத்து அவளை வரவேற்றான். 'அம்மா, நீ பூர்வ வினைப்பயன் காரணமாக உன் கணவனை இழந்தாய்; ஆயினும், பாதகமில்லை. நான் உயிர் பெற்றிருக்கும் வரையில் உனக்கும் உன்னரும் புதல்வனும் மூலஹரிக்கும் யாதொரு குறைவும் நேரிடாது. நீ எதற்கும் அஞ்ச வேண்டுவதில்லை.' என்று தேற்றினான்.

அவள் அவ்வினிய மொழிகளைச் செவியிலேற்றதும்,

'இழந்தமணி புற்றர வெய்தியதென லானாள் :
பழந்தன மிழந்தன படைத்தவரை யொத்தாள் :
குழந்தையை யுயிர்த்தமல டிக்குவமை கொண்டாள் :
உழந்தவிழி பெற்றதோ ருயிர்ப்பொறையு மொத்தாள்.'

அவள் அத்தினத்தை நற்றினமாகக் கொண்டு மூலஹரியின் முன்னேற்றத்தின்பொருட்டு நாராயணஜீ வீட்டில் தங்கியிருந்தாள். மூலஹரியும் தன் மாமன் சொல்லை அமிர்த மெனப் பாவித்து நடந்து வந்தான். அதனால், அவன் அச்சிறுவன்மீது அளப்பரிய அன்பு பூண்டொழுகினான். மூலஹரி விருத்தியடைவதற்காக மிக்க முயற்சி எடுத்துக் கொண்ட நாராயணஜீ ஒருநாள் அவனைத் தன்னருகில் உட்கார வைத்துக் கொண்டு,

'பிள்ளாய், உபாத்தியாயர் உனக்குக் கல்வியில் நாட்டமில்லை என்று கூறுகின்றனரே அது வாஸ்தவந்தானா?

'உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயு மனந்திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே'

என்பதன் உண்மையை நீ யறியாமல் போனதென்ன? உந்தை எளிய நிலையிலிருந்தும் தமது கல்வியின் மேம்பாட்டாலன்றோ சிறந்து விளங்கினர். அவருக்குப் பிள்ளையாய்ப் பிறந்த உனக்குக் 'கல்விமீது வாஞ்சை இல்லாமற் போவதற்குக் காரணம் யாதோ, அது எனக்குத் தெரியச் சொல்' என்று வினவினான்.

மூலஹரி:—மாமா, நான் 'கற்றறிவில்லா வுடம்பு தனக்குப் பாழ்' என்பதை அறிந்துள்ளேன்; படிக்கவும் பிழையற எழுதவும் சிறந்த நூல்களின் நன்பொருளை உணரவும் சக்தியுடையவனா யிருக்கிறேன். இனி நான் படிப்பதேன். இப்போது காலமாறுதலுக்கேற்றவாறு வில்வித்தை, யானையேற்றம் குதிரையேற்றம் முதலியவற்றில் எனக்கு நாட்டம் ஏற்பட்டிருக்கிறது; நான் அவ்வித்தைகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

நாராயணஜீ:—நீ உன் விருப்பம்போல் செய்யலாம். அவ்விருப்பத்தால் நீ நன்மையடையக் கூடுமானால் நான்

அதைத் தடுக்கமாட்டேன். அவ்விதம் தடுப்பதும் புத்தியின்மையே யாகும். ஒவ்வொரு மனிதனும் தன் எண்ணத்துக்கு எஜமானன். தனது பழக்க ஒழுக்கங்களை அவ்வப்போது திருத்திக்கொள்ளும் சக்தி வாய்ந்தவன். ஆதலால், நீ இன்று முதற்கொண்டு உனக்கிஷ்டமான வித்தைகளைக் கற்று விருத்தியடையலாம்.

முலஹரி தன் மாமனுடைய சிறந்த குணத்தை மெச்சி மகிழ்ச்சியடைந்தான். அவன் அன்று முதல் தலந்தானிலிருந்த மிக்க பெயர்பெற்ற ஓர் ஆசிரியரை யடுத்து அவரிடம் வில் வித்தை, யானை யேற்றம், குதிரை யேற்றம் முதலிய வித்தைகளைக் கற்று, அவற்றில் கை தேர்ந்து விளங்கினன்.

ஏழு வருஷங்கள் ஓடி மறைந்தன. ஒருநாள், அதாவது 1706-ஆம் வருஷம் ஜூன் மீ 10உ முலஹரி ராவ் தன் பிராயமுள்ள சில சிறுவர்களுடன் கூடிக்கொண்டு வீட்டுக்கருகிலிருந்த ஒரு புல்லடர்ந்த வெளியில் நெடுநேரம் விளையாடியவண்ண மிருந்தான். அப்போது களங்கமற்ற ஆகாயத்திலிருந்த கதிரவன் உஷ்ணமிகுந்த தன் கதிர்களைப் பூமியின் மீது எங்கும் பரப்பினன்.

'மண்வழி வந்து பிலநு ழைந்து வரைவழிந்து நீரையளா
யெண்வழி வந்து நின்ற போக்கி நிலையு கப்பிவந்துமேல்
விண்வழி வந்து பரிதி வெங்க ரங்கள் யாவையும்
கண்வழி வந்த புன்மை விக கான லேங்கு மானதே'

அது சமயம், விளையாடிக்கொண்டிருந்த முலஹரி அயர்ச்சியடைந்தான். அவ்வயர்ச்சி நீங்க அவன் அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தடியில் படுத்து நித்திரை போயினன். அவனுடன் ஆடிக்கொண்டிருந்த சிறுவர் அனைவரும் அவனைத்தனியே விடுத்துத் தத்தம் இல்லம்

கட்டேகினர். இயற்கை தேவி அவ்விடத்தில் அவனுக்கு உற்ற துணையாயிருந்தாள்.

சுமார் ஒருமணிநேரஞ் சென்றது. அத்தருணம், யாதோ அலுவல் நிமித்தம் அடுத்த கிராமத்துக்குச் சென்றிருந்த நாராயணஜீ அவ்வழியே வந்தான். வந்தவன் இலைகள் படர்ந்து குளிர்ந்த நிழலைத்தந்த ஆலமரத்தடியில் முலஹரி ராவ் தனியே அயர்ந்து நித்திரை செய்வதையும் தேஜஸ் மிகுந்த அவன் முகத்துக் கருகே சர்ப்பமொன்று படம்விரித்து ஆடிக்கொண்டிருப்பதையும் கண்ணுற்று, அச்சிறுவன் அருகிற் சென்றால் அச் சர்ப்பம் அவனைக்கோபத்தால் தீண்டிவிடுமோ என்றஞ்சி அவ்வாலமரத்திற்குச் சிறிது தூரத்தே அசையாது நின்று கடவுளைத் துதித்தான். சகோதரியின் புதல்வன் மீது அத்தகைய அன்பு வைத்திருக்கும் நாராயணஜீயைப் போன்றவர்களை இக்கலியுகத்தில் காண்பது அரிதே யென்னலாம்.

சிலநிமிஷங்கள் சென்றன. இதுகாறும் முலஹரியின் முகத்திற்கு நேரே படம் விரித்தாடிக்கொண்டிருந்த சர்ப்பம் திடீரென்று மறைந்தது. அஃது அவ்விதம் மறைந்து போனதைக்கண்ட நாராயணஜீ பெரிதும் ஆச்சரிய மடைந்தான். தான் கண்டது கனவோ என்றும் சந்தேகப்பட்டான். அக்காட்சி முலஹரிராவின் உன்னத பதவியை முன்னதாகத் தெரிவிக்கும் அடையாள மென்றுணர்ந்த நாராயணஜீ சந்தோஷ சாகரத்தில் அழுந்தினன். அந்நிகழ்ச்சியை எவருக்கும் எக்காரணம் பற்றியாகிலும் தெரிவிக்கலாகாதென்று தன் மனத்தில் நினைத்துக்கொண்டான்.

இந்நிகழ்ச்சி ஒன்றையுமறியாது தன்னை மறந்து துயின்றுகொண்டிருந்த மல்ஹாரியை அணுகி, நாராயணஜீ அவனைத்தட்டி எழுப்பினன். உடல் முழுவதும் வியர்வையால் மூடப்பெற்றிருந்த அச்சிறுவன் திடுக்கிட்டெழுந்து தன்னெதிரில் நாராயணஜீ நிற்பதைக்கண்டு பயத்தால் யாதொன்றும் பேச வாயெழாமல் பூமியை நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தான்.

மல்ஹாரி தன்னுத்தரவின்றி வீட்டைவிட்டு அங்கு வந்து விளையாடிக்கொண்டிருந்ததற்காக அவனைக் கடிந்துரைக்க மனமில்லாத நாராயணஜீ மெல்லியகுரலால், 'மல்ஹாரி, நீ உச்சி வேளையில் தனியே இங்குவந்து விளையாடுதல் கூடாது. இதை உன் தாயார் அறிந்தால் உன்னை மிகவும் கோபித்துக் கொள்வாள். கங்கோஜியின் குல விளக்கனைய உனக்கு யாதாவது தீங்கு சம்பவிப்பதைப்பார்க்க எங்கள் மனம் சகிக்காது. ஆகையால், நீ வில்வித்தை கற்கும் வேளை தவிர ஒழிந்த வேளையில் வீட்டிலே தங்கியிரு. வெளியிற் போய் இங்குமங்கும் அலையாதே.' என்று புத்திமதிகூறி அச்சிறுவனைத் தன் இல்லத்திற்கு அழைத்தேகினன்.

தன் தந்தைக்குப்பின் தனக்குத் துணையாய் இருந்து வந்த நாராயணஜீயின் சொல்லை மல்ஹாரி மீறி நடக்கவில்லை; அவ்விளம் பிராயத்தில் அவனிடம் அடக்கம், பொறுமை ஆகிய நற்குணங்களைக் கண்டறிந்த அவன் மாமன் அவன்மீது அளவு கடந்த ஆசை வைத்து விட்டான். நரைதிரை மிகுந்து தான் தளர்ந்த காலத்தில் மல்ஹாரி தனக்குதவி செய்ய முன் வருவான் என்று நம்பினன்.

அத்தியாயம்—4.

மல்ஹாரியின் மனோதிடம்.

'உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மை யுடைத்தே யுலகறியப்
பால்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கால்முளையே போலுங் கரி'—நீதிநெறி விளக்கம்.

'ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்'—திருக்குறள்.

1709-ஆம் ஆண்டு பிறந்தது. மல்ஹாரிக்கும் பதினைந்து பிராயமாயிற்று. அவன் அஸ்திர சஸ்திரப் பயிற்சியில் மிக்க தேர்ச்சி யடைந்தான். அதனால் அவனுடைய வில்லாசிரியர் அகமகிழ்ந்தார்; அவன் புத்தியின் நுட்பத்தை மெச்சினர்; அவனால் தமக்கு அழியாப் புகழ் வரும் என்னும் பூரண நம்பிக்கை அவருக்கிருந்தது. அந்நம்பிக்கை வீண்போகவில்லை என்பது போகப் போகத் தெரியவரும்.

அக்காலத்திலிருந்த சாமானிய மனிதரைக் காட்டிலும் மல்ஹாரி கல்வி கேள்விகளிலும் மேம்பாடுற்று விளங்கினன்.

மல்ஹாரியின் முகம் எவரையும் வசீகரிக்கத் தக்கது. அவன் தேகம் கட்டமைந்து விளங்கிற்று. அவனை யொத்த வாலிபர் அவனுடன் மல்யுத்தம் செய்ய அஞ்சுவர். அவனுக்குத் தைரியம் அதிகம்; எதையுந்

துணிந்து செய்யவல்லவன். ஆயினும் அவன் எளியவர்
மீதும் பிராணிகள் மீதும் இரக்கமுடையவன்.

'வென்றியும் விறலும் விழுத்தகு வித்தையு
மொன்றிய நன்பு முக்கழ முயற்சியு
மொழுக்க நனித்த வுயர்வு மிழுக்கா
வமைச்சி னமைதியு மணியு மறனுஞ்
சிறப்புழிச் சிறத்தலுஞ் சிறந்த வாற்றலும்'

பொருந்திய முலஹரி இவ்வுலகில் ஜனித்தது உண்டு
உறங்கி உயிர் விடுதற்கன்று; யாதோ ஒரு பெரிய காரி
யம் செய்வதற்கே என்று அவன் முகத்தின் தேஜஸ் புல
ப்படுத்திற் றென்னலாம்.

நமது இந்திய மாதாவின் இருகண்களை நிகர்க்கும்
பாரத இராமாயண இதிகாசங்களில் அவன் அறியாத
விஷயங்கள் இல்லை. பாரத வீரரில் சிறந்து விளங்கிய
அர்ச்சுனனை, தேவர்கோன் மதலையை, அவன் வெகுவாய்ப்
புகழ்ந்து பேசுவது வழக்கம். இக்கலியுகத்தில் வீரத்தி
லுஞ் சத்தியந்தவறாத நெறியிலும் அர்ச்சுனனுக்கு இணை
யாய் இருக்கவேண்டுமென்று ஓரே நிர்ணயஞ் செய்து
கொண்டான். அந்தநிர்ணயஞ் சித்திபெறுவதற்கான
முயற்சி செய்ய அவன் பின்வாங்கவேயில்லை.

ஜீவியக்கடலை நிர்ணயமாகிய படகிலேறி விடாமுய
ற்சி என்னும் சுங்கான் உதவியாற் கடந்து நாம் கைக்
கொண்ட காரியமென்னும் துறைமுகத்தை வெகு சுலப
மாய் அடையலாம். அதுசமயம் இடையூறுகளாகிய
சுழற்காற்று நம்மை யொன்றுஞ் செய்யாது. 'முயற்சி
யுடையார் இகழ்ச்சி யடையார்' அன்றோ!

ஓர் அரிய பெரிய விஷயத்தைச் சாதிக்கவேண்டும்

என்னும் மனவலிமையும் அதற்கேற்ற முயற்சியும்
ஒன்றுசேர்ந்து இந்நிலவுலகில் அநேக மாறுதல்களையுண்
டாக்கி யிருக்கின்றன என்பதை எவரே மறுக்க வல்
லார்! மனமுண்டானால் மார்க்கமுண்டு (Where there
is a will there is a way). ஒரு காரியத்தைச் செய்து
முடிக்க நிர்ணயிப்பவன் அந்நிர்ணய உதவியால் தனக்கு
நேரிடும் தடைகள் அனைத்தையுங் கடந்து அக்காரியத்
தைச் சாதிப்பான் என்பதற்கு ஐயமில்லை. பிரான்ஸ
(France) தேசத்தில் நெப்போலியன் போனபார்ட்
(Napolean Buonaparte) காலத்தில் அநேக பெரிய
மனிதர்கள் இருந்தும் அவர்களில் ஒருவராகிலும் அவ
னைப்போல் ஐரோப்பாவின் (Europe) சரித்திரத்தை மாற்
றுவதற்கான வல்லமை வாய்ந்தவர்களா யிருக்கவில்லை.
அதற்குக் காரணம், நெப்போலியன் அவர்களைக் காட்டி
லும் பன்மடங்கு மனவலிமையும் விடாமுயற்சியும்
உடையவனாயிருந்தான் என்பதே. உரங்குன்றாத நிர்
ணயம் அதிக அதிசயம் பயக்கவல்லதென்னும் உண்மை
யை அவனுடைய ஜீவிய சரித்திரத்தினால் நாம் சந்தே
கமறத் தெரிந்துகொள்ளலாம். அவன் தன் தேகபலம்
மனோபலம் முழுவதையும் தானெடுத்துக்கொண்ட விஷ
யத்தில் செலுத்தினான். 'அசாத்தியமென்னுமொழி
பேதைகளின் நிகண்டில் (Dictionary) காணலாம்' என்று
கூறிய அவனை மேனாட்டரசர் அநேகர் தத்தம் கீழடங்
கிய குடிகளுடன் போற்றிப் புகழ்ந்தது ஆச்சரியப்படத்
தக்க விஷயமன்றன்றோ! மெய்வருத்தம் பாராமல் மிக
வும் வருந்தி உழைத்தவர்களில் அவன் ஒருவனாவான்.
அவன் வீணே யொழிந்திருந்த நேரமில்லை.

உரங்குன்றாத நிர்ணயத்துக்கும் கல்விவன்மைக்கும் சம்பந்தமேயில்லை. எழுத்து வாசனையறியாத நிரக்ஷர குக்ஷிகள் அநேகர் சூர்ய சந்திரர் உள்ளவரையில் அழியாப் பெரும்புகழடைவதற்குரிய அரிய பெரிய விஷயங்கள் பலவற்றைச்செய்து சாதித்திருப்பதை நாம் சரித்திர வாயிலாக அறிகிறோம். இறந்தும் இறவாத அக்பர், சிவாஜி, ஹைதர் அலி, ரஞ்சித்சிங் முதலிய வீரசிகாமணிகள் எழுதவும் படிக்கவும் சக்தியற்றவர்களாயிருந்தும் தாங்கள் எடுத்துக்கொண்ட காரியங்களைத் தொடுத்து முடித்திருப்பது பொய்யல்லவே.

முலஹரியும் தன் நிர்ணயத்தின்படி அக்காலத்திய முறைமையை யொட்டிப் பழம்பெறப்பெற் செய்த தவத்தாலும் இடைவிடா முயற்சியாலும் விற்படை, யானையேற்றம், குதிரையேற்றம், மல்யுத்தம் முதலியவற்றில் கண்ணுங் கருத்துமாயிருந்து எவரும் மெச்சிப் பேசத்தகுந்த திறமை வாய்ந்து விளங்கினான். அதுவேயுமன்றி அவன் கனவிலும் நனவிலும் பார்த்தனை மறக்கவேயில்லை.

1710ஆம் ஆண்டு முலஹரிக்குப் பதினாறு பிராயம் பூர்த்தியான பிறகு, அவன் வாளாவிருத்தல் நன்றன்று என்றுணர்ந்த நாராயணஜீ அவனை ஒருதினம் தன்னருகில் அழைத்து, 'அப்பா, முலஹரி, உனக்கிப்போது பதினாறு வயது நிறைந்தது. இனி நீ சும்மா விருப்பது குலத்துக்கே ஈனமாகும். உன்னுடைய புத்தி நுட்பமும் பராக்கிரமமும் உலகோருக்கு நன்கு புலப்படவேண்டிய இக்காலத்தில் நீ உனது நிலைமைக்கேற்ற உத்தியோகத்தில் அமரவேண்டும். அது விஷயத்தில் நான் வருந்தி

உழைக்கிறேன். உனக்குக் கடவுள் துணையிருப்பார். உன் விருப்பமென்ன?' என்றான்.

முலஹரி:—மாமா, நான் உம்முடைய இஷ்டப்படிக்கு நடக்கச் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் என் விஷயத்தில் எடுத்துக்கொண்ட சிரமத்திற்காக நான் என்னுயிரைக் கொடுத்தாலும் ஈடாகாது.

நாராயணஜீ:—சரி, நீ இன்றுமாலை என்னுடன் புறப்படுவாயாக. நான் உன்னைப்பற்றி என் எஜமானரிடம் பேசவேண்டும்.

முலஹரி:—அப்படியே மாமா, உமது வார்த்தைக்கும் தடையுண்டோ?

அன்று மாலை சூரியன் அஸ்தமிக்க இரண்டு நாழிகையிருந்தது. நாராயணஜீ முலஹரியை அழைத்துக்கொண்டு தலந்தா கிராமத்தை விட்டுப் புறப்பட்டான். முலஹரியின் தாயார் தன் மகனை ஆசீர்வதித்து வழிகூட்டி யனுப்பினாள். 'முலஹரி உன்னத பதவியடைவான்' என்று கங்கோஜி இறக்குந்தருணத்தில் கூறிய வார்த்தைகள் அவள் ஞாபகத்துக்கு வந்தன. அவள் தன் புதல்வன் அப்பதவி பெறும்வரையில் தான் உயிருடன் இருப்பது நிச்சயமில்லையே என்று ஏங்கினாள். ஏதேதோ நினைத்துப் பெருமூச் செறிந்தாள். பலவித எண்ணங்கள் அவள் மனத்துள் புகுந்தன.

தலந்தாவை விட்டுப்போன நாராயணஜீயும் முலஹரியும் வடதிசை நோக்கி நடந்தனர். யாதொரு சலிப்புமின்றி இருவரும் ஒன்பது கல் கடந்தனர். சூரியன் அஸ்தமித்தனன். நாற்றிசையும் இருள்பரவ ஆரம்பித்தது. பறவைகளின் ஆரவாரம் அடங்கிற்று. எங்கும்

ஓசை அவிந்தது. அவர்கள் இருட்டில் நடப்பது கூடாது என்று பரிதாபங் கொண்டவனே போல் சந்திரன் தனதனவென்று நீலநிற ஆகாயத்தில் அவ்விருளைக்கிழித்த வண்ணம் வெகு உன்னதமாய்த் தோன்றினான். அவன் தன்னொளி வெள்ளத்தில் உலகமுழுவதும் மூழ்கிப் பொலிவுற்று விளங்கிற்று.

அத்தருணம் நாராயணஜீ, 'மூலஹரி, இன்னும் அரை நாழிகைக்குள் நாம் நாடிச் செல்லுமிடத்தை அடைவோம்.' என்றான்.

மூலஹரி :—மாமா, இன்றைத்தினம் என்னவோ ஒருவித ஆநந்தம் எனக்குண்டாயிருக்கிறது.

நாராயணஜீ :—யாவும் நன்மைக்கே என்று நினைக்கிறேன். என் எஜமானர் உன்னைத் தம்மிடம் உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்வார். அவ்வுத்தியோகத்திலிருந்து நீ உன் முற்சியால் நற்பதவி யடைவாய்.

இவ்விதம் சம்பாஷித்த வண்ணம் இருவரும் வழி நடந்தனர். அவர்களுக்கெதிரே சிறிது தூரத்தில் ஒரு குன்றும் அக்குன்றின் மீது ஒரு கோட்டையும் கண்ணுற்ற மூலஹரி நாராயணஜீயை நோக்கி, 'மாமா, இக்கோட்டை யார்க்கு உரியது?' என்று வினவினான்.

நாராயணஜீ :—அதுதான் நாம் நாடிவந்த இடம். அங்கு என் எஜமானர் சர்தார் கதம் பந்தே வசித்து வருகிறார். இன்னும் சிறிது நேரத்தில் நாம் அவரைக்காணலாம்.

மூலஹரி :—மாமா, அவரைப் பார்ப்பதற்கு முன்னரே அவரிடம் எனக்கொரு பற்று உண்டாயிருக்கிறது.

அதற்குக் காரணம் இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

நாராயணஜீ :—அவருக்கும் உன்னிடம் பற்று ஏற்படும் என்பதற்கு அஃது அறிகுறி என்று நினைக்கிறேன். நீ அவரிடம் அனுவலாக அமைநேரிடில் அவர் மனங்கோணாமல் நடந்து கொள்ளவேண்டும் என்பதை நான் உனக்கிப்போது வற்புறுத்துகிறேன். தாழ்மையும் அடக்கமும் உயர்வைக் கொடுக்கும் என்று நீ அறிவாயல்லவா? 'அடக்கம் அமரருள் உய்க்கும்'

என்று உரையாடிக்கொண்டு அவ்விருவரும் அக்குன்றின் அடிவாரத்தை யடைந்தனர். நடந்துவந்த அயர்வு நீங்க அவர்கள் சிறிது போழ்து அங்குத் தங்கினர். சில நிமிஷங்கள் சென்றன. பிறகு இருவரும் அங்கு வெட்டப் பெற்றிருந்த கற்படிகளின் வழியே குன்றின் மீதேறினர். நாராயணஜீ வழிகாட்ட மூலஹரி பின் சென்றான். கொஞ்ச நேரத்தில் கோட்டையை அணுகிய நாராயணஜீ, அதற்கருகில் வாளேந்திய கையுடன் உலாவிக்கொண்டிருந்த வாயிற் காப்பாளனை நோக்கி, 'ரகுநாத்,—எஜமானர் என்ன செய்கிறார்?' என்றான்.

அவ்வாயிற்காப்பாளன் நாராயணஜீயின் குரலைக் கேட்ட மாத்திரத்தில் மிக்க வணக்கத்துடன் உடல் குனிந்து வந்தனமளித்து, 'மஹாராஜ்! அவர் இப்போதுதான் போஜன மருந்தி, முகமலர்ச்சியுடன் தமது ஹாலில் அமர்ந்திருக்கிறார். அவருடன் வேறெவருமிலர். அவரைத் தாங்கள் காண்பதற்கேற்ற சமயம் இதுவே.' என்றான்.

அக்ஷிப்ரமே, நாராயணஜீ முலஹரியுடன் கோட் டையுள் நுழைந்தான். இருவரும் உட்புறம் வெகு தூரம் நடந்து சென்றனர். அக்கோட்டையுள் தமக் கென அமைத்துக்கொண்ட ஒரு பெரிய ஹாலில் (Hall) மிக்க களிப்புடன் பாடலொன்று பாடிய வண்ணமாகச் சர்தார் கதம் பந்தே தனியே உட்கார்ந்திருந்தார். அவ ரைக் கண்ட நாராயணஜீயும் முலஹரியும் வெகு மரி யாதையுடன் வணங்கி நின்றார்கள்.

சர்தார் கதம் பந்தே:—'நாராயணஜீ, தாங்களும் தங்களுடன் வந்திருக்கும் வாலிபரும் இதோ இவ்வாச னங்களில் அமருங்கள்' என்று கூறி, அவர்கள் அடக்க ஒடுக்கமாய் உட்கார்ந்த பிறகு, 'ஏது இவ்வளவு தூரம்? அதுவும் இந்நேரத்தில்? இவ்வாலிபர் யாவர்?' என்று வினவினர்.

நாராயணஜீ:—மஹாராஜ், அடியேன் தங்களை நாடி வந்திருக்கிறேன். இவன் என் சகோதரியின் புதல்வன். இளம் பிராயத்திலேயே இவன் தன் தந்தையை இழந் தான். இதுவரையில் நான் கடவுள் அருளாலும் தங் கள் கிருபையாலும் இவனைக் காப்பாற்றி வந்தேன். முலஹரி என்பது இவன் பெயர். வில்வித்தை பாண யேற்றம், குதிரை யேற்றம் முதலிய வித்தைகளில் இவனுக்குச் சிறிது பயிற்சியுண்டு.

சர்தார் கதம் பந்தே அந்த ஹாலில் எரிந்து கொண் டிருந்த விளக்கொளியில் முலஹரியின் நெடிய உருவத் தையும் உரம்பெற்ற உடலையும் முகத் தெளிவையும் கூர்ந்து கவனித்தார். அவனைக் கண்டதும் அவருக்கு அவன்மீது அன்புண்டாயிற்று. முலஹரியும் கண்ணி

மையாமல் அவரையே உன்னிப்பாய்ப் பார்த்துக்கொண் டிருந்தான்.

இக் காட்சியைக் கண்ட நாராயணஜியின் உள்ளம் களிப்பிற் றளும்பிற்று. முலஹரி அதிர்ஷ்டசாலியென் றெண்ணினான். முலஹரி ஆலமரத்தடியில் நித்திரை செய் துகொண்டிருந்தபோது நிகழ்ந்த சம்பவம் நாராயணஜி யின் மனக் கண்ணெதிரே தோன்றிற்று. சிறிது நேரம் அம்மூவரும் மௌனஞ் சாதித்தனர்.

சர்தார் கதம் பந்தே:—நாராயணஜீ, எக்காரணம் பற்றி என்னை நாடினீர்?

நாராயணஜீ:—மஹாராஜ், இவ்விளம் சிறுவனைத் தங்களிடம் உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்ள வேண்டு கிறேன். தாங்கள் அருள் புரிந்தால் அடியேன் கஷ்டம் சிறிது தீரும். முலஹரியும் எனக்குப் பிற்காலம் ஒரு வர் உதவியின்றிப் பிழைத்துப் போவான்.

சர்தார் கதம் பந்தே:—'சரி' என்றார்.

அவர் வேறொன்றும் பேசவில்லை. அவருடைய அனுமதியின்பேரில் அவ்விருவரும் அக்கோட்டையுள் அன்றிரவு தங்கினர். மறுநாள் பொழுது புலர்வதற் குள், முலஹரியை அவர் தமது குதிரைப் படை வீரரில் ஒருவனாக அமர்த்திக்கொண்டார் என்னும் வதந்தி அக் கோட்டை முழுவதும் பரவிற்று. அநேக மஹாராஷ்டிர வீரர் முலஹரியைச் சூழ்ந்தனர்.

பொழுது விடிந்தது. பகலவன் கீழ்த்திசையில் செந் நிறத் தழலை வாய்ந்து தன்னைப்பார்ப்பவர் கண்கள் கூசும் படி வெகு உக்கிரமாய்த் தோன்றினான். சித்திரா தேவி யின் மடியிற் றுயின்ற மாந்தர் அனைவரும் துயில் நீத்தெ

சூழ்ந்து தத்தம் அலுவலை நாடிச் சென்றனர். இரவு முழுவதும் யாதொரு அரவமின்றி அமைதலாயிருந்த உலக முழுவதும் ஒல்லென ஒலித்தது.

நித்திரை நீத்துத் தமது காலைக்கடன்களை முடித்துக்கொண்ட சர்தார் கதம் பந்தே, நாராயணஜீயையும் முலஹரியையும் தம்முன் வரவழைத்து, நாராயணஜீயைப் பார்த்து, 'இன்று முதல் முலஹரி என்னுடைய குதிரைப்படை வீரரில் ஒருவனாயினன்.' என்றுரைத்து முலஹரியை நோக்கி, 'முலஹரி, நான் உனக்கு மனமுவந்தளித்த உத்தியோகத்தைக் காப்பாற்றிக் கொள்வாயாக' என்றார்.

நாராயணஜீயும் முலஹரியும் தலைவணங்கி நின்றனர். அவ்விருவரும் அளப்பரிய மகிழ்ச்சியடைந்தனர். அத்தருணம் அவ்விருவரைச் சூழ்ந்து நின்ற மகாராட்டிய வீரர் அனைவரும் கரகோஷம் செய்தனர். அன்றைத் தினம் கோட்டையுள் பெரிய விருந்து நடந்தது.

நாராயணஜீ மூலமாய் முலஹரிக்கு உத்தியோகம் கிடைத்த விஷயத்தை அறிந்த அவன் தாயார் சந்தோஷமடைந்தாள். ஆயினும், அவன் பிரிவாற்றாமையால் அவள் பெரிதும் வருந்தினள்.

* * *

குதிரைப்படைவீரரில் ஒருவனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற அவ்விளங்காளை அன்று முதல் சர்தார் கதம் பந்தேவின் மனங் கோணாமல் நடக்கத் தலைப்பட்டு அவர் தனக்கிட்ட கட்டளையை மிக்க களிப்புடன் நிறைவே

ற்றி வந்தான். அவன் புரிந்த வீரதீரச் செயல்கள் அளவற்றன. அச்செயல்கள், சர்தார் கதம் பந்தே முலஹரியின் மீது வைத்திருந்த அன்பை வளர்த்தன.

முதன்முதல் முலஹரி தன் எஜமானன் உத்தரவின் பேரில் நைஸாம் (Nizam) என்பவனிடம் யுத்தம் புரிந்து தன் வீரத்தை வெளிப்படுத்தினான். நைஸாமின் தண்டத் தலைவன் வயதிலும் பலத்திலும் யுத்தப்பயிற்சியிலும் முலஹரியைவிடப் பன்மடங்கு மேம்பட்டிருந்தும் அவ்வாலிபனைத் தோல்வியுறச் செய்ய இயலாதவனாய்த் தயங்கினான். தயங்கி நின்ற அம்மகம்மதிய தளகர்த்தனை முலஹரி தன் கைவாளுக்கு இரையாக்கினன்.

அத்துணை வீரமும் கைவன்மையும் பொருந்திய அவ்வாலிபவீரன் மேன்மையுற்றுப் பொலிவதற்குத் தடையுமுண்டோ? முலஹரியின் வீரச்செயலைக் கேள்வியுற்ற அன்றைத்தினமே சர்தார் அவனுக்கு ஒரு பொற்பதக்கம் பரிசு அளித்தார். வீரனை வீரனே புகழ்வானென்பது உண்மையாயிற்று. பொற்பதக்க வெகுமதி பெற்ற முலஹரி நாளுக்கு நாள் மேன்மையும் ஊக்கமும் மிகுந்தவனாயினன்.

அவ்வருஷமே நாராயணஜீ, தன் அரும் புதல்வி கௌதமி பாய் என்பவளை 'வில்லாண்மையினால் வெங்கருப்பு வில்லோன் தனக்கே நிகரெனப் பல்லோர் புகழும்' முலஹரிக்கு மன்றல் வினை முடித்து மட்டில்லா மகிழ்ச்சியடைந்தான்.

சதிபதிகள் இருவரும் மிக்க ஒற்றுமையுடன் தம்முன் யாதொரு மாறுபாடுமின்றி வாழ்ந்து வருவதைத் தன் கண்ணாரக் கண்ட சில ஆண்டுகளுக்குப் பிறகு முலஹரியின் தாயார் இம்மண்ணுலக வாழ்வை நீத்தாள்.

அத்தியாயம் 5.

முலஹரியின் உயர் பதவி.

'தீயன வல்ல செயினுந் திறல் வேந்தர்
காய்வன செய்தொழுகார் கற்றறிந்தார்—காயும்
புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கி லதுபோ
வலிமுன்னர் வைப்பாரு மில்.'—பழமொழி.

சமயோசித புத்தியும், கைவன்மையும், அடக்கமும் ஒருங்கே அமையப்பெற்ற முலஹரி நாளுக்குநாள் மேன்மை பெற்று விளங்கினான். நாலைந்து வருஷங்களுக்குள் அவன் கீர்த்தி நாடெங்கும் பரவிற்று. வீர லக்ஷுமியின் அன்பிற்குரியவன் எவராயினும் மெச்சத்தகுந்தவன் என்பது முலஹரியிடம் உண்மையாயிற்று. இமயமலை முதல் கன்னியாகுமரிவரையில் அவனைப்புகழ்ந்து பேசாதவர் ஒருவருமிலர். வெவ்வேறு நாடுகளிலிருந்தும் வெகு தூரத்திலிருந்தும் அநேகர் அவனைக் காண வந்தனர். மகம்மதியரும் இந்துக்களும் ஒருங்கு கூடி அவன் நெடுநாள் உயிருடனிருக்கக் கடவுளை நோக்கிப் பிரார்த்தித்தனரெனில், அவனுடைய சிறப்பு சொல்லாமலே விளங்குமன்றோ!

அதுசமயம், ஸாஹு மன்னனுக்குப் பிரதம மந்திரியாக, அதாவது பேஷ்வாவாக, இருந்தவன் பாஜீ ராவ் (1720-40) அவன் மொகல் ராஜ்யம் முழுமையையும் தன் கைவசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்னும் நோக்கமுடையவன். அந்நோக்கத்திற்கேற்ப அவனும் மேலே கூறியபடி யுத்தப்பயிற்சி பெற்றிருந்தவன்.

சர்தார் கதம் பந்தேயின் குதிரைப்படை வீரரில் ஒருவனாயமர்ந்து அநேக வீரச் செயல்கள் புரிந்த முலஹரியைப்பற்றி அப்பேஷ்வா கேள்விப்பட்டிருந்தான். ஒரு நாள் பாஜீராவ் தன்னுடைய நண்பனொருவனிடம் மகாராஷ்டியரின் வீரத்தன்மையைக் குறித்து உரையாடிக்கொண்டிருக்கையில் அந்நண்பன், 'முலஹரி...... ...' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான். அத்தருணம் பாஜீராவ் இடைமடக்கி, 'நண்ப! இக்காலத்தில் முலஹரியை நிகர்ப்பவர் எவருமிலர் என்று நான் நிச்சயமாய்க் கூறுவேன். என்னே அவன் தைரியம்! வீரத்தில் அவன் கலியுக அர்ச்சுனனென்பது மிகையாகாது. அவன் கைவன்மையை என்னென்றுரைப்பது! அவன் கையிற் சிக்கிய எவனும் உயிருடன் தப்பிப் போனதில்லை. வீரருக்குள் திலகமனைய அவன் மகாராஷ்டியரின் முன்னேற்றத்தின்பொருட்டு இவ்வுலகில் ஜனித்தவன் என்று நான் சொல்லத் துணிவேன்' என்று கூறினான். இக்கூற்றினின்றும் அவனுக்கு முலஹரியின் மீது ஏற்பட்டுள்ள அபிப்பிராயம் இத்தன்மைத்து என்று எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

பேஷ்வாக்கள் அனைவரினும் சிறப்புற்று விளங்கிய பாஜீராவ் சிவாஜி மன்னரைப் போல் மகாராஷ்டியரின் முன்னேற்றத்தைக் கருத்துட் கொண்டவனாதலால் அக்கருத்தைச் சரிவர நிறைவேற்றுதற் பொருட்டு மகாராஷ்டிய வாலிபரில் மதிநுட்பமும் மனோதிடமும் கட்டமைந்த தேகமும் பொருந்தின வர்களையே தனக்குச் சேவை செய்யத் தேர்ந்தெடுத்தான். முலஹரியை எவ்

விதத்திலாயினும் தன் இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்ளப் பெரிதும் முயன்றான்.

ஒருநாள் அப்பீஷ்வா, சர்தார் கதம் பந்தேவை வெகு மரியாதையுடன் பூனா (Poona) விலிருந்த அவனுடைய அரண்மனைக்கு வரவழைத்து உபசரித்தான். சர்தாரின் மனத்தைக் களிப்பித்தற்கு அவன் ஒரு பெரிய விருந்தளித்தான். அவ்விருந்திற்கு ஸாஹூ உட்பட்ட அநேக பெரிய பிரபுக்கள் விஜயஞ் செய்தார்கள்.

விருந்து முடிந்தது. விருந்துக்கு வந்தவர்கள் அனைவரும் மிக மகிழ்வுடன் பீஷ்வாவின் உத்தரவு பெற்றுத் தத்தம் இருப்பிடங்களுக்கு ஏகினர். அவர்களை அனுப்பிவிட்டு அப்பீஷ்வா சர்தார் கதம் பந்தேவை அணுகி, 'சர்தார், முலஹரி முன்னுக்கு வரவேண்டியவன். அவனுடைய வல்லமை உலகோ அறியத்தக்கது. அத்தகையோன் உம்மிடம் குதிரைப் படை வீரரில் ஒருவனாயிருந்து, நிர்மானுஷ்யமான கானகத்தில் மலரும் நறுமணமுள்ள மலரே போல், பயனற்றவனாய்ப் போவதில் உமக்கு வரும் பயனென்ன? அவனையொத்த வாலிபர் பதின்மர் என் இராணுவத்தில் இருப்பின் மொகலாயரின் கொட்டம் அடங்கும்; இந்துக்களும் இந்து மதமும் தலையெடுத்தோங்குவதில் சந்தேகமில்லை. ஆகலால், தாங்கள் என்னுடைய விருப்பத்துக்குத் தடை சொல்லாமல் அவனை நாளைத்தினமே என்னிடம் அனுப்பக் கோருகிறேன்.' என்றான்.

சர்தார் கதம் பந்தே:—'அப்படியே, மஹாராஜ்!' றார்.

அவர் வேறென்ன செய்யமுடியும்? பீஷ்வாவின் வார்த்தையை மீறி நடப்பவர் கதி அதோகதி என்று அவர் நன்கு அறிந்திருந்தார்.

பிறகு அவ்விருவரும் பற்பல விஷயங்களைப் பற்றி நெடுநேரம் பேசிக்கொண் டிருந்தனர். பொழுது சாய இரண்டு மூன்று நாழிகை யிருக்கையில், சர்தார் தமது கோட்டைக்குப் போகத் தயாராயினர். அவரைப் பீஷ்வா வழி கூட்டி யனுப்பினான்.

* * *
* * *
* * *

சர்தார் கதம் பந்தே தமது கோட்டையை அடைந்த மறுநாள் முலஹரியைத் தம்மிடம் அழைப்பித்தார்; வெகு வணக்கத்துடனும் புன்னகை தவழும் முகத்துடனும் தமக்கெதிரே தம் உத்தரவின் பேரில் ஓர் ஆசனத்தில் அமர்ந்திருந்த அவ்வாலிபனை நோக்கி, 'முலஹரி, நீ என்னை விட்டுப்பிரியும் சமயம் நெருங்கி யிருக்கிறது. ஆயினும், என்மனம் அதற்கு உடன் படவில்லை.' என்றார். யாதும் பேச வாயெழாது சிறிது போழ்துமௌனஞ் சாதித்தார். அவருக்குத் துன்பம் துறுத்துக்கொண்டு வந்தது. அவரையறியாமல், அவர் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய்ச் சிந்திற்று.

சுத்த வீரரெனப் பெயர் படைத்த அவர் ஒரு பெண் பிள்ளையைப்போல் துக்கிப்பதைக்கண்ட முலஹரி ஆச்சரியமுற்றான். அவனுக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. அவன் அவரைப் பார்த்து வெகு வினயத்துடன், 'மஹாராஜ், அடியேன் தங்களை விட்டுப்பிரிய

நேரிட்டிருப்பதற்குக் காரணம் என்னவோ?—அடியே னுக்கும் தங்களைவிட்டு நீங்க இஷ்டமில்லையே.' என்றான்.

சர்தார் கதம் பந்தே :—குன்றின் மேலிட்ட விளக் கென நாடெங்கும் பரவி யிருக்கும் உன் கீர்த்தியே அதற்குக் காரணமாகும்.

மூலஹரி :—தாங்கள் சொல்வது அடியேனுக்கு விளங்கவில்லையே.

சர்தார் கதம் பந்தே :—சுருங்கக் கூறின், பீஷ்வா பாஜிராவ் உன்னைத் தம்முடைய இராணுவ உத்தியோ கஸ்தரில் ஒருவனாக நியமித்திருக்கிறார்.

மூலஹரி :—அடியேன் சம்மத மின்றியா?—

சர்தார் கதம் பந்தே :—என் சம்மதத்தின் பேரில்; என் சம்மதத்திற்கும் உன் சம்மதத்திற்கும் வேற்றுமை யுண்டோ?—மேலும், எவரையும் அடக்கியாளும் நிலை மையிலிருக்கும் பாஜிராவ் அவ்விதம் விரும்பினால் நான் அவர் விருப்பத்திற்குத் தடை சொல்லக் கூடுமோ.

மூலஹரி :—மஹராஜ், தங்கள் வார்த்தைக்குக் குறுக்கே பேச அடியேனுக்கு இஷ்டமில்லை. ஆயினும், அடியேன் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

சர்தார் கதம் பந்தே :—அதென்ன?

மூலஹரி :—ஒருவர் இஷ்டத்திற்கு மற்றொருவர் இசைய வேண்டுமென்பது கட்டாய மல்லவே. மனித னாய்ப்பிறந்த ஒவ்வொருவனும் தன்னிஷ்டம் போல் நடக் கத் தகுந்தவன். இது தாங்கள் அறியாத விஷயமன்று. பீஷ்வாவின் இஷ்டத்திற்குத் தாங்கள் இசைவதும் இசையாதிருப்பதும் தங்களுடைய மனோசக்தியைப் பொறுத்தது. தாங்கள் அவர் இஷ்டத்திற்கு விரோத தமாய் நடப்பின் அவர் தங்களை என்ன செய்யக்கூடும்?

சர்தார் கதம் பந்தே :— மூலஹரி, 'இளங்கன்று பயமறியாது' என்பது உன்னிடம் உண்மையாயிற்று. இந்தியா முழுவதும், இமயமலைமுதல் கன்னியாகுமரி வரையில், பீஷ்வாவின் பெயரைச் சொல்லின் நடுநடுங்கு கிறதே. சிற்சில சமயங்களில் மொகலாயரும் அவர் உத விலை நாடுகின்றனரெனில் அவருடைய சக்தி இத்தன் மைத்தென்று நீ நன்கு தெரிந்துகொள்ளலாம். சேனா பலமும் கைவன்மையும், உரங்குன்றாத நிர்ணயமும், புத்தி சாதுர்யமும் உலகப்பிரசித்தியும் ஒருங்கே அமை யப்பெற்ற அவரை நான் விரோதித்துக்கொண்டால் என் கதி என்ன வாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே யன்றோ!—

மூலஹரி:—மஹராஜ்!—அடியேன் தங்கள் அடிமை. தாங்கள் இடும் கட்டளையை அடியேன் நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சர்தார் கதம் பந்தே :—எனக்கும் உனக்கும் ஏற் பட்டிருக்கும் வேற்றுமையே பீஷ்வாவுக்கும் எனக்கும் இருக்கிறது. ஆதலால் நான் அவர் இஷ்டத்திற்கு இசைய வேண்டியவனாயிருக்கிறேன். நீ காலந்தாழ்க்காமல் இன் றைத்தினமே பூனா (Poona)வுக்குப் புறப்பட்டுச் செல். உனக்குத் துணைவனாக நீ உன் நண்பன் மாதவராவை அழைத்துக்கொண்டு போகலாம். நீ பூனாவில் பீஷ்வா வைக்கண்டு நான் உன்னை அனுப்பியதாக அவருக்குத் தெரிவித்து, அவருத்தரவின்படி நடக்கச் சித்தமாயிரு.

அவ்விதம் செய்யின் நீ பல நன்மைகளை அடைவாய் என்பது நிச்சயம்.

'நவில்தோறு மினிய ஞானம் போலப்
பயில்தோறு மினியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதோ றுள்ளுதோ றுள்ள மின்புறம்
பிரிவுறு துன்ப மெம்மாட் டெய்த'

நீ சுகமே பூனாவுக்குச் செல்வாயாக.

மூலஹரி:—மஹராஜ், அவ்விதமே செய்கிறேன்.

*　　　*　　　*
*　　　*　　　*
*　　　*　　　*

அன்றுமாலை மூலஹரியும் மாதவனும் குதிரை இவர்ந்து வெகு கம்பீரத்துடன் பூனாவை நோக்கிப் புறப்பட்டனர். அவர்கள் ஏறியிருந்த குதிரைகள் இரண்டும் உத்தம லக்ஷணங்கள் பொருந்தி விளங்கின. அவைகள்,

"நெய்த்திடு மாந்தளிர் நிறத்த நாவின
வைத்திடு தலம்புக லுயர்ந்த வார்ந்துநே
நொத்திடு மெயிற்றின வுரமுங் கண்டமும்
பைத்திடு மாரப்படம் போன்ற பாடலம்."

இருவரும் காடு மலை ஆறுகளைக் காற்றினும் கடுகிக் கடந்து சென்று வெகு விரைவில், (அதாவது இரண்டு தினத்தில்) பூனா (Poona) நகரையடைந்தனர். மூலஹரியும் அவன் துணைவனும் பூனாவை அணுகிய வுடன் தாங்கள் ஏறியிருந்த குதிரைகளினின்றிழிந்து அவ்வழிக் கொண்டு செல்வோரை நோக்கி, 'ஐயன்மீர், நமது பீஷ்வா இருக்குமிடம் யாது?' என்று வினவினர்.

அவர்கள் அவ்விருவரைக் கூர்ந்து கவனித்து வெகு ஆச்சரியத்துடன், 'பீஷ்வாவின் இருப்பிடம் உங்களுக்குத் தெரியாதது எங்களுக்கு வியப்பாயிருக்கிறது! மகாராட்டியனாய்ப் பிறந்திருப்பவன் எந்நாட்டிலிருந்த போதிலும் அவர் இருப்பிடத்தை அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசிகம். இந்துமதமும் இந்துக்களும் மொகலாய வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகாவண்ணம் தடுத்து நிற்கும் மகாவீரனன்றோ அவர்!' என்று கூறி அப்பீஷ்வாவின் இருப்பிடத்தைக் குறிப்பால் தெரிவித்துவிட்டுத் தத்தம் வழியே யேகினர்.

அவ்வழிப்போக்கர் தெரிவித்தக் குறிப்பைப் பற்றிச் சென்ற மூலஹரியும் மாதவனும் சில நிமிஷங்களில் பீஷ்வாவின் அரண்மனையை யணுகி, அங்கிருந்த வாயிற் காப்பாளனிடம் தாங்கள் பீஷ்வாவை நாடிவந்ததைத் தெரிவித்து நின்றார்கள்.

அவ்வாயிற் காப்பாளன் ஒரு கணமும் தாழ்க்காமல் அரண்மனையுட் சென்று அதைச்சேர்ந்த பூங்காவனத்தில் பொழுது போக்கின் நிமித்தம் உலாவிக் கொண்டிருந்த பாஜிராவிடம் வாலிபர் இருவர் வந்திருக்கும் செய்தியை வெகு விநயத்துடன் தெரிவித்தான்.

அவ்வாலிபரில் ஒருவன் மூலஹரியாயிருக்கலாம் என்று யூகித்த நமது பீஷ்வா அவ்வாயிற் காப்பாளனை நோக்கி, 'ஏட, இக்கணமே அவ்விருவரையும் என்முன் அழைத்துக்கொண்டுவா' என்று ஆஞ்ஞாபித்தான். வாயிற் காப்பாளன் அவ்வாணையைச் சிரமேற் கொண்டு, ஓடோடியுஞ் சென்று, அரண்மனையின் வெளிப் புறத்தில் நின்று கொண்டிருந்த இருவரையும் அழைத்துக் கொண்டு உட்

புகுந்தான். உள் நுழைந்த முலஹரியும் அவன் நண்பனும் மட்டில்லா மகிழ்ச்சி யடைந்தார்கள். அந்தத் திவ்விய மாளிகையின் அலங்கரிப்பைக் காணக் காண அவர்கள் உடலம் புளகித்தது. அவர்கள் இந்திரலோகத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டார்கள்.

சிறிது நேரத்திற் கெல்லாம், முலஹரியும் மாதவனும் புஷ்பங்களின் பரிமளம் நாற்றிசையும் பரவப் பெற்றிருந்ததும் மனோக்கிய மானதுமான உன்னத உத்தியான வனத்தை யடைந்து, அங்கோர் அழகிய மண்டபத்தின் கீழ்ப்பாங்குள்ள இலைக் கொடிப் பந்தரின் கீழே ஒரு சலவைக் கல்லின்மீது அமர்ந்து அவ்விருவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த பாஜிராவைக் கண்டு அவன் பாதத்தில் வீழ்ந்து வணங்கினர்.

பாஜிராவ் கைகுவித்துக்கொண்டு உட்கார்ந்தவண்ணம், வணங்கி எழுந்து நின்ற அவ்விருவீரரையும் பார்த்து, 'நீங்கள் எக்காரணம் பற்றி என்னை நாடி வந்தீர்கள்? உங்களுக்கு என்னால் ஆகவேண்டிய காரியம் யாதோ? தாமதிக்காமல் சொல்லுங்கள்' என்று வினவினர்.

அதற்கு முலஹரி உடனே:—'மஹாராஜ், நான் முலஹரி என்பவன். என் எஜமானர் சர்தார் கதம் பந்தே என்னைத் தங்களிடம் அனுப்பினர். என்ன காரணம் பற்றியோ நான் அறியேன்.' என்று பதில் பகர்ந்தான்.

முலஹரி தான் தான் முலஹரி என்றதும் பீஷ்வா பாஜிராவ் மழைமுகம் கண்ட பயிரே போல் மகிழ்ச்சியுற்றுத் தன்னிலைமையையும் கவனியாமல் சரேலென்றெழுந்து அவ்வாலிபனை ஆசுமுறத் தழுவிக் கொண்டான்.

முலஹரியின் மீது அவனுக்கிருந்த அளவு கடந்த அன்பின் அறிகுறியன்றோ அது!

முலஹரியை நேரிற் கண்டதும் பாஜிராவுக்கு அவன்மீதிருந்த நம்பிக்கை பலப்பட்டது. அவன் எக்காரியத்தையும் எளிதிற் சாதிக்க வல்லவனென்று முகக் குறிப்பால் தெரிந்து கொண்ட பீஷ்வா, அவ்வாலிபனை எவ்விதத்திலாகிலும் தன் வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான்.

பீஷ்வா பாஜிராவ் :—அப்பா, முலஹரி, இன்றைத் தினமுதற்கொண்டு நீ என் இராணுவத்தில் உயர்ந்த உத்தியோகத்தை வகிப்பாய். அதற்காகவே உன்னை நான் இங்கு வரவழைத்தேன்.

முலஹரி :—அடியேன் தங்களிடம் உத்தியோகத்தில் அமர்வது அடியேனது எஜமானருக்குச்சம்மதமோ? அவர் சம்மதிக்காவிடில் அடியேன் ஒன்றுஞ் செய்ய இயலாது. அடியேனை விருத்திக்குக் கொண்டு வந்தவர் அவரே. அடியேன் செய்ந்நன்றி மறவேன்.

'ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கு
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டிற்றே யாயிழை கணவ.'

பீஷ்வா பாஜிராவ், முலஹரிக்குத் தன் எஜமானர் மீதிருந்த அத்தியந்த பக்திக்காக அவனை மிகவும் புகழ்ந்து, 'முலஹரி, சர்தார் கதம் பந்தேயின் விருப்பத்

தைப் பெற்றபிறகுதான் நான் உன்னை இங்கு வரவழைத்தேன்.' என்றான்.

முலஹரி:—மஹாராஜ், அப்படியாயின் சரி. இன்று முதல் அடியேன் தங்கள் அடிமை. இனி அடியேன் தங்கள் உத்திரவின்படி நடப்பேன்.

பீஷ்வா :—' அதிக சந்தோஷம்.' என்று கூறிப் புன்முறுவல் பூத்தான்.

*   *   *

*   *   *

முலஹரியும் மாதவனும் இரண்டொருநாள் பீஷ்வா அரண்மனையில் தங்கினர். முலஹரி ஐந்நூறு குதிரைவீரர்கள் அடங்கிய மஹாராட்டியர் படைக்குத் தலைவனானான். பிறகு மாதவன் தன்னிருப்பிடத்திற்குத் திரும்பினான். முலஹரி உயர்ந்த பதவி யடைந்த விஷயம் நாடெங்கும் பரவிற்று. அச்செய்தியை யறிந்த நமது சர்தார் கதம் பந்தே ஆனந்த சாகரத்தில் மூழ்கினார்; தமது புதல்வனை அந்நிலைமைக்கு வந்ததாக எண்ணி மனம் பூரித்தார்.

அப்போதுதான் நாராயணஜீ சில வருஷங்களுக்கு முன் ஆலமரத்தடியில் தான் கண்ட காட்சியைத் தன் மனைவிக்கும் புதல்விக்கும் தெரிவித்தான். அவர்கள் யாவும் ஈசன் செயல் என்றனர். அது சமயம் தன்னருமைப் புதல்வனின் மேன்மையைக் கண்டு களிக்க முலஹரியின் தாயார் உயிருடன் இல்லாதிருந்த விஷயம் விசனிக்கத்தக்கதன்றோ.

1734-ஆம் ஆண்டிலிருந்து, அதாவது, முலஹரிராவ் பாஜிராவிடம் உத்தியோகத்திலமர்ந்த தினத்திலிருந்து, அவனுக்கு ராஜயோகம் பிறந்ததென்று சொல்லாம். பின் வரும் நிகழ்ச்சிகளே அதற்குச் சாட்சியாகும்.

அத்தியாயம்—6.

முலஹரி ராவ் மேன்மேலுயர்தல்.

' இகழ் விகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்ப-விகல்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை '—நீதிநெறி விளக்கம்.

முன்னத்தியாயத்திற் கூறியபடி பீஷ்வா பாஜிராவ் யுத்தப்பயிற்சி மிகுந்தவனாதலால் அவன் மொகல் ராஜ்யத்தை முன்னமே வீழ் நிலையடைந்துள்ள மொகல் ராஜ்யத்தை நிலைகுலையச் செய்யவேண்டு மென்று தீர்மானித்துக்கொண்டான். ' அடிமரத்தை வெட்டினால் அதன் கிளைகள் தாமாகவே அழிந்துபோகும். அதைப் போல், மொகல் ராஜ்யத்தின் தலைநகரை செய்வது செய்தால் மொகல் ராஜ்யம் இறந்தொழியும் ' என்று அவன் அடிக்கடி சொல்வது வழக்கம்.

ஐதராபாத் (Hyderabad) நவாப் நைஸாமுல்முல்க் பீஷ்வாவின் மஹோன்னத பதவியைக்கண்டு பொறாமையுற்று அவனை எவ்விதத்திலாகிலும் தொலைக்க உத்தேசித்துப் பற்பல யோசனைகள் செய்தான். கோலாப்பூருக்கும் (Kolhapur) சத்தாராவுக்கும் (Sattara) கலகமுண்டாக்கிவிட அவன் செய்த முயற்சி யாதொரு பயனுமில்லாது போயிற்று. அதன்பிறகு, அவன் மஹாராட்டியருக்கும் பிராமணருக்கும் சண்டை மூட்டிவிட்டான். அச்சண்டை முற்றுவதற்கு முன்னே பீஷ்வா தன் புத்தி

சாதுர்யத்தால், மகாராட்டியரைத் தன் வசம் திருப்பிக் கொண்டான்.

தன் சூழ்ச்சியின் பலிக்காமற் போகவே ஸைஸாம், பேஷ்வாவுடன் யுத்தஞ்செய்ய ஒருபலத்த சேனையுடன் புறப்பட்டான். அதையறிந்த பேஷ்வா முலஹரியின் உதவியால் மகாராட்டியச் சேனையைக்கொண்டு அம் மகம்மதியனின் சேனையைச் சூழ்ந்துகொண்டான். தன்னுடைய சேனையை மகாராட்டியர் இவ்விதஞ் சூழ்ந்து கொள்ளுவார்கள் என்று ஸைஸாம் கனவிலும் கருதவில்லை. அதனால், அவன் ஒன்றுஞ் செய்ய முடியாமல் பேஷ்வாவின் நிபந்தனைகளுக்கு உட்பட நேர்ந்தது. வீர லட்சுமிக்கு உகந்த முலஹரியும் அவனைச் சேர்ந்தோரும் வெற்றி பெறுவதில் தடையுண்டோ?

இச்சம்பவத்திற்குச் சில வருஷங்களுக்கு முன்னர் மகாராட்டியர் மொகல் ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்த கூர்ஜர (Guzaret) மாகாணத்தைக் கைப்பற்றியிருந்தனர். அம்மாகாணத்தின் மகாராட்டிய தளகர்த்தன் திரிம்பக் ராவ் (Trimbak Rao) பேஷ்வாவுக்கு அடங்கி நடவாமலும் அவனைக் கூர்ஜரத்தில் வரி வசூலிக்க விடாமலும் இருந்தான். பேஷ்வா பாஜிராவ் அவனுக்கு எவ்வளவோ புத்திமதி கூறினன். அதைக்கேட்காமல் அவன் தன் மனம்போன போக்கெல்லாம் போகத் தலைப்பட்டான். 'கேடுவரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே' என்னும் நமது ஆன்றோர் வாக்கும் பொய்க்குமோ!

அதனால் பேஷ்வா பாஜிராவுக்குக் கோபம் பொங்கி எழும்பிற்று. அவனைத் தருக்கடக்கித் தண்டிக்க எண்ணி

முலஹரியை அழைத்துக்கொண்டு ஒரு பெரிய சேனையுடன் திரிம்பக் ராவை எதிர்த்தான். 1731-ஆம் வருஷம் இருதிறத்தாருக்கும் பரோடா (Baroda)வுக் கருகில் வெகு மும்முரமான யுத்தம் நடந்தது.

'சிலைத்தன தூசி; மலைத்தன யானை;
ஆர்த்தனர் மறவர்; தூர்த்தனர் பல்கணை;
விலங்கின வேல்வாள்; இலங்கின துந்தம்;
விட்டன தோமரம்; பட்டன பரிமா;
துணிந்தன தடக்கை; துணிந்தன குஞ்சரம்;
அற்றன பைந்தலை; இற்றன பல்கொடி
சோர்ந்தன பல்குடர்; வார்ந்தன குருதி;
குழிந்தது போர்க்களம்; எழுந்தது செந்துகள்;
அழிந்தன பூழி; விழுந்தனர் மேலோர்.'

முலஹரி உக்கிராவேசங் கொண்டவனாய்த் தான் ஏறியிருந்த குதிரையை முடுக்கி முன்னேக்கிச் சென்று மெய்காப்பாளர் புடைசூழ நின்ற திரிம்பக் ராவைத் தன் ஈட்டியால் தாக்கிக் கொன்றான். அவன் இறந்ததும் அவனைச் சூழ்ந்து நின்ற வீரர் முலஹரியைக் கொல்ல முயன்றனர். அஞ்சா நெஞ்சு படைத்த முலஹரி தன்னைக் கொல்லவந்த வீரர் அனைவரையும் எமனுலகுக்கு அனுப்பினன். கூர்ஜரம் மறுபடியும் பேஷ்வாவின் கைவசப்பட்டது. அவன் அங்கு அநேக சீர்திருத்தங்கள் செய்தான்.

* * *

* *

* * *

வெற்றி மறஞ் சிறந்த வீரர் 'போது வேண்டுமே [illegible] செய்யும்மருந்து' என்னும் [illegible]

வராய் இருப்பது வெகுதுர்லபம். கூர்ஜ்ஜரத்தைக் கைப்பற்றிய மறுவருஷமே பாஜிராவ் மாளவ நாட்டின்மேல் படையெடுத்துச் செல்ல முலஹரிக்குக் கட்டளையிட்டான். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு முலஹரி தன் குதிரைப்படையுடன் மாளவ (Malwa) நாட்டின் புகுந்தான். அவனைக்கண்ட மாத்திரத்தில் அந்நாட்டில் பெருங் குழப்பமுண்டாயிற்று. அந்நாட்டுச் சேனவீரர் தங்கள் தைரியத்தைக் கைவிடாமல் அக்குழப்பத்தை ஒருவாறு அடக்கி முலஹரியை எதிர்க்கலாயினர். அத்தருணம் முலஹரி தன்னுயிரையும் ஒரு பொருட்டாக மதியாமல், 'போர்க்களத்தில் இறப்பின் வீரசுவர்க்கமுண்டு; வெற்றி பெறின் புகழுண்டு' என்னும் நம்பிக்கையுடையவனாய் எதிர்த்துவந்த வீரரைக் கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்தினன். அக்கடும்போரில், தேரழிந்தவர் அநேகர், தாளழிந்தவர் அநேகர், கையழிந்தவர் அநேகர், தோளழிந்தவர் அநேகர்; போர்க்கள முழுவதும் இரத்த வெள்ளத்தில் முழுகியிருந்தது; அழுகை யொலியே எங்கும் பரவின்றது. முலஹரியும் எஞ்சிநின்ற அவனுடைய சேனைவீரரும் மாளவ நாட்டுக்கோட்டைக்குள் புகுந்து அதைத் தங்கள் வசமாக்கிக்கொண்டனர்.

கூர்ஜ்ஜரமும் (Guzaret) மாளவமும் (Malwa) பேஷ்வா பாஜிராவ் வசம் சிக்கின. ஆயினும், அவன் அவ்விரு நாடுகளிலும் சவுத் (Chauth) என்னும் வரியை வசூலிக்கக் கூடவில்லை. அவ்விஷயத்தில் அவன் செய்த முயற்சிகள் அனைத்தும் பயனற்றவையாயின.

முலஹரி, பேஷ்வா பாஜிராவின் இராணுவத்தில் உத்தியோகம் வகித்த நாள் முதல், மகாராட்டியரின் முன்னேற்றத்தைக் கருத்துட்கொண்டு, எல்லா விஷயங்களிலும் அவன் கட்டளைக்கு மீறி நடவாமல், ஓய்வின்றி உழைத்துவந்தான். பகையரசர் பலரை வென்று வெற்றியடைந்தான். அவ்வெற்றியின் சிறப்பெல்லாம் பேஷ்வாவுக்கு உரித்தாயிற்று.

பேஷ்வா பாஜிராவ், முலஹாராவே தன் புகழ் மிக்கோங்கி வளர்வதற்குக் காரணமாயிருந்து வந்தான் என்பதை உணராதிருக்கவில்லை. அவன் தனக்கு ஒருவர் செய்யும் நன்றியை மறக்கும் இயல்புடையவனல்லன். சுத்தவீரரெனப் புகழ்படைத்த எவரும் செய்ந்நன்றி கொல்லமாட்டார்களென்பது திண்ணமன்றோ! அதனால் முலஹரி தனக்குச் செய்துள்ள உபகாரத்துக்குப் பிரதியுபகாரமாக அவனுடைய குதிரைப்படையின் பாதுகாப்புக்கென்று மாளவ நாட்டில் (Malwa) வளப்பமிகுந்த பன்னிரண்டு ஜில்லாக்களை நமது பாஜிராவ் அவனுக்குப் பரிசிலாக அளித்து அந்த ஜில்லாக்களில் வரி வசூலித்துக்கொள்ள அனுமதியும் தந்தான். நாளடைவில், அப்பன்னிரண்டு ஜில்லாக்களைச் சூழ்ந்திருந்த இதர ஜில்லாக்களும் முலஹரியின் வசப்பட்டன. அவைகளிலிருந்து அவனுக்கு வருஷவாரி வசூலான மொத்த தொகை 75 இலட்சம் என்பர்.

அந்த ஜில்லாக்களின் சுதந்தரமே இந்தூர் (Indore) ராஜ்யத்திற்கு மூலகாரணமாயிருந்தது என்னலாம். அச்சுதந்தரம் அடைந்த பிறகே முலஹரிக்கு ராஜ்யஸ்தாபனத்தின்மீது இச்சை உண்டாயிற்று.

இத்தனை உயர்ந்த பதவியடைந்தும் முலஹரி ராவின் ஊக்கம் குன்றவில்லை. அவன் முன்னிலும் வருந்தி உழைத்தான்; அரிய பெரிய வீரச் செயல்கள் பல புரிந்தான். அவன்மீது பாஜிராவுக்கிருந்த அன்பு தினை தினை விருத்தியடைந்து வந்தது. இறுதியில் பீஷ்வா பாஜிராவ் முலஹரி ராவை மாளவநாட்டுச் சுபேதாராகச் செய்தான்.

அத்தியாயம்—7.

முலஹரியின் குடும்பம்.

'வினைகாத்து வந்த விருந்தோம்பி நின்றான்
மனைவாழ்க்கை நன்று தவத்திற்—புனைகோதை
மெல்லிய னல்லாளு நல்லள் விருந்தோம்பிச்
சொல்லெதிர் சொல்லா ளெனில்.'—அறநெறிச்சாரம்.

முலஹரிராவ் கௌதமிபாயை மணந்த நாள்தொட்டு இம்மண்வாழ்வை நீக்கும்வரையில் அவள்மீது அளவற்ற அன்பு பூண்டொழுகினன். அவளும் அவனைத் தன் தெய்வமெனப் பாவித்தாள். அதுவேயுமன்றி அவள், நாள்தோறும் தன் கணவன் உண்டபின் தான் உண்ணுதலும் அவன் துயின்றபின் தான் துயிலுதலும் அவன் விழித்தெழுமுன் தான் துயில் நீங்கி எழுதலும், அவனோடு யாதொரு வேற்றுமையுமின்றி ஒத்திருத்தலும் அவன் கட்டளைப்படி நடத்தலும் ஆகிய குணவிசேஷங்கள் பொருந்தி விளங்கினள்.

கௌதமிபாய் தன் புருஷனைப் பலவிதங்களிலும் மகிழ்வித்து வந்தாள். அவள் தன்னில்லத்தை நாடிவரும் துறவிகளையும் மற்றப் பெரியோர்களையும் நகை முகங் கொண்டுபசரித்து அவர்களுக்கு அன்னம் படைப்பாள். சிற்சில சமயங்களில் முலஹரி அம்மாது சிரோமணியைக் கோபித்துக் கண்டித்தான்; ஆயினும், அவள் எதிர் வார்த்தை பேசாமல் மௌனமாயிருந்து இதமே பேசி வந்தாள். அவள் அவனுடைய நற்குண நற்செய்கை

களையே பெரிதும் பாராட்டி அவனை மெய்யன்புடன் பூஜித்து வந்தாள். சுருங்கச் சொல்லின், அவள்,

'மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந் துவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் கொண்க னினைப்பறிந் தொழுகு நீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திட லென்று மில்லாள்
பேசுதின் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டு
[வப்பாள்.'

இவ்விதம் இல்லற இன்பம் அனுபவித்துவந்த மூலஹரி ராவ், யாதொருமனக்கலக்கமுமின்றி இதர நாடுகளைக் கைப்பற்றுவதில் தன் கவனத்தைச் செலுத்தி வந்தான். மனக்கலக்க மின்மையே அவன் வெற்றிக்கெல்லாம் காரணமாயிருந்ததென்று உரைப்பது பிழையாகாது.

அக்காலத்திலிருந்த ஸ்திரீகளில் கௌதமிபாய் (Gautami Bai) சிறந்த உத்தமி என்னலாம். புருஷோத்தமருக்கன்றோ நற்பெண்டிர் மனைவியராக வாய்ப்பர். அவள் மூலஹரிக்கு இன்பம்வந்தகாலத்தும் துன்பம் வந்த காலத்தும் அவற்றை அவனோடு சமமாக அனுபவித்து ஒற்றுமையுடன் வாழ்ந்த உத்தமியாவள்.

1631ல் இறந்துபோன தன் இல்லக் கிழத்தி மும்தாஜ் மஹால் (Mumtaj Mahal) என்னும் பேரழகியின் ஞாபகார்த்தம் ஷாஜஹான் பாதுஷா எவரும் கண்டு ஆநந்திக்கத் தகுந்த தாஜ்மஹால் (Taj Mahal) என்னும் உலகப் பிரசித்திபெற்ற ஒரு சிறந்த கட்டடத்தை ஆக்ராவில் (Agra) நிருமித்தான். அப்பாதுஷாவைப் போலவே, மூலஹரிராவும் தன் மனைவியின்மீது இருந்த அன்பின் பெருக்கால் அவள் உயிர் பெற்றிருக்கும்

போதே தன் ஆளுகைக் குட்பட்ட இந்தூர் நாட்டில் கௌதமி புரம் (Gautamipur) என்னும் நகரமொன்று ஸ்தாபித்தான். கௌதமி பாய் தன் சொந்தப் பொருளைக் கொண்டு அந்நகரில் அச்சலேசுவாருக்குக் கோயிலொன்றும் சந்நியாசிகள் வசிப்பதற்கு மடமொன்றும் இன்னும் இதர கட்டடங்களும் சமைத்தாள். கௌதமி பாய் உயிருடன் இருக்கும் வரையில், களவு, சூது, காமம், கொலை முதலிய துர்க்கிருத்தியங்களுக்கு இலக்கானவர்கள் அந்நகருள் அடிவைத்த மாத்திரத்தில் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமேயன்றி யாதொரு தண்டனையும் விதிக்கக்கூடாதென்னும் நிபந்தனையும் ஏற்பட்டிருந்தது. அந்நகருள் சரண் புகுந்த குற்றவாளிகளில் அநேகர் சன்மார்க்க நெறியடைந்தனராம்.

மூலஹரி ராவுக்குத் தன் அன்பிற்கினிய கௌதமி பாய் வயிற்றில் காந்திராவ் (Khande Row) என்னும் புதல்வனொருவன் பிறந்தான். பெற்றோர் இருவரும் அவனைப்போற்றி வளர்த்தார்கள். இவ்வயதிலேயே அவனுக்குச் சிந்தியா குலத்தைச் சேர்ந்த, 'திருவு நிறை கொடுக்குமுருவு கொள் காரிகை' யாம் அஹல்யாபாய் என்னும் மங்கை நல்லாளை மணம் புரிவித்தனர்.

அஹல்யாபாயும் கௌதமிபாயும் தாயும் மகளும் போல் தம்முள் யாதொரு மாறுபாடுமின்றி மிக்க ஒற்றுமையுடன் வாழ்ந்துவந்தார்கள். 'மாமியார் புகழும் மருமகள் இல்லை' என்னும் பழமொழி அவர்கள் விஷயத்தில் பொய்த்துப் போயிற்று.

காந்திராவ் மனைவி அஹல்யாபாய் வயிற்றில் மல்லி

ராவ் என்னும் புதல்வனும் முக்தாபாய் என்னும் புதல்வியும் ஜனித்தனர். தங்கள் புதல்வனுக்குப் பிறந்த இரு குழந்தைகளையும் மல்ஹாரிராவும் கௌதமி பாயும் வெகு பிரியத்துடன் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து வந்தார்கள். 'கடந்த பேரனும் கட்டியரோ மக்கள் மேல் காதல்!'

மூன்றாம் பானிபட் யுத்தம் நடப்பதற்கு ஏழு வருஷங்களுக்கு முன்னர் அதாவது 1754-ஆம் வருஷம் காந்திராவ் தன் தந்தை மல்ஹாரிராவின் கட்டளையின் பேரில் தேக் (Deig) நகரத்துக்குச் சமீபத்திலிருந்த கும்பீர (Kumbhare) நகரை முற்றுகையிடச் சென்றான். ஆணை போன்ற அவ்வாலிபன், தந்த வீரனுடைய மூலஹாரிக்குத் தோன்றிய அவ்விளங்காளை, புகழடைய வேண்டுமென்னும் விருப்பத்தால் தன் காலாட்படை பின்னேவர எதிரியின் கோட்டையை முன்னோக்கிச் சென்றான். பகையரசனின் தளகர்த்தன் அவனைக்கொல்வதற்கு அதுதான் தகுந்த தருணமென்று அரைநொடியும் தாமதியாமல் அவ்வாலிபனை இலக்குவைத்துச் சுட்டான். காந்திராவ் மார்பில் பலத்த காயமடைந்தவனாய் மல்லாந்து வீழ்ந்து அக்கணமே ஆருயிர் துறந்தான்.

காந்திராவ் மார்பில் காயமடைந்து அமர்க்களத்தில் இறந்துபட்ட விஷயத்தைக் கேள்வியுற்ற மல்ஹாரியும் கௌதமிபாயும் துக்க சாகரத்தில் மூழ்கினவராய் மூர்ச்சித்து வீழ்ந்தனர். புத்திர சோகம் சாமான்யமானதல்லவே! வில்லாசிரியராகிய துரோணர் தமது புதல்வன் அசுவத்தாமன் போர்முகத்தில் இறந்துபட்டானென்னும் கொடிய பொய்ம்மொழியைக் கேட்டதும், 'எடுத்த வில்

லுங் கொடியும் வெங்கணையும் வீழ்த்திப் போதினைவர் இறந்தான் போலும் புதல்வன் என்றினைதலின்றி வேறிலார் போல நின்றானன்றோ! அபிமன்யு இறந்தானென்று கேட்டவுடன் அர்ச்சுனன் அமர்க்களத்தில் பித்தனைப்போல் மொழிந்த மொழிகளை மறக்கற்பாலமோ? இராமன் காட்டிற்கு ஏகினான் என்னும் கடுமொழி கேட்டதும் தசரதர் உயிர் துறக்கவில்லையா? இங்கிலாந்து (England) மன்னன் முதலாம் ஹென்றி (Henry I.) என்பவன் தன்னரும் புதல்வன் வில்லியம் (William) கடலில் மூழ்கி மரணமடைந்தான் என்று கேள்விப்பட்ட தினத்திலிருந்து நகைமுகங்கொண்டு இன்புற்றிருந்ததில்லை என்பதும் பொய்யோ!

புருஷனை யிழந்த அஹல்யா பாய் அம்மையார், உளமுருகக் கண்ணீர் சோரக் குழல் சரியக் கோ கோ என்றழுதாள். கணவனைப்பிரிந்து காசினியில் உயிருடனிருக்க இஷ்டப்படாமல் அவனுடன் சகமனஞ்செய்யத் துணிந்தாள். பத்தினிப் பெண்டிர்,

'காதலர் இறப்பின், கனைஎரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன்னுயிர் ஈவர்' அன்றோ!

கௌதமி பாய், துயரக் கடலுள் ஆழ்ந்து கரை காணாமலிருந்த அஹல்யாபாய் அம்மையாரை நோக்கி, 'அம்மா, அஹல்யா! யாவும் விதிப்பயன்.

'ஊழிற் பெருவலி யாவுள?—மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்'

நம்மால் ஆவது ஒன்றுமில்லை. நீ வருந்துதலொழி, கடவுள் அருளால் இவ்வினையில் உனக்கு இருமக்கள்

உதித்தனர். நீயும் உயிர் துறந்தால் இம்மக்களைப் பாது காப்பவர் யார்? நாங்கள் இருவரும் வயோதிக தசை யடைந்துள்ளோம். எங்களைக் காடு வாவா என்று அழைக்கிறது. நாங்கள் இன்னும் வெகுநாள் இருக்கப் போகிறதில்லை. நமக்குப்பிறகு இக்குழந்தைகள் என்ன செய்யும்? இவைகள் தெருவில் நின்று தவிக்க நேரிடுமே!' என்று பின்னாலே வளர்க்கும் பாரம் அவர்மீது விழுந்திருப்பதை அவருக்கு அறிவுறுத்தி அவளை உடன் கட்டை ஏறுவதினின்றும் தடுத்தாள்.

*　　　*　　　*

*　　　*　　　*

அத்தியாயம்—8.

முலஹரியின் முடிவு நாட்கள்.

'கோலையானை மேலோர் துளிவேண்டு குடைக்கீழ்ப்
பலயானை மன்னர் பலிபோந்த வந்தாக்
கலையாகம் போழாக மந்திரமே சாய்ந்தாக்
நிலையாமை சால நிலைபெற்ற தன்றே'—சூளாமணி.

'நெருநலு ளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத் திவ்வுலகு'—திருக்குறள்.

ஆரும் அத்தியாயத்தின் இறுதியில் கூறியவண்ணம் பேஷ்வா பாஜிராவ், முலஹரி ராவுக்கு அவனுடைய குதிரைப்படையின் பாதுகாப்பின் பொருட்டு மன மகிழ்ச்சியுடன் கொடுத்த பன்னிரண்டு ஜில்லாக்கள் இந்தூர் ராஜ்ய ஸ்தாபனத்திற்கு மூலகாரணமாயிருந் தன. அவற்றைக்கொண்டு முலஹரிராவ் இந்தூர் ராஜ்யத்திற்கு அடிகோலினன்.

இவ்விதம் தன் முயற்சியாலும் கடவுள் கிருபை யாலும் பூர்வபுண்ய வசத்தாலும் கௌதமியாயின் அதிர்ஷ் டத்தாலும் மகோன்னத பதவியடைந்த முலஹரி ராவ் தன் பழைய நிலைமையை மறவாமலும் புத்தி மயங்கா மலும் கடைசிவரையில் பாஜிராவுக்குக் கீழ்ப்படிந்து, அவன் தனக்குக் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்து முடித்து வந்தான். அப்பேஷ்வா தனக்குச்செய்த நன்றியை மறவாமையால் அவன் நாளுக்கு நாள் விருத்தி யடைந்து வந்தான்.

முலஹரிராவ் தன்னை நாடிவந்த எவரையும் இனிய சொற்களால் மகிழ்வித்தான். அவன் துன்பத்தால் வருந்திய காலத்தும் கடுஞ்சொல்கூறினனேயில்லை. ஒருமுறை அவனைக்கண்டு அவனுடன் உரையாடும் பாக்கியம் பெற்றவர்கள் அவனைத் தெய்வ அமிச முள்ளவனென்றே போற்றிப் புகழலாயினர். அவனை மறந்தும் தூஷித்தவர் அக்காலத்தில் ஒருவருமிருந்திலர்.

அரச போகம் நுகர்ந்த அச்சமயத்திலும் முலஹரி,

'செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்'

என்னும் பொய்யா மொழியைக் கடைப்பிடித்து அடக்கமுடையவனாயிருந்தான். அவன் இஞ்சித்தும் கர்வம் படைக்கவில்லை. கர்வத்தால் அழிந்துபோனவர்களுடைய சரித்திரங்களை அவன் அடிக்கடி நினைவு கூர்தல் வழக்கம்.

முலஹரிராவ் வீரருட் சிறந்தவன் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. வீரத்தன்மையில் அவனை அக்காலத்தில் நிகர்த்தவர் வெகுசிலரே என்பதற்குப் போர்க்களங்களில் அவனடைந்த ஒப்புவமையற்ற வெற்றிகளே அத்தாட்சியாகும். அவன் இவ்விதம் தன் வாழ்நாள் முழுவதையும் தன்னை எதிர்த்த ஏதிலரைத், 'தென்னிலந் தன்னிலேற்றி யெந்நிலத்தினுந் தன்னாண்மைக் கெதிரிலா' மல் அமர்க்களங்களில் கழித்து வந்ததால், ராஜரிக விஷயத்தில் மாதோஜி சிந்தியா முதலியவர்களைப்போல் தேர்ச்சி பெற்று விளங்கவில்லை என்பது வியப்பன்று.

பீஷ்வா பாஜிராவ் முலஹரியிடம் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான். அவன் முலஹரியுடன் ஆலோசியாமல் ஒரு காரியமும் செய்ததில்லை. சமர்க்களத்தில் சலிப்பின்றி அமர்புரிய வல்லவன் முலஹரி ஒருவனே என்பதை உணர்ந்தனனே பீஷ்வா அவனை அநேகமுறை யுத்தகளங்களுக்கு அனுப்பிவிட்டுத் தன் அரண்மனையில் தங்கிவிட்டான். அவன் சென்றவிடமெல்லாம் வெற்றி முழக்கம் எழும்பிற்றன்றோ!

நைஜாமுல்முல்க் முலஹரியிடஞ் சிக்கி அடைந்த துன்பத்திற்கு அளவேயில்லை. முலஹரி உயிருடன் இருக்கும் வரையில் அம்மகம்மதியன் முயற்சிகள் யாவும் பயனற்றவையாயின. பீஷ்வா பாஜிராவ் இந்துஸ்தானத்தின் (Hindustan) மீது படையெடுத்துச் சென்றபோது முலஹரி ராவ் மகாராட்டிய இராணுவத்தலைமை வகித்து டில்லி நகருக்குச் சுமார் 15 கல் தூரத்திலிருந்த கல்க பவானி (Khalka Bhavani) என்னுமிடத்தில் நடைபெற்ற ஜாத்திரைக்கு இடையூறுண்டாகும்படி அவ்விடத்தைச் சூறையாடினன். அக்கொள்ளையில் மகாராட்டியரிடம் அளவற்ற திரவியம் சிக்கிற்று.

1729-ஆம் ஆண்டு போர்த்துக் கேசியருக்கும் (Portuguese) மகாராட்டியருக்கும் யுத்தம் நேர்ந்தது. போர்த்துக் கேசியர் யுத்தப்பயிற்சியில் மகாராட்டியரைக் காட்டிலும் மேம்பட்டு விளங்கிய போதிலும் முலஹரியைத் தலைவனாக உடைய மகாராட்டியரிடம் அவர்கள் ஒன்றுஞ் செய்ய இயலாதவர்களாயினர். அவர்களுடன் புரிந்த யுத்தத்தில் முலஹரி அதிக பிரக்யாதி பெற்றான்.

டில்லியில் அரசாட்சி செய்துவந்த மொகலாயருடைய

மகம்மதுஷா (1719–48) பீஷ்வா பாஜிராவுக்கு அஞ்சி நடுங்கினன். மகாராட்டியரைத் தனியே எதிர்க்க அவனுக்குச் சக்தியில்லாது போயிற்று. அதனால் அவன் தனக்கு உதவிசெய்ய நைஸாமுல்முல்க் என்பவனை வேண்டிக்கொண்டான். அதன்பேரில் பீஷ்வாவை எவ்விதத்திலாகிலும் அடக்கிவிட வேண்டுமென்னும் அவாமிருந்தவனுயிருந்ததால் நைஸாமுல்முல்க் பாதுஷாவின் வேண்டுகோளுக்கிணங்கி 1738-ஆம் ஆண்டு ஒரு பெரிய சேனையுடன் டில்லி நகருக்கு வந்தான்.

மகாராட்டியருக்கும் மொகலாயருக்கும் பலத்த யுத்தம் நடந்தது. அவ் யுத்தத்தில் மொகலாயர் தோல்வியுற்றோடினர். உடனே நைஸாமுல்முல்க் தன் சேனையில் இறந்தவர்போக எஞ்சி நின்ற வீரரைக் காப்பாற்ற வேண்டுமென்று கருதி, மனக்கொதிப்பு ஒருபுறம் அவனைத் துன்புறுத்துவதையும் பொருட்படுத்தாமல் ஸிராஞ் (Seronj) என்னுமிடத்தில் பீஷ்வாவுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டான். அதன்படி அவன் பாஜிராவுக்கு 50 இலட்சரூபாய் நஷ்டயீடு கொடுத்ததுமன்றி மகம்மதுஷாவிடமிருந்து கூர்ஜ்ஜரம் (Guzaret) மாளவம் (Malwa) ஆகிய இவ்விரு நாடுகளிலும் யாதொரு தடங்கலுமின்றி வரிவசூல் செய்துகொள்வதற்கு அதிகாரம் வாங்கித் தருவதாகவும் வாக்களித்தான்.

அவ்யுத்தத்தில், மகாராட்டிய சேனையை முன்னின்று நடத்திய முலஹரிராவ் வசம் மகம்மதுஷா மனைவியரில் மாலிகா ஜெமானே (Malika Zemanah) என்பவளுக்குச் சொந்தமான சில பொருள்கள் சிக்கின. அவைகளை

முலஹரிராவின் சந்ததியார் வெகு ஜாக்கிரதையுடன் பாதுகாத்து வந்தனர். அப்பொருள்களில் முக்கியமானவை விலையுயர்ந்த முத்துக்களால் ஆகிய வெகு விசித்திர திரையுடைய இரதமும் ஓர் இலட்சம்ரூபாய் பெறுமான கற்கள் பதித்த பொற்சிப்புமே. அவைகள் எவ்வாறாயின, எங்கிருக்கின்றன என்பதை எவருமறிந்திலர்.

அவன் தனக்குப் பிறர் செய்த நன்மையை மறக்கும் சுபாவம் வாய்ந்தவனல்லன். முதன்முதல் தன்னை உத்தியோகத்தில் அமர்த்தியவரும் தன்னுடைய முன்னேற்றத்திற்குக் காரண கர்த்தாவாயிருந்தவருமான ஸர்தார் கதம்பந்தேவைத் தெய்வமென்று பூசித்து வந்தான்.

‘செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்’ என்னும் முதுமொழியைக் கடைபிடித்து அவன் தன்னுடைய நெருங்கிய பந்துக்களுக்கு அநேக சந்தர்ப்பங்களில் உதவி செய்திருக்கிறான். நாராயணஜீ தன் மருமகனால் அடைந்த நன்மைக்கு அளவேயில்லை.

முலஹரி ராவைக் கொடையில் கலியுக கன்னன் என்று கூறலாம். இல்லை என்று தன்னை நாடி வந்தவர்களுக்கு இல்லை என்று கூறாது, தன்னால் இயன்ற அளவில் பொருளுதவி செய்வான். பிறருக்குக் கொடாமல் தனிகனாவதிலும், கொடுத்து வறிஞனாதல் சிறந்தது என்பதவன் கருத்தாகும்.

‘தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்

முண்பன நாழி யுடுப்பன விரண்டே
பிறவு மெல்லா மோரொக் கும்மே
செல்வத்துப் பயனே யீதல்
துய்ப்பே மெனினே தப்புன பலவே'

என்னும் பாடலின் உண்மை அவன் மனத்தில் நன்கு பதிந்திருந்தது. இன்றைக்கும் இந்தூர் நாட்டில் அவனுடைய வள்ளன்மையைப்புகழ்ந்து பேசாதவர் வெகு சிலர்.

இவ்விதம் மூலஹரி ராவின் கீர்த்தி வளரவளர அவனுடைய பூஸ்திதியும் வளர்ந்துகொண்டே வந்தது. ஏழைக்குடியானவனுக்குப் புதல்வனாய்ப் பிறந்த மூலஹரி ராவ் உயர்குன்றாத வீர்யத்தாலும் இடைவிடாத முயற்சியாலும் கடவுள் கிருபையாலும் பெரியோர் துணையாலும் 67-ஆம் பிராயத்தில் தட்சிண தேசத்திலிருந்து கங்கா நதி தீரம்வரையில் பரப்புற்றிருந்த நாடுகளுக்கு அதிபதியாயினன்.

1761ஹு ஜனவரிமீ 7உ ஆமத்ஷா அப்தலி இந்துஸ்தானத்தின்மேல் (Hindustan) படையெடுத்து வந்தான். அவனைச்சேர்ந்த ஆப்கானியருக்கும் மகாராட்டியருக்கும் பானிப்பட்டு (Panipet) என்னுமிடத்தில் கடும் போர் நடந்தது. இந்துதேச சரித்திராசிரியர் அதை * மூன்றாம் பானிப்பட்டு யுத்தம் என்பர்.

* இதற்கு முன் பானிப்பட்டில் (Panipet) இரண்டு யுத்தங்கள் நடந்தன.

முதல் யுத்தம்—நடந்த வருஷம் 1526; இருதிறத்தார்—இப்ராஹிம் லோடி, மொகலாய பாபர்; வெற்றியடைந்தவர்—பாபர் (Babar).

இரண்டாம் யுத்தம்—நடந்த வருஷம் 1556; இருதிறத்தார்—ஹிமு, மொகலாய அக்பர்; வெற்றியடைந்தவர்—அக்பர் (Akbar).

அவ்யுத்தத்தில் மகாராட்டியர் பலம் குன்றியது. அத்தருணம், மகாராட்டியரை நடத்திச் சென்ற சிவதாஸ் ராவ், மூலஹரி ராவின் யோசனையின்படி இரண்டு மூன்று நாட்கள் வரையில் யுத்தம் ஆரம்பிக்காதிருந்திருப்பின் மகாராட்டியர்கள் தோல்வியடைந்திருக்கமாட்டார்கள். நம்மிந்திய தேச சரித்திரமும் வேறுவிதமாய் மாறியிருக்கும். 'மாறற் கால மிதாகில் மற்றென் செய்வாம்'.

யுத்த களத்தில் இரத்த வெள்ளம் புரண்டோடிற்று. 'குருதி குரைகடல் போற் பொலிந்தன; குடர்கள் குருதியின்மேல் மிதந்தன'

'கரிகள் கருவிக ளோடு சிதைந்தன;
கழுகு நரியோடு காக முண்டன;
திரைக டிரைமலை யோட தீர்ந்தன;
தீமில குமில மெலாம் விளைந்தவே.'

மகாராஷ்டிரம் முழுதும் அல்லோல கல்லோல மாயிற்று. எங்குப் பார்த்தாலும் கண்ணீரும் கம்பலையுமிருந்தன. மகாராட்டிய சேனாவீரரில் கணக்கற்றவர் மடிந்துபோனதைக் கேள்வியுற்ற பீஷ்வா † பாலாஜி பாஜி ராவ் (1740-1761) மனமுடைந்தவனாய் உயிர் துறந்தான்.

மகாராட்டியரின் முன்னேற்றத்திற்கு ஒரு தடையென வந்த மூன்றாம் பானிப்பட்டு யுத்தத்தில் மகாராட்டியர் சின்ன பின்னமாக்கப்பட்டனர். மகாராட்டியரில் [illegible] அவர்களில் முக்

† இவன் பாஜி ராவ் புதல்வன். அவனுக்குப்பிறகு பீஷ்வாவாக வந்தவன். அவன் [illegible] பிரியமுள்ளவனும் அரசா [illegible].

பெயரானவர்கள் ஜெதாஜி ராவ், விசோஜி ராவ் முதலியோர். இச்சண்டையால் மகாராஷ்டிரம் வீழ்ச்சியடைந்தது.

ஜெதாஜி ராவ், தன் ஆலோசனைப்படி நடக்கப் பிரியப்படாதபடியால் மகாராட்டியர் நிச்சயமாய்த் தோல்வியுறுவர் என்று உணர்ந்த முலஹரி ராவ் அநேக யுத்தகளங்களில் ஆனையைப் போன்று அஞ்சா நெஞ்சுடன் பகைவரை வெட்டி வீழ்த்தி வெற்றித்தருக்குற்று விளங்கிய வீரசிகாமணியாம் முலஹரி ராவ் சண்டையின் ஆரம்பத்திலேயே அமர்க்களத்தை விட்டகன்றான். தன் வார்த்தையைப் பொருட்படுத்தாதவருடன் இருப்பதும் தகுதியன்றென்று அவனுக்குத் தோன்றிற்று.

நல்ல வேளையில் உயிருடன் தப்பிப் பிழைத்த முலஹரி ராவ் தனக்குக் கிடைத்த ஜில்லாக்களை அனைத்தையும் ஒன்று சேர்த்து அவற்றைச் செவ்வனே ஆட்சி செய்யத் தொடங்கினான். அவன் தன் ராஜ்யத்தில் அநேக சீர்திருத்தங்கள் செய்தான்.

மூன்றாம் பானிபட் யுத்தம் முடிந்து ஐந்து வருஷங்களாயின. இவ்வைந்து வருஷகாலமும் முலஹரி ராவ் இந்தூர் ராஜ்யத்தை நீதிநெறி பிறழாது அரசாண்டு வந்தான். அவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஜனங்கள் யாதொரு கலக்கமுமில்லாமல் வெகு சமாதானமாய் வாழ்ந்து வந்தார்கள்.

'விதையை மிசேனக் கலைத்துழுவு மிக்கோலெழுக் [போந்தனும்
பதியேதனைப் பார்த்துழலும் பாழ்நெஞ்சத்துகள் வைதிலு [வேள்
விதழுமுடக் போழியுமதன் மேல்படிய மோன்முடி...

என்பதேபோல் மண்ணிற் பிறந்த ஒவ்வொருவரும் இறந்தொழிவது நிச்சயம். வீரருட் சிறந்த முலஹரி ராவுக்கும் இறுதிக் காலம் நெருங்கிற்று. அவன் தன் வெற்றித் திறமையால் தனக்கு உரிமையாக்கிக்கொண்ட இந்தூர் ராஜ்யத்தை நெடுநாள் ஆளக் கொடுத்து வைக்கவில்லை.

அவன் நெடுநாள் பிணிவாய்ப்பட்டு வருந்தாமல் 1758ஆம் ஆண்டு மேமீ 2உ அலம்பூர் (Alampore) என்னுமிடத்தில் திடீரென்று இறந்துபோனான். அதனால் இந்தூர் ராஜ்யத்தைப்பற்றி அவன் யாதொரு ஏற்பாடும் செய்யக்கூடாது போயிற்று. அப்போது அவனுக்கு வயது ஏறக்குறைய எழுபத்திரண்டென்பர் சரித்திராசிரியர்.

அவனுடைய பிரேதத்தை அலம்பூர் ஜில்லாவுக்குட்பட்டதும் குவாலியர் (Gwalior) நாட்டுக்கு இரண்டுகாத தூரத்திலுள்ளதுமான முலஹரி கஞ்ஜி (Mulharganjee) என்னுமிடத்தில் தகனஞ்செய்தனர். அவனுடைய வீரமும் தீரமும் வள்ளன்மையும் அரசியல் மாண்பும் அன்றோடு ஒழிந்தன. 'முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவில் ஒரு பிடிசாம்பராய் வெந்து மண்ணாவது', பொய்யல்லவே. ஆயினும், அவன் புகழுடம்பு இன்றும் இவ்வுலகில் நிலைபெற்று உலவுகிறது.

இடைப் பகுதி

அஹல்யாபாய் ஜீவிய சரித்திரம்.

அத்தியாயம்—1.

இந்தூர் ராஜ்யம்.

'எந்நாட்டுப் பெருவளமும் எவ்வெவர் கோட்

[பாடுகளும் இயம்ப வல்ல

பொன்னாட்டுப் பொன்செருக்கும் பண்ணைக்குப்

[பணிச் செருக்கும் போக்குமிந்த

நன்னாடு.........................'

இந்தூர் ராஜ்யம் ஏறக்குறைய 9500 சதுர மைல் விஸ்தீரணமுள்ளது. அதற்கு வடக்கில் குவாலியரும் (Gwaliar) தெற்கில் பம்பாய் இராஜதானியைச் சேர்ந்த காந்தேஷ் (Khandesh) நாடும், கிழக்கில் மத்திய மாகாணங்களுக்கு உட்பட்ட (Central Provinces) தீவாஸ் (Dewas), தார் (Dhar) என்னும் நாடுகளும் மேற்கில் பார்வானி (Bharwani) நாடும் சூழ்ந்திருக்கின்றன.

இந்தியாவில் அநேக ராஜ்யங்கள் அவற்றுள் அடங்கிய கிராமங்கள் அல்லது நகரங்களின் பெயரால் வழங்கப்படுகின்றன. அஃதேபோல் இவ்விராஜ்ஜியமும் இந்திரேஷ்வரம் (Indreshwar) அல்லது இந்தூர் (Indore) என்னும் கிராமத்தின் பெயரால் வழங்கப்படலாயிற்று.

இந்தூர் ராஜ்யத்திற்கு மத்தியில் கிழக்கு மேற்கில் விந்திய பர்வதமிருக்கிறது. விந்தியமலைச்சாரலிலும் அம்மலைக்குத் தெற்கிலும் இருப்பது மலைப்பிரதேசம். அதற்கு வடக்கிலிருப்பது பீடபூமி. மலைப்பிரதேசம் 5143 சதுரமைலும் பீடபூமி 4820 சதுரமைலும் விஸ்தீரணமுள்ளவை. பீடபூமியில் சம்பல் (Chambal) காளி சிந்து (Kali Sind) முதலிய ஆறுகளும் மலைப்பிரதேசத்தில் நருமதையும் அதன் உபநதிகளும் பாய்கின்றன. அந்நதிகளால் அழகுபெற விளங்கும் இவ்விராஜ்ஜியம் மிகுந்த வளப்பமுள்ளது.

இவ்விராஜ்ஜியத்தைச் சேர்ந்த காடுகளிலும் மலைமுழைகளிலும் புலி, கரடி, சிறுத்தை, புள்ளிமான் முதலிய வனவிலங்குகள் வாசஞ் செய்கின்றன. மொகலாயர் காலத்தில் அக்காடுகளில் யானைகளும் வசித்து வந்ததாகச் சொல்லுகிறார்கள்.

இதர ராஜ்யங்களில் இருப்பதுபோலவே இந்த ராஜ்யத்திலும் அநேக அழகிய நகரங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவை இந்திரேஷ்வரம் என்னும் இந்தூர், கௌதமிபுரம், மஹேசுவரம் முதலியன.

I இந்திரேஷ்வரம் என்னும் இந்தூர்.

இஃது இந்தூர் ராஜ்யத்தின் தலைநகரம். சரஸ்வதி நதிதீரத்திலுள்ளது. ஐந்து சதுரமைல் விஸ்தீர்ணங் கொண்டது. பம்பாய் நகரத்திற்கும் இதற்கும் ஏறக்குறைய நானூற்றைம்பது மைல் தூரமிருக்கும்.

ஆறும்குளமும் கேணியுங் கிணறும் மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் பூங்காவனங்களும் பொலி

வுற்று விளங்கும் இந்நகர் முதன் முதல் ஒரு குக்கிராமமாயிருந்தது. இந்தூருக்குக் கிழக்கே சுமார் 16மைல் தூரத்திலிருந்த மற்றொரு கிராமத்தினின்று ஜமீன்தார் சிலர் வியாபாரத்துறையில் அதிக ஊதியம் பெறக்கூடிய இடம் இதுவென்றுணர்ந்து அங்குவந்து தங்கினார்கள். அவர்கள் நினைத்தது போலவே இந்தூர்வழியே மகாராட்டியர் போர்க்காலங்களில் போதலும் வருதலுமாயிருந்தால் அங்கே பலத்த வியாபாரம் நடந்து வந்தது. அந்நகரில் அநேக கடைகள் ஏற்பட்டன. அக்கடைகள் அனைத்தும் பலவளங்களும் பற்பலவகையான முத்து பவளங்களும் பிற பொருள்களும் தம்முளடக்கியிருந்தமையால் அவற்றை உலகமுண்ட திருமால் வயிற்றுக்கு ஒப்பிட்டுக் கூறலாகும்.

வியாபார வளத்தால் நாளடைவில் அக்குக்கிராமம் முன்னேற்றப் பொலிவுற்று விளங்கிற்று. அங்கு வியாபாரஞ் செய்துவந்த வணிகர்கள் ஒன்றுகூடித் தமக்கு வந்த ஊதியத்தில் ஒருபாகத்தைக்கொண்டு அவ்விடத்தில் 1741-ஆம் வருஷம் இந்திரேசுவரருக்கென்று ஒருசிறந்த கோயில் சமைத்தார்கள்.

அதையறிந்த இந்தூர் நாட்டரசியாம் அஹல்யாபாய் அம்மையார் தமக்குத் தலைநகராயிருந்த மகேசுவரத்தை விடுத்து வருஷத்தில் அநேக முறை அங்குத் தங்கலாயினர். மகேசுவரத்தினின்றும் அடிக்கடி இந்தூருக்குவருவதால் பணச்செலவு அதிகமாகிறது என்றுணர்ந்த அவ்வம்மையார் இறுதியில் இந்திரேசுவரம் அல்லது இந்தூரைத் தமது தலைநகரமாக்கிக்கொண்டனராம்.

*   *   *

II மஹேசுவரம்.

முதன் முதல் இந்தூர் ராஜ்யத்திற்குப் பிரதான நகரமாயிருந்த மஹேசுவரம், 'விஞ்சையம் பெருமலை நெஞ்சகம் பிளந்து வரும்' நருமதைப் பேரியாற்றின் வடகரையிலுள்ளது. இயற்கைத் தேவியானவள் சிறக்க வீற்றிருக்கும் இடம் இதுவே என்னலாம். பண்டைக் காலத்து, 'மகிஷ்மதி' என்னும் நகரம் இதுவே என்பர் சரித்திரக்காரர். அஹல்யாபாய் அம்மையார் அரசாட்சியின் முற்பகுதியில் இந்நகர் மகோன்னத பதவியிலிருந்தது. அக்காலத்தில் இந்நகரில் ராஜரிக விஷயங்களும் வியாபாரமும் வெகு விமரிசையாய் நடந்தேறி வந்தன. அஹல்யாபாய் அம்மையார் இவ்வழகிய நகரை, அமராவதியும் இதற்கு இணையல்ல என்றுரைக்கத்தக்க இப்புராதன நகரை—விடுத்து இந்தூரைத் தமது தலைநகரமாக்கிக்கொண்டதன் காரணம் இன்னதென்று நன்கு புலப்படவில்லை. மேற்சொன்னபடி பணச்செலவுக்கு அஞ்சி அவர் அவ்விதம் செய்தாரென்பது நம்பக் கூடியதாயில்லை.

இந்நகரில் நருமதைக் கணித்தாக அதிக சித்திர வேலைப்பாடுற்ற அழகிய கோயிலொன்றுளது. அத்திருக்கோயிலுள் ஓர் இலிங்கமும் அந்த இலிங்கத்திற்குப் பின் அஹல்யாபாய் அம்மையாரின் உருவச்சிலையும் இருக்கின்றன.

இந்நகரில் இருக்கும் கட்டடங்களில் அநேகம் கோயில்களேயாகும். அக்காலத்துச் சிற்பிகளின் வேலைத் திறமையைக் கண்களிக்கப் பார்ப்பதற்குரிய இடம்

மஹேசுவரம் என்று சொல்லலாம். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் சென்றும் அக்கோயில்கள் சிதைந்து போகாமல் இப்போது தான் சமைத்தவைகளாகவே தோற்றுகின்றன.

* * *

* * *

III கௌதமி புரம்.

முன்னத்தியாயத்திற் கூறியபடி இந்நகரத்தை முலஹரி தன்மனைவி கௌதமி பாய் மீதுள்ள அன்பின் அறிகுறியாக நிருமித்தான். இது இந்தூர் நகரத்திற்கு வடமேற்கில் சுமார் 30 கல் தூரத்திலிருக்கிறது. இந்நகரில் கௌதமிபாய் தன் சொந்தத் திரவியத்தைக் கொண்டு சிறந்த கோயில்கள் சில சமைத்து அவைகளில் திருப்பணிகள் காலந்தவறாமல் நடத்திவருவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்தாள்; சத்திரம் மடம் முதலியன கட்டுவித்தாள்.

அவள் உயிருடன் இருந்தவரையில் அங்கே கூன், குருடு, செவிடு முதலிய அங்கவீனர்களும், வயோதிகர்களும், பரதேசிகளும் வயிறார உண்டு மகிழ்ந்தார்கள். அந்நகரம் அலைகடலுடுத்த இந்நிலவுலகத்திற்குரிய சத்திரமெனப் பாவிக்கத் தக்கதாயிருந்தது.

இந்நகரைப்பற்றி முன்னத்தியாயத்தில் கூறியிருக்கிறோமாகையில் இனி இங்கு அதிகமாகக் கூறவேண்டியது ஒன்றுமில்லை.

* * *

அத்தியாயம்—2.

இந்தூர் ராஜ்ய உரிமை.

'பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும்
வையன் மின்வடி வல்லன சொல்லிநீ
நுய்யன் மினுயிர் கொன்றுண்டு வாழநாள்
செய்யன் மின்சிறி யாரொடு தீயன
கள்ளன் மின்கள வாயின யாவையுங்
கொல்லன் மின்கொலை கூடி வருமற
மெள்ளன் மின்னில ரென்றெண்ணி யாரையு
நள்ளன் மின்பிறர் பெண்ணொடு நண்ணன்மின்.'

—வளையாபதி.

முதற் பகுதியின் ஏழாம் அத்தியாயத்திற் கூறியபடி, முலஹரிராவ் மகன் காந்திராவுக்கு அஹல்யாபாய் அம்மையார் வயிற்றில் மல்லிராவ் என்னும் புதல்வனும் முக்தாபாய் என்னும் புதல்வியும் பிறந்தனர். முலஹரி ராவ் இறந்த பின்பு, பீஷ்வா மாதவ ராவின் † சிற்றப்பன் ரகோபா தாதா, மல்லி ராவை இந்தூர் ராஜ்யத்திற்கு அரசனாக முடிசூட்டி வைத்தான்.

மல்லி ராவ் குறும்புத்தனம் உள்ளவன். அவனுக்குப் பைத்தியமும் சிறிதிருந்தது. அவன் தாயார் அஹல்யா பாய் அம்மையார் அக்காலத்திய முறைப்படி வைதிக பிராம்மணர்களுக்குத் தானம் வழங்குவது வழக்கம். அவன் அவ்வழக்கத்தை அடியோடு நிறுத்த முயன்றதுமல்லாமல் தானம் பெறுவதற்கு அரண்மனைக்கு

வரும் பிராமணரைப் பலவிதத்திலும் துன்புறுத்தினன். அவ்வம்மையார் அவர்களுக்குக் கொடுக்க வைத்திருக்கும் புதிய வஸ்திரங்களிலும் பாதரக்ஷைகளிலும் தேள் முதலிய விஷ ஜந்துக்களை மறைத்து வைத்து, அவ்விஷ ஜந்துக்கள் அவர்களைத் துன்பத்திற்குள்ளாக்குவதைக்கண்டு கலகலவென்று நகைப்பான். மட்குடங்களில் வெள்ளி நாணயங்களை நிரப்பி அக்குடங்களுள் தேள், பாம்பு முதலியவற்றை எவரும் அறியாமல் விட்டு,

"பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவான் முகத்திற்
[கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரி
[த்து நீட்டி
மல்லலா மகலவோட்டி மானமேன் பதனை வீட்டி
யில்லெலா மீரத்தல்..........."

தொழில் கொண்டு அலைந்து திரியும் ஏழைப்பிராமணர்களை அழைத்து, அக்குடங்களிலிருக்கும் நாணயங்களை வேண்டிய மட்டும் எடுத்துக்கொள்ளும்படி ஆஞ்ஞாபிப்பான். அவன் செய்திருக்கும் சூழ்ச்சியை அறியாத அவ்வேழைகள் சந்தோஷ மிகுதியால் மட்குடங்களில் தத்தம் கைகளை விடுவார்கள். சிலருக்கு நாணயங்கள் அகப்படும்; அவர்கள் அவற்றை எடுத்துக்கொண்டு மல்லிராவை மனமார வாழ்த்திவிட்டுப் போவார்கள். வேறு சிலர் துரதிர்ஷ்ட வசத்தால் தேளால் கொட்டுண்டும் பாம்பால் கடியுண்டும் வருந்திய வண்ணம் அவனைச் சபித்துக்கொண்டே அரண்மனையை விட்டகல்வார்கள். அவர்கள் அவ்விதம் வருந்துவதைக் காண அவன் மனம் சந்துஷ்டியடையும்.

இத்தகைய மல்லிராவ் இந்தூர் ராஜ்யத்தை ஒன்பது திங்கள் வரையில் அரசாண்டு கொண்டிருந்து பின்பு உயிர் துறந்தான். பிராமணர் மீது துவேஷங்கொண்டு தன் தாயாருக்கு விரோதமாய்ப் பல துஷ்கிருத்தியங்கள் செய்துவந்த மல்லிராவை அவன் தாயார் அஹல்யாபாய் அம்மையாரே இரகசியமாகக் கொன்றுவிட்டார் என்று சிலர் கூறுகின்றனர்.

இக்கூற்று உண்மையென்று வலியுறுத்தற்குரிய ஆதாரங்கள் இல. அவ்வம்மையாரின் குணவிசேஷங்களை அவர்கள் நன்கு உணர்ந்திருப்பின் அவ்விதங் கூறத் துணியார். தமது புதல்வன் மல்லிராவ் மீது அளவற்ற அன்புபூண்டொழுகின அவர் அவனைக் கொன்றுவிட்டார் என்று கூற எமது நாவெழவில்லை. மேலும், பதிபக்தியும் தரும சிந்தையும் இறைவனடியில் இடைவிடாத அன்பும் நிறைந்த அவ்வம்மையார் அத்தகைய பாவத் தொழிலைப்புரிய இசைவாரோ?

தீரவிசாரிக்குமளவில், மல்லிராவ் மரணமடைந்ததற்குக்காரணம் வேறென்று புலப்படுகின்றது. மல்லிராவ் மனோபலம் தேகபலம் அற்றவனாயிருந்ததுமன்றிச் சிறிது பைத்தியமும் பிடித்தவனாயிருந்தான். அவன் அரியாசனத்தமர்ந்து ஐந்தாறு திங்கள் சென்றபின், ஒருதினம் இந்தூர் நகரில் பட்டுப்பூவேலை செய்து வயிறு வளர்த்து வந்த வாலிபனொருவன் அரண்மனைப் பணிப்பெண் ஒருத்திமீது அளவிலாக் காதல்கொண்டு அவள் கற்பை அழிக்க முயன்றான் என்னும் பொய்வதந்தி பரவிற்று. மல்லிராவு அவ்வதந்தி உண்மையென நம்பி முன்பின் யோசியாமலும் அவ்விஷயத்தைப்பற்றித் தீரவிசாரியாமலும்

அவ்வாலிபனை வரவழைத்து ஒருமறைவிடத்தில் குத்திக் கொன்றான்.

பாவங்கள் அனைத்திலும் கொடியது கொலைப்பாவமன்றோ? கொலைப்பாவிகள் எண்ணிறந்த வியாதிகளுக்கு இலக்காகிப் பெரிதும் துன்பமடைவார்கள். இறந்த பின்பும் அவர்களுக்குச் சுகமேயில்லை. நரகமே அவர்களுக்குச் சித்திக்கும். சிலநாள் சென்றபின், கொலையுண்டிறந்த வாலிபன் குற்றமற்றவனென்று மல்லிராவுக்குத் தெரிந்தது. அதன்பேரில் அவன் மிக்க மனவருத்தமடைந்தான். அவனுக்கு முன்னமேயிருந்த பைத்தியம் அதிகமாயிற்று. அவன் அதே ஏக்கத்தால் பிணிவாய்ப்பட்டுப் பெரிதும் வருந்தினான்.

தமது ஒரே புதல்வன், தமது குலக்கொழுந்தாம் மல்லிராவ் அவ்விதம் வருந்துவதைக்காண மனஞ்சகியாத அஹல்யாபாய் அம்மையார் அவன் படுக்கையண்டையில், இரவுபகல் ஓய்வின்றி, நித்திரை நீத்து, உணவருந்தாமல் அழுதகண்ணும் சிந்திய மூக்குமாக உட்கார்ந்த வண்ணம் கடவுளை நோக்கித் தியானித்தார்; 'ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! அடியாள்மீது கருணைகூர்ந்து என் குலவிளக்கனைய மல்லிராவ் உடற்பிணி நீங்கி உயிருடனிருக்கச் செய்வது உன் கடனாகும். இவனால் என் கணவன் பெயர் விளங்க அருள் புரிவாய்.' என்று முழுமுதற்கடவுளை வேண்டினார். அநேக பிரார்த்தனைகள் செய்துகொண்டார். ஆயினும் விதி யாரை விட்டது!

'முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்.'

மல்லிராவ் இளம்பிராயத்தில் இம்மண்ணுலக வாழ்வை நீத்தான். அதைக்கண்ட அஹல்யாபாய் அம்மையார் அக்கணமே புத்திரசோகத்தால் மூர்ச்சித்து முகங்குப்புற வீழ்ந்தார். அவர் மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்க ஒரு நாழிகை சென்றது. அழுதார், புரண்டார்; தமது தலையைத் தரையில் மோதிக் கொண்டார். என்ன செய்வார் பாவம்! இறந்தவர் பிழைப்பதில்லை என்பதை உணர்ந்தாரில்லை போலும்!!

என்னே, அவர் தம் புதல்வன்மீது வைத்திருந்த அன்பின்திறம்! பத்துமாதம் சுமந்து தமது 'அங்கமெல்லாம் நொந்து' அவனைப் பெற்றெடுத்த அவ்வம்மையாரோ முலஹரிராவைக் கொலைசெய்யத் துணிந்திருப்பர்! அம்மம்ம! நாம் மறந்தும் அவர்மீது அக்கொலைப் பழியைச் சாற்றலாகுமோ!

* * *

* * *

* * *

மல்லிராவ் அகாலமரண மடைந்த பிறகு இந்தூர் ராஜ்ய உரிமைபெற முலஹரிராவ் கால்வழியிற்றோன்றிய ஆண்பிள்ளைகள் ஒருவருமில்லா தொழிந்தார்கள். அதனால், தமது குடிகளின் வேண்டுகோளின் பேரில் அஹல்யாபாய் அம்மையாரே இந்தூரின் அரியாசனத்து அமர இசைந்தனர்.

அதுசமயம், அவர்மீது அளவு கடந்த அழுக்காறுற்ற, முலஹரி காலத்திலிருந்து திவானாக இருந்து வந்த கங்காதர ஜஸ்வந்த் என்பவன் ரகோபாதாதாவை

யணுகி, 'மஹராஜ்! இந்தூர் ராஜ்ய உரிமை பெறுவதற்கு முலஹரிராவ் வம்சத்தில் ஓர் ஆண்பிள்ளையும் இல்லை; அக்காரணத்தைக்கொண்டு அஹல்யாபாயே இந்தூர் ராஜ்ய உரிமை பெறுவதற்கான முயற்சி செய்து வருகிறாள். பெண்மக்களோ அரசபதவிக்குரியவர்? ஆகலால், தாங்கள் மகாராட்டியச் சிறுவரில் புத்தி கூர்மையும் திடகாத்திரமும் பொருந்திய ஒருவனைச் சுவீகாரம் எடுத்துக்கொள்ள அவளை வற்புறுத்தவேண்டும். அவள் அவ்விதஞ் செய்தாலொழிய இவ்விராஜ்ஜியம் முன்னுக்கு வரவழியில்லை; நாமும் தனிகராவதற்கு ஏதுவில்லை. உள்நாட்டுக் கலகங்கள் ஏற்படும். குடிஜனங்கள் சமாதானமாய் வாழவும் இயலாது' என்று வெகு வணக்கத்துடன் கூறினான். அதுவுமன்றி, அவன் ரகோபாதாதாவுக்கு வேண்டிய மட்டும் திரவியம் கொடுப்பதாகவும் வாக்களித்தான். ரகோபாதா பணப்பேய் பிடித்துந்த முன்பின் யோசியாமல் அன்றைத்தினமே, அஹல்யாபாய் அம்மையாருக்கு நிருபமொன்று பின்வருமாறு வரைந்தனுப்பினான்:—

'அஹல்யா பாய் அம்மையாருக்கு,

உமது ஒரே புதல்வன் மல்லி ராவ் இந்தூர் ராஜ்யத்தை நெடுநாள் ஆளாமல் அகால மரணமடைந்தது தெய்வ சங்கல்பம். அதை நினைத்துக்கொண்டே யிருப்பதால் தாங்கள் அடையும் பலனொன்றுமில்லை. ஆட்சி செய்யத் தகுந்த அரசனின்மையின் இந்தூர் ராஜ்யம் நிலைகெட்டுத் தடுமாறுகிறது. ஆதலால், தாங்கள் காலந்தாழ்க்காமல் சுபதினத்தில் மகாராட்டியச் சிறுவரில்

தங்களுக்கிஷ்டமானவன் ஒருவனைச் சுவீகாரஞ் செய்து கொள்வது அவசியமாகும். அச் சுவீகாரப் புதல்வனே இந்தூர் ராஜ்யத்தை ஆளும் யோக்கியதையுள்ளவன்.

இப்படிக்கு,
ரகோபா தாதா'

அந்நிருபத்தை வாசித்ததும் அஹல்யா பாய் அம்மையார் ரகோபா தாதா தம்மை நிர்ப்பந்திப்பதற்காகப் பெரிதும் வருந்தினார். அவன் அவ்விதம் கட்டாயப்படுத்துவதற்குக் காரண புருஷன் கங்காதர ஜஸ்வந்த் என்பதை உணர்ந்த அவ்வம்மையார், 'ஒன்றொரு பயன்றனை யுதவினோர் மனங் கன்றிட வொருவினை கருதிச்' செய்த அத்துஷ்டனைத் தம்மிடம் அழைப்பித்து, 'ஐயா, தாங்கள் செய்யும் பிரயத்தனம் வீண். ஒரு வேளை, தாங்கள் அம்முயற்சியில் சித்திபெற்றால் தங்களுக்கு வரும் இலாபமென்ன? அது ஹோல்கார் (Holkar) குலத்துக்கே ஈனமென்பதை நரை திரை மிகுந்த தாங்கள் அறியாமற் போனதென்ன? என் அரும் புதல்வன் என் குல விளக்காம் மல்லி ராவ் இறந்தபோதே முலஹரி ராவின் குடும்பத்திற்கு முடிவு ஏற்பட்டது. அதனால், முலஹரிராவின் புதல்வன் காந்தி ராவுக்கு மனைவியும் மல்லி ராவுக்கு அன்னையுமாகிய நானே இவ்விராஜ்ஜிய உரிமையைப் பெறத் தக்கவள். அப்படியிருக்க நான் ஏன் மகாராட்டியச் சிறுவன் ஒருவனைச் சுவீகாரஞ் செய்து கொள்ளவேண்டும். இவ்விஷயத்தை நான் தங்களுக்கு இன்றைத்தினம் தெரிவிக்கிறேன். உமக்குகந்த ரகோபாதாதா ஒரு மனிதன் தானே. அவர் எனக்கென்ன தீங்கு செய்யக்

கூடும்? 'அவனன்றி யோரணுவும் அசையாதென்பது ஆப்தர் மொழியன்றோ!' என்று கூறி அவனைப் போக விடுத்தார்.

அதைச் செவி மடுத்ததும் ரகோபா தாதாவுக்குச் சீற்றமிகுந்தது. அவன் உடனே பெரிய சேனையொன்று தயாரித்தான். அவன் அவ்விதம் செய்வதை ஒற்றர் மூலமாய் அறிந்துகொண்ட அவ்வம்மையார் அச்சம் சிறிதுமின்றி ஒரு தூதுவனை விளித்துப் பின்வரும் விஷயங்களை மத்திய இந்தியாவிலிருந்த (Central India) ரகோபா தாதாவுக்குத் தெரிவிக்க அனுப்பினார் :—

'உலகானுபவ முதிர்ச்சியடைந்துள்ள தாங்கள் என்னைப்போன்ற பேதைமை மிகுந்த பெண்மக்கள் மீது யுத்தம் தொடுப்பது அறநெறியன்று. இவ்விஷயத்தை நான் தங்களுக்கு அறிவுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஆயினும், விருத்தாப்பிய தசையில் தங்களுக்கு ஒருவேளை புத்திமாறுதல் அடைந்திருக்கக் கூடும் என்றெண்ணி இவ்விதஞ் சொல்லத்துணிந்தேன். இவ்வார்த்தைகளைமீறித் தாங்கள் என்னைத் தண்டிக்க முன்வருவீராயின் அதனால் தங்களுக்கு அவமானம் நேரிடுமேயன்றிக் கீர்த்தியொன்றும் வாராது. இது நிச்சயம். வீரர் குலத்தைச் சேர்ந்த நான் பெண்பிள்ளையாயினும் எனக்கும் வீரத்தன்மையுண்டு.'

அஹல்யாபாயின் தூதுவன் சாற்றிய மொழிகளைக் கேட்டதும் ரகோபா தாதா முன்னினும் மிகுந்த சினங்கொண்டான். அவன் நெற்றி நரம்புகள் புடைத்தன, அவனுடைய கண்களில் தீப்பொறி பறந்தன.

'என்னே, அஹல்யாபாயின் கர்வம்! "பெண்புத்தி

பின் புத்தி" என்பது இவளிடம் உண்மையாயிற்று. என்னுடைய நிலைமை இன்னதென்றுணராது இவ்விதம் சொல்லியனுப்பியிருக்கிறாள். இவளுக்கு எவ்விதத்திலாகிலும் புத்தி கற்பிக்க வேண்டும். 'கொட்டினால் தேள், கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சியன்றோ!' இவளுக்கு இத்துணை வீரம் எங்கிருந்து வந்தது? ஆஹா, பேஷ்வாவின் சிற்றப்பனாகிய என்னிடமே இவளுக்கு மரியாதையில்லையே. இவள், பெண்பிள்ளையாகிய இப்பேதை, பிறரை எவ்விதம் மதிப்பாள். நான் இனி அரைக்கணமும் தாமதித்தல் கூடாது. இவளைத் தகுந்தவிதம் சிக்ஷிப்பேன்' என்று தனக்குள்ளே பேசியவண்ணம் எழுந்த ரகோபாதாதா, ஒரு வேலையாளை விளித்து, 'எடா, நீ நமது தளகர்த்தரிடம் சென்று அவரை இங்கு உடனே அழைத்துவா' என்று ஆஞ்ஞாபித்தான்.

* * *

* * *

அஹல்யாபாய் அம்மையாரும் வாளாவிருக்கவில்லை. அவர் தமது உள்ளத்தை ரகோபாதாதாவிற்கு ஒளியாமல் தெரிவித்த பிறகு தாமும் யுத்தத்திற்கு ஆயத்தமாயினர். தாமே தமது சேனையைப் பகைஞருக்கு விரோதமாய் நடத்திச் செல்ல முன் வந்தார். அம்பும் வில்லும் கைக்கொண்டு பட்டத்துயானைமீது ஆரோகணித்தனர். இந்தூர் ராஜ்ய சேனைவீரர் அனைவரும் அவ்வம்மையாரின் தைரியத்தைப் பெரிதும் புகழ்ந்து, அவரைப் பாதுகாக்கும் விஷயத்தில் தங்கள் உயிரையுங் [illegible]க்க நிச்சயித்துப் போருடையணிந்து நின்றனர்.

இஃதிவ்வாறாக, ரகோபாதாதாவின் சேனைவீரர் அவ்

வம்மையாருக்கு விரோதமாக யுத்தஞ் செய்ய இசைய வில்லை. முலஹாரி ராவின் மருமகளை எதிர்க்க அவர்கள் மனந்துணிந்திலர். ரகோபாதாதா, மாதவஜீ சிந்தியா, ஜன்னோஜி பான்ஸலே ஆகிய இருவரையும் துணைக்கு அழைத்தான். அவர்கள் அஹல்யாபாய் அம்மையாருக்கு விரோதமாய் அவனுடன் சேர்ந்து உழைக்க விரும்ப வில்லை.

இவ்விதம், இருதிறத்தாரும் அமர்புரிய யத்தனிக் கையில் பீஷ்வா மாதராவ் (மகாராட்டிய பீஷ்வாக்களின் வமிசாவளியைப் பார்க்க) அவ்விஷயத்தைக் கேள்வியுற் றதும் யுத்தத்தை நிறுத்தும்படி ரகோபா தாதாவுக்குக் கட்டளையிட்டான். யுத்தம் நின்றது. ரகோபாதாதா பங்கமடைந்தான். பீஷ்வாவின் வார்த்தையை மீறி அவன் தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ளும் மனோதிடம் பொருந்தியவனல்லன்.

*　　　*　　　*

*　　　*　　　*

தேச நன்மையே தமது முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த அஹல்யா பாய் அம்மையார், ரகோபா தாதாவின் விஷயங்களைச் சவிஸ்தாரமாய் மாதவ ராவுக் குத்தெரிவித்து, யுத்தத்தை நிறுத்தியதற்காக அவனுக்குத் தமது முழுமனத்தோடு வந்தனை வழிபாடுகள் செய்தார்; வீணே அநேக மகாராட்டிய வீரரின் இரத்தம் சிந்த விருந்ததைத் தடுத்த முழுமுதற் கடவுளைப் போற்றினார். என்னே, அப்போது அவரடைந்த ஆனந்தம்!

*　　　*　　　*

*　　　*　　　*

அத்தியாயம் 3.

அஹல்யா பாய் அரியணை அமர்தல்

“பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந் தன் வாயாற் கெடும்.’

‘மலைநல முள்ளுங் குறவன் பயந்த
வினைநல முள்ளு முழவன் சிறந்தோருவர்
செய்த நன்றுள்ளுவர் சான்றோர் கயந்தன்னை
வைததை யுள்ளி விடும்’.

இச் சந்தர்ப்பத்தில் பீஷ்வா மாதவராவைப் (1761-1772) பற்றிய விஷயங்கள் சிலவற்றைத் தெரிந்து கொள்வது நலம். அவன் யுத்தத்தில் தேர்ந்தவன், மனவன்மை மிக்கவன். நமது சரித்திராரம்ப காலத்தில் அவனுக்கும் அவன் சிற்றப்பன் ரகோபா தாதாவுக்கும் மனோவி கற்பம் ஏற்பட்டிருந்தது. ஏனெனில், ரகோபா தாதா தன் பந்தத்துவத்தையும் பீஷ்வாவின் இளம்பிராயத்தை யுங் கருதி மாதவ ராவை அடக்கியாள ஆவல் கொண் டான். ஆனால், பீஷ்வா மாதவ ராவ் எவருக்கும் அடங் காத ஆண் சிங்கம். பிறருக்கு அடங்கி நடத்தல் கோ ழைத்தனமென்று அவன் பூரணமாய் நம்பியிருந்தான். ரகோப தாதாவோ வெனில், அத்தன்மை வாய்ந்த மாதவ ராவை அடக்க ஆவல் கொண்டானே யொழிய அவனை அடக்கத்தக்க மனவன்மையும் புத்தி சாதுர்யமும் அற் றவனாயிருந்தான்.

ரகோபா தாதாவின் மனோபாவம் இன்னதென்று உணர்ந்து கொண்டபிறகு பீஷ்வா மாதவ ராவ், அவன் வார்த்தைகளைப் பொருட்படுத்துவதில்லை. அது காரணம் பற்றி, ரகோபாதாதா அவனிடம் உத்தியோகஞ் செய்வதை வெறுத்து அவுரங்கபாத் (Aurangabad) என்னுமிடத்திற்குச் சென்று சில காலம் அங்கு வசித்து வந்தான். அங்கு வசித்து வருகையில் அவனுக்கும் நைஸாம் ஆலி என்பவனுக்கும் நட்பு உண்டாயிற்று. ரகோபாதாதா தன் புது நண்பன் உதவியால் மாதவ ராவ் கர்வத்தை அடக்கக் கருதினான். என்னே அவன் மதி இருந்தவாறு! தன் சுயநலத்தைக் கருதி மஹாராஷ்டிரத்தை மகம்மதியனுக்குக் காட்டிக் கொடுக்கத் துணிந்த அவன் மஹா பாபியன்றோ! இந்திய தேசத்திலேயேயன்றி இதர நாடுகளிலும் அவனை யொத்தவர் இகழ்ச்சிக்குரியராவர் என்பது பொய்யல்லவே.

அவன் தான் கருதியவண்ணம் ஒரு நாள் நைஸாம் ஆலியை அணுகி மாதவ ராவ் கர்வத்தை அடக்குவதற்குச் சேனையொன்றனுப்பும்படி வேண்டிக்கொண்டான். மகாராட்டியர் தம்முள் முரண்பட்டு ஒற்றுமை நீங்கினால் அவர்கள் பலம் குறையும் என்றுணர்ந்த அம்மகம்மதியன் காலந் தாழ்க்காமல் ரகோபாதாதாவின் வேண்டுகோட்கு இணங்கி அவனுடன் ஒரு பலத்த சேனையை அனுப்பி வைத்தான்.

ரகோபாதாதா மகம்மதிய சேனையுடன் தன்னை எதிர்க்கவருவதைத் தெரிந்துகொண்ட மாதவ ராவ், 'மகாராட்டியருக்குள்ளே ஒற்றுமை நீங்கினால் அவர்களை எதிரிகள் எளிதில் ஜயிப்பார்கள். இந்திய தேசம், முதன் முதல் இந்து மன்னருக்குள் ஏற்பட்டிருந்த வேற்றுமையாலன்றோ, மகம்மதியர் வசம் சிக்குண்டது' என்று மனத்தினுன்னி, ரகோபாதாதாவின் பாதத்தில் வீழ்ந்து, 'அப்பா, நான் இதுகாறும் தங்களுக்கு இழைத்து வந்த எண்ணிறந்த பிழைகளைப் பொறுப்பீராக!' என்று காலத்திற்கேற்ற கோலம் என்றபடி மன்றாடினான். உண்மையில் மாதவராவுக்கு ரகோபா தாதாவின்மீது மிகுந்த வெறுப்புண்டாயிற்று. அவன் அத்துஷ்டனை எவ்விதத்திலாகிலும் தொலைக்க வழி தேடினான்.

மாதவ ராவ் தன்னுயர்ந்த நிலைமையையும் மறந்து தன் பாதத்தில் வீழ்ந்து வணங்கியதற்குப் பெரிதும் சந்தோஷித்து யுத்தத்தைத் தவிர்த்தான். உள்ளன்பற்ற இருவரும் ஒன்று சேர்ந்தனர். ரகோபா தாதா முன்போலவே பீஷ்வா மாதவ ராவிடம் உத்தியோகத்தில் அமர்ந்தான்.

'நீக்கமறு மிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின வர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லினுமி சிறிது நீங்கிப் பழமை போல்
புல்லினுந் திண்மை நிலைபோம்'

என்னும் ஆன்றோர் கூற்றின்படி முதல் மன வேறுபாடுற்றுப் பிறகு ஒன்று சேர்ந்த அவ்விருவருக்கும் ஒற்றுமை எங்கிருந்து வரும்?

ரகோபா தாதாவின் செய்கைகள் பீஷ்வா மாதவ ராவை மறுபடியும் மனவருத்தத்திற்குள்ளாக்கின. அச்செய்கைகளில், அவன் அஹல்யா பாய்க்கு விரோதமாய் யுத்தஞ் செய்யப் புறப்பட்டது ஒன்றாகும்.

1768-ஆம் வருஷம் ரகோபாவுக்கும் மாதவ ராவுக்கும் சச்சரவு ஏற்பட்டது. தென்றல் முற்றிப் பெருங்காற்றானதுபோல் இருவரும் தத்தம் சேனைகளைக் கொண்டு யுத்தம் புரிந்தனர். கடைசியில், ரகோபா தாதா தோல்வியுற்றுச் சிறைக்கோட்டத் திடப்பெற்றான்.

இவ்விஷயத்தை இதனோடு நிறுத்திவிட்டு நமது சரித்திரத்திற் குரியவற்றைப் பின்பற்றிச் செல்வோம்.

*　　　*　　　*

*　　　*　　　*

*　　　*　　　*

1766-ஆம் வருஷம் அஹல்யா பாய் அம்மையார் யாதொரு தடையுமின்றி இந்தூர் ராஜ்ய உரிமையைப் பெற்றதற்கு அறிகுறியாக ஒரு சுபதினத்தில் ஆன்றோர் ஆசிகூற இன்னிசைக் கருவிகள் முழங்க வெகு விமரிசையுடன் அரியாசனத்தே அமர்ந்தார். குடி ஜனங்கள் அனைவரும் குதூகலித்தனர்.

அவர் சிம்மாசனம் ஏறிய சமயத்தில் அரண்மனையின் பொக்கிஷத்தில் அபரிமிதமான திரவியம் இருப்பதையுணர்ந்தார். அவருடைய ஆஞ்ஞைப்படிப் பிராமணனொருவன் மந்திரம் ஓதிய வண்ணம் துளசிதளங்களைப் பொக்கிஷத்தின் மேல் தூவினான். அக்கிரியை முடிந்த பிறகு,

‘இறைதவிர்ந் திடுகபார் யாண்டோ ரேழ்நிதி
நிறைதரு சாலைதா னீக்கி யாவையும்
முறைகெட வறியவர் முகந்து கொள்கென
அறைபறை என்றன ளரசர் கோமகள்’

சபையோர் அனைவரும் தகுந்த மரியாதை செய்விக்கப் பெற்றனர்; தகுந்த ஏழைகள் சுவர்ணம், பசு,

முதலியன வழங்கப் பெற்றனர். இந்தூர் ராஜ்ய முழுவதும் சந்தோஷ சாகரத்தில் முழுகி நின்றது.

யாவும் முடிந்த பிறகு அவ்வம்மையார் அதுகாறும் தமக்குத் தீங்கிழைத்து வந்த திவான் கங்காதர ஜஸ்வந்தைத் தம்முன் வரவழைத்தார். அவன் உயிருக்கு ஹானி நேரிடுமென்று அநேகர் அஞ்சினர். ‘அந்தோ, பரிதாபம்’ என்றனர் சிலர். ‘முலஹரி ராவின் உப்பைத் தின்று வளர்ந்த அத்துஷ்டன் செய்ந்நன்றி கொன்றதால் மரண தண்டனை விதிக்கத் தகுந்தவன். அவனும் அவனை யொத்தவர்களும் இந்நிலவுலகில் நீடித்திருக்கலாகாது’ என்றனர் வேறு சிலர்.

இவ்விதம் பலர் பலவிதமாய் நினைத்துக்கொண்டிருக்கையில் போக்கிடந் தெரியாதிருந்த திவான் கங்காதர ஜஸ்வந்த், தன்னை அஹல்யா பாய் அம்மையார் அழைக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் திகில் அடைந்தவனாய்க் குனிந்த தலை நிமிராமல் அரசியின் அரண்மனையை அணுகி அங்கோர் அத்தாணி மண்டபத்தில் மந்திரி பிரதானிகள் புடை சூழ வீற்றிருந்த அவ்வம்மையார் பாதத்தில் வீழ்ந்து வணங்கி ‘அபயம், அபயம்’ என்று கூறி எழுந்து நின்றான்.

அஹல்யா பாய் அம்மையார் வெகுவணக்கத்துடன் தலைவணங்கி நின்ற அத்திவானை நோக்கி, ‘ஐயா, பலவிதத்திலும் தாங்கள் எனக்குத் தீங்கிழைக்கக் கருதினீர்; கடவுளோவெனில் உமது எண்ணம் நிறைவேறா வண்ணம் தடுத்து அடியேனை வெகு அன்புடன் இரட்சித்தார். அவர் அருளாலன்றோ நான் இதுவரையில் சுகமாய் இருந்து வருகிறேன். யாவும் ஈசன் செயல்!

ஆதலால், நான் உம்மை நோவதிற் பயனில்லை. தாங்கள் அறியாமையால் எனக்குச் செய்த பிழைகளனைத்தையும் நான் மனமார மன்னித்தேன். உண்ட வீட்டிற்கு இரண்டகஞ் செய்த உம்மை உம்முடைய நெஞ்சே தண்டிக்கும்' என்றார்.

கங்காதர ஜஸ்வந்த் யாதும் பேச நாவெழாது மௌனஞ் சாதித்தான். தான் இராணியாருக் கிழைத்த இடுக்கண்களை அப்போது உணர்ந்தவனே போல் கண்ணீர் மாலை மாலையாய் விடுத்தான். சிலநிமிஷங்கள் சென்றன. * * * * * பிறகு அவன் அவரைப் பார்த்து, 'ஜகமெல்லாம் புகழும் கருணைவாய்ந்த தேவீ! நான் நன்றிகொன்ற கொடும்பாவி என்பதை உணர்ந்துவருந்துகின்றேன். இனி, நான் உமக்கொரு தீங்கும் செய்யத் துணியேன். இது உண்மை.' என்று கூறிச் சிறிது போழ்து தயங்கினான். மறுபடியும் பேச முயன்றான். ஆயினும் வார்த்தைகள் வாயில் வரவில்லை.

அதைக் குறிப்பால் அறிந்து கொண்ட அஹல்யா பாய் அம்மையார் அவனை நோக்கி, 'தாங்கள் கூறவேண்டிய விஷயம் ஏதேனும் உளதோ?' என்று வினவினார்.

கங்காதர ஜஸ்வந்த் :—ஆம், தேவி!

அஹல்யா பாய் :—அவ்விஷயம் யாதோ?

கங்காதர ஜஸ்வந்த் :—'அடியேனை......அடியேனை......' என்று எடுத்த சொல்லைத்தொடுத்து முடிக்கக் கூடாமல் விழித்தான். அவ்விராணியாரை உற்று நோக்கினான்.

அஹல்யா பாய் :—முன்னிருந்த......? என்ன?" என்றார்.

கங்காதர ஜஸ்வந்த் :—முன்னிருந்த......வேலையில்......அமர்த்திக்கொள்ள......அருள் புரியுங்கள்.

அஹல்யா பாய் :—அப்படியே, உமது வேண்டுகோளுக்கு இசைந்தேன்.

'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்'

என்னும் பொய்யா மொழிக்கேற்ப அஹல்யாபாய் அம்மையார் கங்காதர ஜஸ்வந்தை மன்னித்தது மன்றி அவனை முன்னிருந்த அலுவலில் அமர்த்திக்கொள்ளவும் இசைந்த உதாரத்துவத்தைக் கண்ட இந்தூர் நாட்டு ஜனங்கள், 'என்னே, நம்மரசியாரின் பெருந்தன்மை இருந்தவாறு! குடிஜனங்களைத் தமது பிள்ளைகளைவிட மேலாகப் பாவித்துக் காக்கும் இவ்வம்மையார் நீடூழி வாழக் கடவுள் அருள்புரிவாராக!' என்று மனமார வாழ்த்தினார்கள். அதுமுதற்கொண்டு அவர்கள் அவர் மீது அளவில்லாத அன்பு பூண்டொழுகினார்கள்.

அத்தியாயம்—4.

அஹல்யா பாய் அம்மையாரின் அரசியல்.

'நெல்லு முயி ரன்றே நீரு முயி ரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்,
அதனால், யானுயி ரென்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே'—

புறநானூறு.

அஹல்யா பாய் அம்மையார் புத்தி சாதுர்ய மிகுந்தவர். அதனால், அரசாங்க முறைமையில் தம்முடன் ஒத்துழைக்கத் தகுந்தவர்களென்று அவர் தெரிந்தெடுத்த உத்தியோகஸ்தர் அனைவரும் அவருக்கு அடங்கி ஒடுங்கி நடந்து வந்தனர். அவர்களும் அவரும் தத்தம் கருத்தில் வேற்றுமை யடைந்திலர். அவர்மீது அவர்களுக்கிருந்த பக்தியும் விசுவாசமும் அளவிலடங்கா. அநேக சமயங்களில் அவர்கள் அவர் பொருட்டுத் தங்கள் இன்னுயிரையுந் துறக்கத் துணிந்தார்கள்.

அவ்விதம் தெரிந்தெடுக்கப் பெற்ற உத்தியோகஸ்தரில் துக்காஜி என்பவன் ஒருவன். அவன் ஹோல்கார் வமிசத்தைச் சேர்ந்தவன். ஆயினும், அரசகுலத் துதித்தவனல்லன். அவன் அஹல்யாபாயை 'அம்மா' என்றழைப்பது வழக்கம். அவ்வம்மையார் அவனை நம்பி ஒவ்வொரு காரியத்தையும் செய்து வந்தார்.

தேச பரிபாலன விஷயங்களைத் தாம் ஏற்றுக் கொண்டு, இந்தூர் ராஜ்ய இராணுவத் தலைமை

வகிக்க அவ்வம்மையார் துக்காஜி ஹோல்காருக்கு உத்தரவளித்தார். அது விஷயத்தில் அவருடைய புத்தி சாதுர்யம் மிகவும் போற்றத் தக்கது. யுத்த களங்களில் பகை மன்னருக்கு விரோதமாய் இகல் புரியும்பொருட்டுச் சேனையை நடத்திச் செல்வதற்குப் போதுமான மனோதிடம் பெண் பிள்ளைகளுக்கு இல்லையென்பது எவரும் அறிந்த விஷயமே. 'படுபிணம் பெயராச் செங்களத்' திருந்து மனந்தளராமல் பெண்மக்களோ போர் நடத்த வல்லவர்! அவர் நெஞ்சம் சீக்கிரம் இளகுந் தன்மை வாய்ந்த தன்றோ!

'கடுஞ் சினத்த கொல் களிறும்
கதழ் பரிய கலி மாவும்
நெடுங் கொடிய நிமிர் தேரும்
நெஞ்சுடைய புகன் மறவருமென
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அற நெறி முதற்றே யரசின் கொற்றம்'

என்பதன் உண்மையை அவ்வம்மையார் கடைப் பிடித்தொழுகினர். அதனால் அவர் பகை மன்னருக்கு அஞ்சவேயில்லை. அற நெறியைக் கைப்பற்றி அநவரதமும் குடிகளின் நன்மையையே கருத்துட் கொண்ட அஹல்யா பாய் அம்மையாரை எதிர்க்க எவர்தான் முன் வருவர்? அவ்விதம் எதிர்ப்பினும் அவ்வெதிரிகளிடமிருந்து அவரைக் காக்கவல்லது அவருடைய அற நெறி யென்பது சொல்லாமலே விளங்கும்.

இந்தூர் ராஜ்யத்தின் சேனாதிபதித்துவம் வகித்திருந்தும் துக்காஜி கர்வம் படையாமல், தன்னை மதித்து இந்தூரில் தனக்குயர்ந்த பதவியளித்த அஹல்யா பாய் அம்

மையார் விஷயத்தில் நன்றிபாராட்டி அவர் இறந்து போகும் வரையில் அவருடைய கட்டளையை வேதவாக்கிய மெனச் சிரமேற் கொண்டு நடந்துவந்த துக்காஜி ஒரு குறையுமின்றி வாழ்ந்து வந்தான். நாளுக்கு நாள் அவன்பதவி உயர்ந்து வந்தது.

அத்தளகர்த்தனின் உண்மைக் குணத்தை யறிந்த அஹல்யா பாய் அம்மையார் அநேக விஷயங்களில் அவனை நம்பிவிட்டார். அவன் அவருடைய உத்தரவின் பேரில் விந்தமலைக்குத் தெற்கேயிருந்த நாடுகளை ஆட்சி செய்து வந்தான். அவனும் அஹல்யா பாய் அம்மையாரைப் போலவே நீதிமுறை பிறழாமல் தன்கீழ் வாழும் குடிகள் போற்ற நெடுநாள் ஆண்டுகொண்டிருந்தான். ஒருமுறை அவன் பன்னிரண்டாண்டுகளாக அந்நாடுகளை விட்டு வரவேயில்லை. அது விஷயத்தில் அரசியாரும் அவன்மீது கிஞ்சித்தும் சந்தேகங்கொள்ளவில்லை.

இத்தகைய உந்நத நிலைமையிலிருந்தும் துக்காஜி அவ்வம்மையாருக்கு விரோதமாய்க்கிளம்ப மனந்துணியவில்லை. அவனையன்றி வேறொருவன் அந்நிலைமையடைந்திருப்பின், இந்தூர் ராஜ்ய சரித்திரம் ஒருவாறு மாறுதல் அடைந்திருக்கக் கூடும். அவன் தன் உயர்ந்த அந்தஸ்தையும் அஹல்யா பாய் அம்மையார் பெண்பாலாய் இருப்பதையும் போதிய காரணங்களாகக் கொண்டு அவரைப் படாதபாடு படுத்தியிருப்பான். அத்தகையோன் தானெடுத்துக் கொண்ட காரியத்தில் சித்தி பெற்றிருப்பானோ அல்லது பெருதொழிந்திருப்பானோ என்பதை நாம் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. ஆனால்

இது உண்மை. இந்தூர் ராஜ்யமுழுமையும் அநேக குழப்பங்கள் ஏற்பட்டிருக்கும் ; அந்நிய நாட்டு மன்னர் இந்தூரைக் கைப்பற்ற முன் வந்திருப்பார்கள். அவ்வம்மையார் அரசாட்சி அமைதியாய் நடைபெற்றிராது.

துக்காஜி முதன் முதல் ஒரு மகாராட்டிய வேதியன் கைக்குள் சிக்கியிருந்தான். ஆனால், அவ்வேதியன் ரகோபா தாதாவின் தூண்டுகோலால் சமயம் நேர்ந்தபோது அஹல்யா பாய் அம்மையாரைக் கவிழ்த்துவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் நீங்கா நிழல்போல் அவரை விட்டுப் பிரியாதிருந்தான். பலவிதங்களிலும் அவருடைய நன்மையைக் கருதுபவன் போல் நடித்தான். நாளடைவில், அத்துஷ்டன் உட்கருத்து இன்னதென உணர்ந்ததும் துக்காஜி அவனோடு இணங்கியிருப்பதைத் தவிர்த்து வெகு ஜாக்கிரதையுடன் அவ்வேதியன் இராணியாருக்கு இன்னல் இழைக்காவண்ணம் கவனித்துவந்தான். துக்காஜியைத் துணைவனாகக் கொண்டு தன் காரியத்தை முடித்துவிடலாமென்று வந்த அப்பிராமணன் அத்தளகர்த்தன் தன்னைப் பிரிந்ததால் தன்னால் ஒரு காரியமும் முடியாதென்றும் தானங்கிருப்பதால் தன்னுயிர்க்கே ஆபத்துண்டாகுமென்றும் நினைத்து அவ்வூரைவிட்டு நீங்கினான்.

இராணியார் உத்தரவின் பேரில் துக்காஜி சிற்சில சமயங்களில் தன் ஆளுகைக்குட்பட்டிருந்த நாடுகளில் வரி வசூலிப்பதுண்டு. அவன் தான் வசூலித்த வரிப் பணத்தை அவ்வப்போது இந்தூர் நாட்டுப் பொக்கிஷத்திற்கு அனுப்பிவிடுவான். இராணியாருக்கும் பேஷ்வாக்

களுக்கும் ஏற்பட்டிருந்த ராஜ்ய விவகாரங்கள் அனைத்தும் அவன் மூலமாகவே நடந்தேறி வந்தன.

இராணுவ பலம் பொருந்தி, இந்தூர் நகரத்திற்கு வெகு தூரத்தில் வசித்திருந்தும் துக்காஜி அரசியாருக்கு அஞ்சி நடப்பதைக் கண்ட இதர மகாராட்டிய உத்தியோகஸ்தர் முகங்கோணாமலும் விகற்பமான எண்ணங்களுக்கு இடங்கொடாமலும் தத்தமக்குரிய அலுவல்களைச் சரிவர நடத்தி வந்தார்கள்.

அதனால் இந்தூர் ராஜ்ய பரிபாலனம் யாதொரு இடையூறுமின்றி அமைதியாய் நடந்து வந்தது. அஹல்யாபாய் அம்மையார் தமது குடிகளின் நன்மையின் பொருட்டே தம்மைக் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார் என்று பூரணமாய் நம்பி, அவர்களைத் தம்முயிரைப்போல் பாதுகாத்து வந்து அவ்வப்போது அவர்களுக்கு நேர்ந்த குறைகளை நிவர்த்தித்தபடியால் இந்தூரில் உள்நாட்டுக் கலகம் இல்லாதொழிந்தது. பகையரசர் அவருக்கு அஞ்சி நடுங்கினர். ஆயினும், தமது நடுவுநிலைமையால் குடிகளின் அன்பைப் பெற்ற அவ்வம்மையாரின் அளப்பரிய வன்மையை அறியாமல் உதயபுரி ராணா (Rana of Udaipur) உல்வலி என்பவன் இந்தூர் ராஜ்யத்தைச் சேர்ந்த இராமபுரம் என்னுமிடத்தைக் கைப்பற்றிய ராஜ புத்திரருக்கு உதவியாகத் தன் சேனையுடன் இந்தூர் எல்லையை அணுகினான். அதைக் கேள்விப்பட்ட இராணியார் காலதாமதம் செய்யாமல் உடனே ஷெரீப் பை (Shereef Bye) என்பவனை ஒரு சிறு மகாராட்டியச் சேனையுடன் அந்த ராணாவை எதிர்க்கும் பொருட்டு அனுப்பினார். அத்தளகர்த்தன் மண்டசுரத்திற்கு (Mundessur) வடக்கில் இரு

பத்து நான்கு கல்தூரத்திலிருந்த பல்சோரா (Palsorah) என்னுமிடத்தில் உல்வலி ராணாவின் சேனையை எதிர்த்துப் புறங்காட்டிடச் செய்தான். தன் தோல்வியை உணர்ந்த ராணா சமாதானத்திற்கு உடன்பட்டான். அஹல்யா பாய் அம்மையார் உண்மையில் அவனையும் அவனைச் சேர்ந்தோரையும் ஒரு நொடியில் பஸ்மீகரப்படுத்தி யிருக்கலாம். அவ்விதம் செய்ய அவருக்கு மனம் துணியவில்லை. தம்மால் ஏன் அநேக குடும்பங்கள் அழிந்துவிடவேண்டும் என்று அவர் கருதினார். அதனால் அவர் முழுமனத்துடன் ராணாவின் வேண்டுகோளுக்கிசைந்தார்.

* * *

* * *

* * *

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈதலும், முகமலர்ந்து இனியவை கூறலும், நீதிமுறை வழாது செங்கோல் செலுத்தலும், தளர்ந்த குடிகளைப்பாதுகாத்தலுமாகிய இந்நான்கு குணங்களும் ஒருங்கே அமையப் பெற்றவன் அரசனென்று உரைக்கத் தகுந்தவன் என்று பெரியோர் கூறுவர். இந்நான்கு குணங்களும் அஹல்யா பாய் அம்மையாரிடம் பொருந்தியிருந்தன; அதனால் இந்தூர் ராஜ்யத்தில் வசித்துவந்த அவருடைய குடிகள் அனைவரும் அவரை இலக்ஷ்மியின் அவதாரமெனக் கருதிப் போற்றலாயினர்.

அவ்வரசியார் இந்தூர் ராஜ்யத்தின் முன்னேற்றத்[illegible]தத்தவிர வேறு எவ்விஷயத்தையும் கனவிலும் நினையா[illegible]ல் முப்பது வருஷ காலம் (1766-95) செங்கோலோச்சி

வந்தனர். அவருடைய நெறிதிறம்பாத அரசியல் எவரும் பின்பற்றிச் செல்லக்கூடிய தென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

‘வேலை களை யிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞால முழுது நலிவிழந்து நிற்கும்—இல
மொழிவரோ செம்மை புரிந்திடும்பாச் செய்கை
யழிவரோ செங்கோ லவர்!’

*   *   *
*   *   *

அரச பதவி பொறுமை கொள்ளத் தக்கதன்று, என்பதை எவரும் அங்கீகரிப்பர். நீதி முறை திறம்பாமல் அரசாட்சி செய்துவருவது கடினமான விஷயமென்பது செங்கோலரசர்க்கன்றி வேறு எவர்க்கும் தெள்ளிதின் விளங்காது. சில ஆண்டுகளுக்கு முன்னர் நம்மை ஆண்டு வந்த விக்டோரியா (Queen Victoria) மகாராணியார், இங்கிலாந்து (England) தேசத்தரசுரிமையைத் தாம் பெறப்போவதை அண்டையிலிருந்தவர் சொன்னபோது, கண்ணீர் விட்டழுதனராம். அவ்விளவயதிலேயே அரசியல் இத்தன்மைத்தென்பதை அவர் உணர்ந்திருந்தார்போலும்.

நல்லெண்ணத்துடன் அரசாள முயல்பவர்க்கு, அம்முயற்சி ஈடேறா வண்ணம் அநேக இடையூறுகள் சம்பவிக்கும். கர்வமடைதல், இன்ப நுகர்ச்சியே பெரிதெனக் கருதல், சுயநலம் பாராட்டல் ஆகிய துர்க்குணங்கள், அவர்களை மேற்கொண்டு அவர்கள் தங்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதாமலும் குடிஜனங்களைப் பா[illegible]

ராமலும் மனம் போன போக்கெல்லாம் போகச் செய்து நாளடைவில் அழிந்து போவதற்குக் காரணங்களாகின்றன. ஐரோப்பிய தேசங்களிலும் இந்திய நாட்டிலும் இன்னும் இதர தேசங்களிலும் அவ்விதம் அழிந்துபோன அரசரும் அரசியரும் எண்ணிறந்தோர் ஆவர்.

*   *   *
*   *   *

அஹல்யா பாய் அம்மையார் ஆதித்தன் உதிப்பதற்கு இரண்டொரு நாழிகை முன்னதாகவே படுக்கையை விட்டெழுந்து, தாம் செய்யவேண்டிய காலைக்கடன்களைச் சரிவர முடிப்பர். அதன் பிறகு அவர் வைதிக முறைமைப்படி மதசம்பந்தமான நூல்களும் இதர புராணங்களும் பிறர் படிக்கக் கேட்டு ஆநந்திப்பர்.

ஏழைகளுக்குப் பொருளுதவிசெய்தலும் அதிதிகளுக்கு அன்னம் படைத்தலும் ஆகிய நற்காரியங்களைச் செய்த பிறகு அவர் உண்பது வழக்கம். ஒவ்வொரு நாளும் உண்ணுதல் விரதம் பூண்டவர். அவர் மிதமின்றி போஜனமுண்பதில்லை. அவர் போஜன மருந்திய பின் சிறிது பொழுது கண்ணுறக்கம் கொள்வர்.

பகல் இரண்டு மணிக்கு அவர் நித்திரை நீத்து நல்லுடையுடுத்து கொலுமண்டபத்தமர்ந்து அங்குமாலை ஆறு மணி வரையில் தமது குடி ஜனங்களின் வழக்குகளைக் கேட்டு அவர்களுக்குச் செய்யவேண்டியவற்றைச் செய்து முடிப்பர். ‘சமன் செய்து சீர்தூக்குங் கோல் போல் அமைந்தொருபால் கோடாமை’ மேற்கொண்டொ[illegible] அவர் இர வெகுநேரமளவும் ஒரு காரியமும் செய்[illegible]

இல்லை. பதறாத காரியம் சிதறாது என்பது அவர் சித்தாந்தம். குடிஜனங்கள் சம்பந்தப்பட்ட விஷயம் எதுவாயினும் அதைத் தாமே நேரில் விசாரித்துத் தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டிப்பர். அவர் தாம் செய்ய வேண்டிய காரியங்களைத் தாமே செய்வர். பிறரை நம்பி அவர் ஒரு காரியத்திலும் தலையிட்மாட்டார். தாமெடுத்துக்கொண்ட காரியத்தில் சித்தி பெறுவதற்கு அவர் தமது தேக சிரமத்தையும் பொருட்படுத்தாமல் மிக்க முயற்சியுடன் உழைப்பார்.

அஹல்யா பாய் அம்மையார், தமது குடி ஜனங்களின் முறைப்பாடுகளை விசாரித்து அவரவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்த பிறகே பூஜைக்குச் செல்வது வழக்கம்.

அவர் எக்காலத்தும்,

'கண்ணோக் கருள்பா நகைமுகமே நன்மலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா—வன்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு."

என்பதேபோல், கற்பகத்தருவுக்கொப்பாய் விளங்கினர்.

அவர் இத்தனை அரச போகத்தில் இருந்தும் கடவுளை மறந்ததில்லை. கடவுளே தமது மகோன்னத பதவிக்கு முதற் காரணம் என்பதை உணர்ந்து சமயம் நேரிடும்போதெல்லாம் அவரைத் துதித்துக்கொண்டேயிருப்பார்.

இரவில் போஜனமுண்ட பிறகு இராணியார் தம்முடைய மந்திரி பிரதானிகளுடன் ராஜரீக விஷயங்க

அத்தியாயம்—6.

சில பெரிய விஷயங்கள்.

'கோனிலை திரிந்திடிற் கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்
மாரிவறங் கூரின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லா மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதியின் றாகும்'—மணிமேகலை.

இதுகாறும் நாம் முக்கியமாய் அஹல்யாபாய் அம்மையாரின் முன்னோர் வரலாறும் ராஜரீக முறைமையும், குணாதிசயங்களும் ஒருவாறு கூறிவந்தோம். இனி, அவர் அரசாண்டகாலத்தில் நடந்தேறிய சிற்சில விஷயங்களையும் அவருடைய இறுதிநாட்களைப் பற்றிய செய்திகளையும் கூறி இச்சரிதத்தின் இடைப்பகுதியை முடிப்போம்.

துஷ்ட நிக்கிரகமும் சிஷ்ட பரிபாலனமும் செங்கோல் மன்னரின் சிறந்த தன்மையாகும். அத்தகைய குணம் அஹல்யாபாய் அம்மையாரிடம் பொருந்தியிருந்தது.

உதாரணம்—அவர்காலத்தில் இந்தூர் நாட்டின் காடுகளிலும் மலைமுழைகளிலும் கோண்டு (Gond) ஜாதியார் வசித்து வந்தார்கள். அவர்களில் பெரும்பாலார் கொள்ளையடித்து ஜீவனம் செய்வது வழக்கமாயிருந்தது. இந்தூர் ராஜ்ய வாசிகள் அவர்களால் பெருந்துயர் அடைந்தனர். ராஜ்ய முன்னேற்றத்தைக் கருதி எங்கும் சமாதானம் நிலைத்திருக்கவேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகக் கொண்ட அஹல்யாபாய்

அம்மையார் அத்துஷ்டர்களுக்கு எவ்வளவோ புத்திமதி கூறியும் அவர்கள் கேட்கவில்லை. நாளுக்கு நாள் அவர்களுடைய கொள்ளைத்தொழில் அதிகப்பட்டு வந்தது. அதனால் இராணியாருக்குக் கோபம் பொங்கி எழுந்தது. அதுசமயம் அவரைக் கண்டோர் அனைவரும் காளியென மதித்து அஞ்சினர். அவர் தமது சேனாவீரரில் சிலரை அழைத்து அக்கொள்ளைக்காரரைத் தம்முன் கைப்பிடியாகக் கொண்டுவர ஆஞ்ஞாபித்தார். அச்சேனாவீரர் அவருடைய கட்டளையைச் சிரமேற்கொண்டு அக்கொள்ளைக்காரரில் அநேகரைக் கொன்று, மிகுந்தவர்களைக் கட்டி அவர் முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தினர். அவ்விதம் நிறுத்தப்பெற்ற அக்கொள்ளைக்காரர் உண்மையில் குற்றஞ் செய்தவர்களா அல்லவா என்பதைத் தீரவிசாரித்து, முழுமுதற் கடவுளை நோக்கி, 'உன்னருளால் என் தாழ்வு கெடத் தேற்றாய்' என்றிரந்து யாதொரு சந்தேகமுமின்றிக் குற்றவாளிகள் என்று ரூபிக்கப்பட்டவர்களுக்குக் கொலைத்தண்டனை விதித்தார். கொலையுண்டிறந்த துஷ்டரில் மந்ரூப்ஸிங் (Mundroop Singh) என்பவன் ஒருவன். அவன் அக்கொள்ளைக்காரரின் தலைமை வகித்து நருமதா நதிதீரத்தில் ஸில்லானு (Sillanah) என்னும் மலைக்கோட்டையுள் வசித்து வந்தான். அஹல்யாபாய் அம்மையார் அத்துஷ்டரைத் தண்டித்த பிறகு இந்தூர் ராஜ்யத்தில் கொள்ளைத் தொழில் அறவே யொழிந்தது என்பர் சரித்திராசிரியர்.

ளைப்பற்றி ஆலோசனை செய்வர். அவர்கள் அனைவரும் அவ்வம்மையாரின் நல்லெண்ணத்தின்படியே,

'தேவி கூடச் சென்றங் கிடித்தறிவு மூட்டி
வேதனினும் வாய வேரிழப் போர்'

அமைச்செனத் தகுந்தவர்களாய் விளங்கினர். அத்தகையோரை விடுத்து அவர் ஒரு காரியமும் செய்ததில்லை. ஏதோ ஒரு பெரிய விஷயத்தைப் பற்றி அவர் அவர்களுடன் சம்பாஷிக்க ஆரம்பித்து விட்டால் அது முடிவு பெறும் வரையில்—அதாவது இரவு பன்னிரண்டு ஒரு மணியாயினும்—அவர் நித்திரையை நீத்திருப்பர். தேச சேவையின் பொருட்டுத் தம்மைக் கடவுள் இவ்வுலகத்திற்கு அனுப்பிவைத்தாரென்றும் கடவுள் கட்டளையைச் சரிவர நிறைவேற்றுவது தமது கடமை என்றும் அவர் சொல்வது வழக்கம்.

காலை ஐந்து மணி முதல் இரவு பன்னிரண்டு மணி வரையில் தேச விஷயங்களில் ஈடுபட்டு மனஞ்சலியாமல் வெகு உற்சாகத்துடன் உழைத்து வந்தும் அவருக்குத் தேக சௌக்கியம் குறையவேயில்லை. அதற்குக் காரணம் அவருடைய பூர்வ புண்ணியமும், கடவுள் அருளும் முறைதவறாத பழக்க வழக்கங்களுமேயாம்.

பழக்க வாசனையாலும் கடவுள் கிருபையாலும் ராஜரீக விஷயங்களில் தேர்ச்சியடைந்திருந்த அவ்வம்மையார் இந்தூர் ராஜ்ய முன்னேற்றத்தின் பொருட்டு வெளிநாட்டு யுத்தம் சம்பவியாதபடி நடந்துகொண்டார். அந்நிய நாட்டு மன்னருடன் நட்புப் பூண்டொழுகினர். ஆயினும், மனிதர் சுபாவம் அடிக்கடி மாறத் தகுந்தத

னால், அந்நாட்டு நீடித்திராதென்றும் அதனால் சமாதானம் அழிவுறுமென்றும் அவர் பூரணமாய் நம்பி எதிர்த்து வரும் எதிரியின் கர்வத்தை அடக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் இந்தூர் ராஜ்யத்துச் சேனையைப் பண்ணுறுத்துவதில் தமது கவனத்தைச் செலுத்தி வந்தார். அவர் தம்முடைய சேனவீரருக்கு ஐரோப்பியரைக் (Europeans) கொண்டு யுத்தப்பயிற்சி செய்வித்தார். அதுவேயுமன்றி, அனிபெக் என்னும் துத்ரேனி, (Dudrene) பாய்ட் (Boyd) முதலிய ஐரோப்பிய தளகர்த்தரின் கீழடங்கிய ஐரோப்பிய யுத்தவீரர் அவ்வம்மையார் கொடுத்து வந்த சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு அவருடைய ஏவலின்படி நடந்துவந்தனர்.

அவருக்கு இந்து மதத்தில் அதிகமானபற்றிருந்தும் அவர் இதர மதங்களையும் அம்மதங்களை அநுசரித்து வந்தவர்களையும் இகழ்ந்து பேசினதுமில்லை; இம்சித்ததுமில்லை. நம் இந்திய நாட்டிலும் இதர தேசங்களிலும் மதவைராக்கியத்தால் தமது ராஜ்யங்களைத் துறந்து நிலைகெட்டுத் தடுமாறிய மன்னர் பலர் இருந்தனரென்பதை நாம் வாசித்தும் பிறர் சொல்லக் கேட்டும் இருக்கிறோமல்லவா.

வியாபாரத் துறையில் இறங்கி உழைக்க முன்வந்த வியாபாரிகளுக்கும் தம்மால் இயன்ற உதவி செய்த அவ்வம்மையார், அவ்வுதவியால் தம் நாடு நாளுக்கு நாள் முன்னேற்றமடைந்து வந்ததைக் கண்டு ஆனந்தித்தார். ஒரு நாட்டின் செல்வாக்குக்கு அந்நாட்டில் நடைபெறும் வியாபாரம் மூலகாரணமன்றோ! நம்மை ஆண்டுவரும்

224695

ஒப்புயர்வற்ற ஆங்கிலேயரும் வியாபார விருத்தியிலன்றோ உன்னத பதவி யடைந்திருக்கின்றனர்.

இந்தூர் ராஜ்யத்தில் அ[illegible]ய பாடசாலைகள் அஹல்யா பாய் அம்மையார் ஆளுகையின் கீழ் நடைபெற்று வந்தன. அதனால் இந்தூர் ராஜ்ய வாசிகளில் அநேகர் கல்வியில் அபிவிருத்தி யடைந்தனர். அநேக சிறந்த காவியங்கள் அவர் காலத்தில் எழுதப் பெற்றன. அக்காவியங்கள் செய்த கவிஞரில் பலர் அவரால் சம்மானிக்கப் பெற்று வந்தனர்.

அவர் எக்காரணம் பற்றியும் குடிகளை வருத்தி வரி வாங்கினதில்லை. 'ஏழை பழுத கண்ணீர் கூரிய வாளை யொக்கும்' என்னும் பழமொழியின் உண்மையை உணர்ந்து, அவர் இதர செங்கோலரசரைப் போலவே ஆறிலொரு கடமை வாங்கி வந்தார். அவருடைய ஆளுகைக் குட்பட்டிருந்த குடிகள் சகல விஷயங்களிலும் திருப்தி யடைந்திருந்தது போலவே வரி விஷயத்திலும் மனத் திருப்தி யடைந்து விளங்கினர்.

அஹல்யா பாய் அம்மையாரின் செங்கோன்மையும், தளராத ஊக்கமும் குடிகளின் அன்பும் அந்நியநாட்டரசரின் நட்பும் சேனாபலமும் ஒன்று சேர்ந்து அவருடைய அரசாட்சியை ஒப்பற்றதாக்கின. அதனால், அவர் உயிருடன் இருந்தவரையில் இந்தூர் ராஜ்யத்தில் சமாதானம் நிலைபெற்றிருந்தது. அவ்விராஜ்யம் பலவிதங்களிலும் செல்வாக்குற்று விளங்கிற்று.

அத்தியாயம்—5.

அஹல்யா பாய் அம்மையாரின் குணாதிசயங்கள்.

‘அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு’—திருக்குறள்.

அதிகாரம் வாய்க்கப்பெறின் பெண்மக்கள் கர்வமடைவது திண்ணம் என்று மனிதரில் ஒரு சாரார் கூறுகின்றனர். இக்கூற்று பெண்மக்களுக்கேயன்றி ஆண்மக்களுக்கும் பொருந்தும். அதிகாரம் வகிக்கும் ஆண்பாலரில் ஒரு சிலர் கர்விப்பதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். அஃதேபோல் உயர்ந்த பதவி யடைந்துள்ள மாதரிலும் ஒரு சிலர் கர்வம் அடைகிறார்கள். ஆண்மக்களும் பெண்மக்களும் கர்வமடைவதும் தாழ்மையாய் நடப்பதும் அவரவர் மனத்தின் தன்மையைக் குறிக்கும். ஆதலால், இக்கூற்று முழுவதும் உண்மையெனக் கொள்ளத் தக்கதன்று.

ஒரு பெரிய ராஜ்ய உரிமையடைந்து உலகமெல்லாம் போற்றப் பெற்ற நமது அஹல்யா பாய் அம்மையார், அணுவளவேனும் கர்வமடைய வில்லை. தாழ்மை அவருடன் பிறந்தது. அவர் அத்தன்மை வாய்ந்தவராயிருந்தபடியால் குலத்திலும் பணத்திலும் உயர்ந்தோரையும் தாழ்ந்தோரையும் ஒரேவிதமாகப் பாவித்தார்.

இனிய வார்த்தையால் எவர் மனத்தையும் கவரலாம் என்னும் உண்மையை அறிந்திருந்த அவ்வம்மையார், தமது ராஜ்யவிஷயங்களில் முறை பிறழ்ந்து [illegible]

யங்களிலன்றி மற்றெச்சமயத்திலும் உத்தியோகஸ்தரைக் கடிந்து பேசினதில்லை. அவர் எவரிடத்தும் எக்காலத்திலும் முகமலர்ந்து இனியவார்த்தைகளைக் கூறுவர்; வெகு மரியாதையுடன் நடந்து கொள்வர்.

இவ்விதமிருந்த அவ்விராணியாரை எவர்தான் நேசிக்கமாட்டார்கள்? இந்தூர் நாட்டுக் குடிஜனங்களேயன்றி இன்னும் இதர நாட்டுக்குடிகளும் அவர்மீது அளவில்லாத அன்பு பூண்டொழுகினர். அவர்கள் அவ்வம்மையாருக்கு மறந்தும் கெடுதி செய்ய நினைக்கவில்லை.

‘தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர்’ என்று நமது பெரியோர் கூறியது அவரைக்குறித்தே போலும்! தம்மாற் கூடியவரையில் பிறர்க்கு நன்மை செய்யவேண்டுமென்பதே அவர் நோக்கம். அவர் அடைந்திருந்த அரச பதவியே அந்நோக்கம் நிறைவேறுதற்குரிய சாதனமாயிருந்ததென்னலாம். அவர் பிறர்க்குச் செய்த நன்மை அளப்பரிது.

முன் அத்தியாயங்களில் கூறியபடி, அவர் கடவுள் பக்தி மிகுந்தவர். பக்தியில் அவருக்கு இணையானவர் அக்காலத்தில் எவரும் இருந்ததில்லை என்பது மிகையாகாது. அவர், பூஜையில் இருக்கும்போது

‘கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால் கமழ
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்பும்’

இயல்புடையவரல்லர்; அக்காலத்தில் அவர் தம் உணர்

யையும் செயலையும் அறவே மறந்து பக்தியில் ஈடுபட்டு விளங்குவார்.

எல்லா விஷயங்களிலும் அவர் கடவுளுக்குப் பயந்து நடந்தார். கடவுளின் புகழைக்கூறும் புராண முதலிய நூல்களை வாசிப்பதிலும் பிறர்வாசிக்கக் கேட்பதிலும் அவ்வம்மையாருக்குப் பிரிய மதிகம். 'நான் இவ்வுலகில் செய்யுங் காரியங்கள் அனைத்திற்கும் கடவுளுக்குப் பதில் கூறவேண்டியவளா யிருக்கிறேன்' என்று அவர் அடிக்கடி கூறுவது வழக்கம்.

அவர் இந்துமதக் கோட்பாடுகளில் இம்மியும் பிசகி நடந்ததில்லை. அவர் உயர்ந்த பதவியிலிருந்தும் தாம் விதவை என்பதை மறவாமல் கைம்மைநோன்பைக் கைக்கொண்டு காலங்கழித்தனர். அவர் தரித்தது வெள்ளுடையே. அன்னபானாதிகள் மீது உண்டாகும் அளவு கடந்த பிரியத்தை அவர் தவிர்த்தார். முகவசீகரத்தை மிகுவிக்கக்கூடிய பொன்னாபரணங்களின்மீது அவர்விருப்பங்கொள்ளவில்லை. முக்தாபாயின் கட்டாயத்தின்பேரில் பொற்சங்கிலி யொன்றுமட்டும் தம் கழுத்தில் அணிந்திருந்தார்.

முகஸ்துதியால் மகிழ்பவர் அவர் அல்லர்; பின் வரும் விஷயம் அதை நன்கு விளக்குகிறது. ஒருநாள் கல்வி கேள்விகளையுடைய வயோதிக வேதியன் ஒருவன் அவரை நாடி அவர் அரண்மனைக்கு வந்தான். அவன் கக்கத்தில் ஏட்டுப்பிரதி யொன்றிருந்தது. அவனைத் தூரத்தேவரக்கண்ட அஹல்யாபாய் அம்மையார், தமது இயற்கைக்கேற்ப அவனைத் தாமே முகமலர்ச்சியுடன் எதிர்கொண்டழைத்து ஓர் ஆசனத்திலிருத்தி, 'பிராமணோத்தமரே!—தாங்கள் என்னைத் தேடி வந்ததன் காரணம் யாதோ?' என்று வெகு விநயத்துடன் வினவினார்.

அக்குளிர்ந்த மொழிகளைச் செவியிலேற்றதும் அம்மறையவன் மகிழ்ச்சி மீதூர ஏட்டுப் பிரதியைத் தன் கக்கத்தினின்றெடுத்து வெகு பக்தி விசுவாசத்துடன் அவரிடம் நீட்டினான். அதை அவ்வம்மையார் தமது கரத்தில் வாங்கி அப்பிரதியிலுள்ள விஷயங்கள் யாதாயிருக்கலாமென்று பிரித்து வாசித்தார். அதில் வரைந்திருந்த இரண்டொரு பாடல்களைப் பார்த்தார். அவர் முகம் உடனே வேறுபாடுற்றது. ஏனெனில், அவ்வேட்டுப் பிரதியிலுள்ள பாடல்கள் அனைத்தும் அவ்வம்மையாரின் புகழைக்குறித்தன. அவர் உடனே அப்பிராமணனை நோக்கி, 'வேதியரே இஃதென்ன! உமது ஒப்பற்ற வித்வத்தன்மையை வேறு விஷயங்களில் செலுத்தியிருந்தால் மிகவும் நலமாயிருந்திருக்குமே. பாவமே ஓர் உருக்கொண்டு இவ்வநித்திய உலகில் ஜனித்து மாயையால் மூடுண்டு அல்லல் பட்டு உழலும் அற்பப் பெண்ணாகிய நான்—பேதைமை மிகுந்த நான்—உமது புகழ்ச்சிக்குத தகுந்தவள் அல்லள். ஆதலால், நாயினும் தாழ்ந்த என் புகழ்ச்சியே விஷயமாகக் கொண்டுள்ள இந்நூல் இதர நூல்களைப் போல் நிலைத்திருக்கத் தகுதியானதன்று.' என்றுரைத்துத் தம்மருகில் நின்ற காவற்காரனொருவனிடம் அவ்வேட்டுப் பிரதியைக்கொடுத்து, அதைக் கொண்டுபோய் அரண்மனைக்கு அணித்தேயுள்ள நருமதையாற்றில் எறிந்துவிட்டு வரக் கட்டளையிட்டார். அவன் அக்கணமே அவருடைய ஆஞ்ஞையை நிறைவேற்ற அவ்விடத்தை விட்டகன்றான்.

அக்காட்சியைக் கண்ட வேதியன் ஒன்றும் பேச வாயெழாமல் இருந்தவிடத்தில் அசைவற்றிருந்தான். 'ஆஹா! இவரைப்போன்ற உத்தமியை நான் இவ்வுலகில் கண்டதேயில்லை. ஸ்திரீகள் அனைவரும் முகஸ்துதி விரும்புவர் என்னும் தப்பபிப்பிராயங்கொண்ட என் மதியீனத்தை என்னென்றுரைப்பது! இவ்வயோதிக தசையில் இவ்வரசியார் எனக்கு நற்புத்தி கற்பித்தார்.' என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணினான். தன் வறுமைப் பிணியை நீக்கிக்கொள்ள வேறு வழியில்லையே என்றேங்கினான்.

அப்பிராமணனின் உள்ளக்குறிப்பை முகத்திலுணர்ந்த அவ்வம்மையார் அவனை நோக்கிப் புன்னகை புரிந்து, 'வேதியரே! நான் உமது ஏட்டுப் பிரதியை ஆற்றிலெறிந்துவிடக் கட்டளையிட்டதற்காகக் கோபித்துக்கொள்ள வேண்டா. தாங்கள் உலகவழக்கை அநுசரித்து அவ்விதஞ் செய்தீர்கள். அத்தப்பிதம் உமக்கே உரியது என்று கொள்வதற்கில்லை. உம்மைப் பெரிதும் நலிவிக்கும் வறுமைப் பிணியே அதற்குக் காரணம் என்பதை நான் அறிவேன். ஆதலால், தாங்கள் அஞ்சவேண்டா. நான் என்னால் இயன்ற வரையில் அப்பிணியினின்றும் தங்களை நீக்கப்பார்க்கிறேன். வறுமைப் பிணியின் கொடுமையை நான் என்னென்று எடுத்துரைப்பேன்!

'தரித்திர மிக்க வனப்பினை யொழிக்குஞ்
சரீரத்தை யுலர்தர வாட்டும்;
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ்
சாற்றரு முலோபத்தை மிகுக்கும்;

தரித்திரந் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம் பல விளைக்கும்;
தரித்திர மவமானம் பொய்பே ராசை
தருமித்தீக் கொடியதொன் றிலையே.'

என்றுரைத்து, அவ்வேதியனுக்கு வேண்டிய பொருள் கொடுத்துதவினார். அவன் மனத்திருப்தியுடன் அரசியாரை வாழ்த்திக்கொண்டே அரண்மனையைவிட்டகன்றான்.

அவர் இயற்கையாகவே தரும சிந்தை யுடையவர்;

'தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம் பெண்டி ராற்றப் பாலகர்
முதியோ ரென்னு னிளையோ ரென்னான்
கொடுந் தொழி லாளன் கொன்றனன் குவிப்பவிவ்
வழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டுங்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழு
மக்களிற் சிறந்த மடவோ ருண்டோ

* * *

விளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான் பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது.'

என்பதைக் கடைப்பிடித்தொழுகினார். அவ்வம்மையார் சத்திரம் சாவடிகள் கட்டுவதிலும் கோயில் குளங்கள் நிருமாணிப்பதிலும் தானதருமங்கள் செய்வதிலும் அபரிமிதமான திரவியம் செலவு செய்தார். இமயமலை முதல் கன்னியாகுமரி வரையில் அவரைப் புகழ்ந்து பேசாதார் எவரும் இலர். பத்ரிநாத் (Badrinath) கேதார்நாத்

(Kedarnath) ஜகந்நாத் (Jagganath) கயா (Gaya) துவாரகை (Dwaraka) இராமேசுவரம் (Rameswaram) முதலிய திவ்விய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்பவரின் சௌகரியத்தின்பொருட்டு ஆங்காங்கு அநேக தண்ணீர்ப்பந்தல்களும் தருமச் சாவடிகளும் ஏற்படுத்தினர். அப்புண்ணிய ஸ்தலங்களில் அவர் சமைத்த மடங்களும் இதர கட்டடங்களும் இன்னும் அழியாதிருக்கின்றன. அந்நிய நாடுகளிலுள்ள கோயில்களின் மூலவிக்கிரகங்களுக்கு அபிஷேகஞ் செய்ய அவர் தமது செலவில் கங்கா நதியின் தீர்த்தத்தைக் குடங்குடமாக அனுப்பிவந்தார்.

அவருக்குக் குழந்தைகள் மீது பிரியம் அதிகம். அவர்களை அடையப் பெறாத மனையும்,

‘ தோக்கிளை மலர் துதை விலாத சோலையும்
புக்கிளந் தாமரை நகாத பொய்கையு
மிக்கிளம் பிறைவிசும் பிலாத வந்தியும் ’

ஒக்கும் என்பது அவர் அபிப்பிராயம். அண்டை அயல் வீட்டுக் குழந்தைகளை அவர் தமது வயிற்றிற் பிறந்த குழந்தைகளைப்போலவே சீராட்டி வந்தார். நாள்தோறும் பல சிறு குழந்தைகள் அவருடைய அரண்மனையில் அச்சமற்று விளையாடிக்கொண்டிருக்கும். அவர் அக் குழந்தைகளைப்போலிருக்க விரும்பியதுண்டு.

அஹல்யா பாய் அம்மையார் கல்வியில் சிறந்து விளங்கினர்; அதல்லாமல் கேள்வியிலு மிகுந்தவர். அவருடைய அரண்மனையில் அடிக்கடி புராண இதிகாசங்களைப் பற்றிய வாக்கு வாதங்கள் நடப்பதுண்டு. சிற்சில சமயங்களில் அவர் வித்வான்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை

நிவர்த்திசெய்துள்ளார். ராஜரிக விஷயங்களைச் சரிவர நடத்துவதற்கும், தமது குடிஜனங்களின் குறைகளைத் தீர்ப்பதற்கும், கல்விமான்களைச் சம்மானிப்பதற்கும் அவருடைய கல்வியே உற்ற துணையாயிருந்தது என்று கூறலாகும்.

அவர் நடுத்தரமான உயரமும் மெல்லிய தேகமுமுடையவர். அவருடைய மேனி கருத்திருந்தும் அவர் முகத்தில் ஒருவித தேஜஸ் நிலைபெற்றிருந்தது. அவர் எப்போதும் எவரிடத்தும் நகைமுகங்கொண்டு இனிய வார்த்தைகளைக் கூறுவர். அதனால் அவருடைய உள்ளக்கவலையை முகத்தினின்றும் தெரிந்துகொள்வதற்கு எவராலு மியலாதிருந்தது. தக்ஷிண தேசத்து நைஸாமும் (Nizam) மைசூர் சுல்தான் (Sultan) திப்புவும் அவ்வம்மையாரை வெகுவாய் மதித்தனர். அவர் இந்நிலவுலகில் நெடுங்காலம் நிலைத்து நின்று அரசாட்சி செய்ய வேண்டுமென்று மகம்மதியரும் இந்துக்களும் கடவுளைப் பிரார்த்தித்தனர்.

அவர் இருபதாம் பிராயத்தில் விதவையாயினர். இந்தூர் ராஜ்யத்தைத் தம்மையன்றி வேறொருவர் கைக்கொண்டால் தமது குடும்பத்தின் கீர்த்தி நசித்துப் போகும் என்பதை யுணர்ந்து அவர் தாம் விதவையாயிருப்பதையும் கவனியாமல் ராஜ்யபாரத்தைத் தாங்க முன் வந்து, ராஜ்யபார நிபுணத்துவத்திலும் நற்குண விசேஷத்திலும் இடைவிடா மனவுறுதியிலும் தம்மை நிகர்ப்பவர் எவருமிலர் என்று உலகோர் எண்ணும்படி அவ்விராஜ்யத்தை முப்பதாண்டு ஆட்சி செய்துவந்தார்.

அவர் காலத்தில் வனவிலங்குகளும் பறவைகளும் மச்ச ராசிகளும் அவருடைய தருமசிந்தையால் மிகுந்த பலனை யடைந்தனவென்றால் அஹல்யாபாய் அம்மையாரின் அரசியல் சிறப்பும் வள்ளன்மையும் கூறாமலே விளங்கும்.

அஹல்யாபாய் அம்மையார் தமது உத்தியோகஸ்தரால் குடிகளுக்குத் துன்பம் நேரிடுவதைக் காணச் சகியார்.

உதாரணம்.—இந்தூர் நகருக்கருகில் வசித்துவந்த தேவி சந்த் (Davey Chand) என்னும் பிரபல தனவந்தன் ஒருவன் திடீரென்று இறந்துபோனான். அவன் சொத்துக்களைச் சுதந்தரிக்க அவனுக்குப் பிள்ளையில்லை. இறந்துபோன அத்தனவந்தனது விதவையின் திக்கற்ற நிலைமையை யறிந்திருந்த சிலர், துக்காஜி ஹோல்காரிடஞ் (Tukaji Holkar) சென்று தேவிசந்த் வைத்துவிட்டுப் போன திரவியத்தில் சிறிது பெறுவதற்குகந்த தருணம் அதுதான் என்று எடுத்துக்கூறினர். அம்மூடசிகாமணிகளின் துர்ப்புத்தியைச் செவியிலேற்றதும் துக்காஜி ஹோல்கார் பணப்பேய் பிடித்துந்த இந்தூர் ராஜ்யத்தை ஆண்டுவருவது அஹல்யாபாய் அம்மையார் என்பதையும் மறந்து, அவ்விதவையைப் பொருள் கொடுக்கும்படி வற்புறுத்தினன்.

அவ்வுத்தியோகஸ்தன் பிறர் பொருளை வஞ்சித்துக்கொள்ளும் தன்மைக்கு இசையாமல், அவ்விதவை, அஹல்யாபாயின் செங்கோன் முறைமையை நன்கு அறிந்திருந்தாள்; ஆதலால் காலந்தாழ்க்காமல் அவருடைய அரண்மனையை அணுகி 'அபயம், அபயம்', என்று ஓலமிட்டாள். அதைக்கேட்டதும் அரசியார் செய்தி யாதென்று விசாரித்தறிந்து, அவ்விதவைக்குத் தமது உத்தியோகஸ்தர் ஒருவரால் நேர்ந்துள்ள விபத்திற்காகப் பெரிதும் மனமிரங்கி, 'அம்மா! நீங்கள் இனி அஞ்ச வேண்டியதில்லை; உமது உயிருக்கும் சொத்துக்கும்

யாதொரு அபாயமும் நேரிடாது; தாங்கள் முன்போல் சமாதானமாய்க் காலங்கழிக்கலாம்' என்று தைரிய மொழிகள் கூறி அவளை அவளது இருப்பிடத்திற்கு அனுப்பிவிட்டு, 'நமது கதி இனி என்னவாகுமோ?—இராணியாருக்கு நம்மீதுள்ள நம்பிக்கை யற்றுப்போகுமே' என்று அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்த துக்காஜி ஹோல்காருக்கு நிருபமொன்று பின்வருமாறு தமது கைப்பட வரைந்தனுப்பினார் :—

'துக்காஜி தளகர்த்தருக்கு,

வேலியே பயிரை மேய்ந்தால் பயிர் என்ன செய்யும்!—நீதி முறைமையை நிலை நிறுத்தற்குரிய நாமே நமது குடிகளை வருத்தத் தலைப்பட்டால் அவர்கள் என்ன செய்வார்கள். அவர்கள் எவரை அடுத்துப் பிழைப்பார்கள். தாங்கள் அவ்விதம் செய்யத்துணிவீர் என்று நான் கனவிலும் கருதவில்லை. என்னே நமது அற்பபுத்தியின் தன்மை!—இம்முறை நான் தங்கள் பிழையைப் பொறுத்தேன். இனி இத்தகைய குற்றம் தங்கள் மீது சாற்றப்படுமாயின் தங்கள் தலை உடலில் தங்காது. இது திண்ணம்.

இப்படிக்கு,
அஹல்யாபாய்.'

* * *
* *
* * *

சொராஞ்சி (Seronji) என்னும் நகரம் இந்தூர் ராஜ்யத்தைச் சேர்ந்தது. அந்நகரில், வியாபாரத் துறையில்

இறங்கி, அபரிமிதமான பொருள் சேகரித்த சுப்கன்தாஸ் என்னும் வியாபாரி, தன் திரவியத்தைத் தனக்குப் பிறகு அனுபவிப்பதற்குரிய புதல்வன் தனக்கில்லையே என்னும் வருத்தத்தால் உடல் மெலிந்து உயில் சாசனமொன்றும் எழுதிவைக்காமல் இறந்துபோனான்.

அத்தருணம், அஹல்யாபாய் ஆளுகைக்குள்ளடங்கிய அந்நகர பரிபாலன உத்தியோகஸ்தன் இறந்துபட்ட சுப்கன்தாஸ் மனைவியை நோக்கி, 'அம்மா, உமது கணவர் ஏராளமான திரவியத்தை விடுத்து இறந்துபோனார். அதை அநுபவிக்க அவருக்குப் பிள்ளைப்பேறு இல்லாமற் போகவே அத்திரவிய முழுவதும் இந்தூர் ராஜ்யத்தைச் சேரப்போகிறது' என்றான். அவ்வார்த்தைகளைக் கேட்டதும் சுப்கன் தாஸ் மனைவி இடியுண்ட நாகம் போல் அசைவற்று நின்றாள். 'இதற்காகவோ என் கணவர் இத்துணைச் செல்வத்தைப் பாடுபட்டுச் சேகரித்தார்! என்னே இந்நாட்டு அரசியல் இருந்தவாறு!' என்று சிந்தித்தாள். சில நிமிஷங்கள் சென்றன.

பிறகு, அவ்விதவை தன் தைரியத்தைக் கைவிடவில்லை. அவ்வுத்தியோகஸ்தனைப் பார்த்து, 'ஐயா, தாங்கள் சொல்வது எனக்கு வியப்பாயிருக்கிறது! எங்கள் சொத்து இந்தூர் ராஜ்யத்தைச் சேருவதற்கு நியாயமில்லை. என் கணவர் இறக்குந் தருவாயில் எனக்குக் கட்டளையிட்டபடி நான் என் சகோதரியின் புதல்வனைச் சுவீகாரஞ் செய்துகொள்ளப் போகிறேன். ஆதலால், எங்கள் சொத்துக்கு உரியவன் அச்சிறுவனே யாவன்' என்றாள்.

உத்தியோகஸ்தன் :—அஃதெப்படி யாகும்! இந்துக்களின் சட்டப்படி விதவைகள்—உம்மைப்போன்ற நிலைமையிலிருக்கும் விதவைகள்—சுவீகாரஞ் செய்துகொள்வதற்கில்லை. மேலும், தாங்கள் சுவீகாரஞ்செய்துகொள்ள விரும்பினாலும், துரைத்தனத்தாரின் உத்தரவின்பேரிலன்றோ செய்துகொள்ள வேண்டும். அவர்கள் உம்முடைய விருப்பத்திற்கு இசையாவிடில் தாங்கள் சுவீகாரம் எடுத்தும் பயனென்ன? அதற்காக.................' என்று கூறுகையில்,

சுப்கன் தாஸ் மனைவி இடைமறித்து, 'அதற்காக நான் செய்யவேண்டுவதென்ன?' என்று வினவினள்.

உத்தியோகஸ்தன் :—தாங்கள் எனக்கு மூன்று இலட்ச ரூபாய் இனாமாகக் கொடுத்தால் நான் என்னால் கூடியவரையில் முயன்று இவ்விஷயம் இராஜாங்கத்தாருக்குத் தெரியாதபடி மறைத்துவிடுகிறேன்.

சுப்கன் தாஸ் மனைவி :—நான் உமக்கேன் மூன்று இலட்சம் கொடுக்கவேண்டும்? என் விஷயங்களை அஹல்யாபாய் அம்மையாரிடம் நான் சவிஸ்தாரமாய்ச் சொல்லி அவர் என் கணவர் சொத்துக்களைப் பறிமுதல் செய்யாமல் இருக்கும் பொருட்டு மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; பிறகு அவ்வரசியார் என்ன செய்தாலும் சரி.

'என் விஷயங்களை அஹல்யாபாய் அம்மையாரிடம் நான் சவிஸ்தாரமாய்த் தெரிவிக்கிறேன்' என்று அவ்விதவை கூறியபோது அவ்வுத்தியோகஸ்தன் திகிலடைந்தான். அவளைத் தன் வாக்கு வல்லமையால் இராணியா

ரிடம் செல்வதைத் தடுத்துவிடவேண்டுமென்று மனத்தி லெண்ணி அவ்வுத்தியோகஸ்தன் அவ்விதவையைப் பார்த்து, 'அம்மா, உன் பேதைமையை நான் என்னென்றுரைப்பது! தாங்கள் இராணியாரிடஞ் செல்வது பாலுக்குப் பூனையைக் காவல் வைப்பது போலிருக்கிறது. தங்கள் கணவன் சொத்து இந்தூர் ராஜ்யத்தைச் சேராமல் இருக்கவேண்டுமானால் தாங்கள் அவ்விதஞ் செய்யமாட்டீர்' என்றான்.

சுப்கன் தாஸ் மனைவி :—'ஐய, தங்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கையில்லை. விதவையாகிய என்னை ஏமாற்றிப் பொருள் பறித்துக் கொள்வதற்கு இவ்வித யுக்தி செய்தீர்போலும். உமது சாமர்த்தியம் என்னிடம் பலிக்காது' என்று கூறி அவனுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டாள்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல், தன் எண்ணத்துக்கு மாறாக அவ்விதவை அஹல்யாபாயை நேரிற் பார்ப்பதாகக் கூறின மொழிகள் அவ்வுத்தியோகஸ்தனைக் கலக்கின. அவளால் தனக்கு நேரிடும் விபத்தை எவ்விதம் தடுப்பதென்று யோசித்தான். அவனுக்கு ஒரு யுக்தியுந் தோன்றவில்லை. என்ன செய்வான், பாவம்!

இஃதிவ்வாறாக, அவ்விதவை இனித் தாமதித்தால் நல்ல ஹோதாவிலிருந்த அவ்வுத்தியோகஸ்தன் தனக்கு ஏதாவது கெடுதி செய்வான் என்று சந்தேகித்து, அத்தினமே அவள் தான் சுவீகாரம் எடுக்க உத்தேசித்துக்கொண்டிருக்கிற சிறுவனையும் அவன் பந்துக்களில் சிலரையும் சேர்த்துக்கொண்டு இந்தூர் நகருக்குப் புறப்பட்

டுப்போய் அஹல்யாபாய் அம்மையாரின் அரண்மனையை யடைந்து நடந்த வித்தாந்தங்களை அவரிடம் சாங்கோபாங்கமாகத் தெரிவித்தான்.

அவ்விஷயங்களைக் கேட்டதும் அஹல்யாபாய் முகத்தில் கோபக்குறி தோன்றிற்று. 'என்ன, நான் நம்பியுள்ள உத்தியோகஸ்தர் இவ்விதம் என் எண்ணத்திற்கு விரோதமாக நடந்து வருகிறார்கள். இவர்களால் எனக்கு அபகீர்த்தி நேரிடும் போலிருக்கிறது. இதற்குப் பரிகாரம் யாது?' என்று அவர் ஆலோசித்தார். அக்கணமே அவர் அந்நகரபரிபாலன உத்தியோகஸ்தனை அலுவலிலிருந்து நீக்கிவிடக் கட்டளையிட்டு இதர உத்தியோகஸ்தரை அவ்வப்போது வரவழைத்து அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி யனுப்பினர்.

பிறகு அவ்வரசியார் சுப்கன் தாஸ் மனைவிக்கும் அவனைச் சேர்ந்தோருக்கும் தேறுதல் கூறி, 'இறந்து போன சுப்கன் தாஸ் சொத்துக்கு உரியவன் இச்சிறுவனே; அச்சொத்துக்கும் இராஜாங்கத்தாருக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை' என்று வற்புறுத்தினர். அவர் அனைவரும் மன நிம்மதியடைந்த பிறகு அவர் அச்சிறுவனைக் கட்டியணைத்து முத்தமிட்டு அவனுக்குப் பட்டாடைகளும் பொன்னாபரணங்களும் பரிசிலளித்து அவனையும் அவனுடன் வந்தவர்களையும் நன்கு உபசரித்து வழிகூட்டி யனுப்பிவைத்தார்.

*　*　*

*　*　*

*　*　*

துப்பி தாஸ், பெனாரஸ் தாஸ் என்னும் சகோதரர்

இருவர் கெர்காங்கில் (Kergong) வசித்து வந்தனர். அவர்கள் தம்முள் வேறுபாடின்றி மிக்க ஒற்றுமையுடன் உழைத்து அபரிமிதமான பொருளீட்டினார்கள். அகஸ்மாத்தாய் அவ்விருவரும் ஓரே தினத்தில் உயிர் துறந்தார்கள். அவ்விருவரில் மூத்தவனுக்கு விவாகமாகியும் புத்திரப்பேறில்லை. இளையவனுக்குக் கலியாணம் ஆகவேயில்லை.

அவ்விருவர் இறந்ததும் மூத்தவன்விதவை இந்நிலையற்ற உலகவாழ்க்கையைத் துறக்க எண்ணி, அவர் சொத்தை இராஜாங்கத்தாருக்கு ஒப்பிக்கத் தீர்மானித்து அஹல்யாபாய் அம்மையாரை யடைந்து அவருக்குத் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள்.

அதைக்கேட்ட இராணியார் அவள் விருப்பத்துக்குக் கிஞ்சித்தும் இசையாமல் அவளை நோக்கி, 'நீ இறந்துபோனவர்களின் திரவியத்தைக்கொண்டு அவர்கள் ஞாபகார்த்தம் மனவிருப்பத்துடன் கெர்காங்கில் சத்திரம் சாவடிகளும் கோயில் குளங்களும் நிருமாணித்து அன்றாடம் ஏழைகளைப் போஷித்து வந்தால் அவர்கள் நற்கதியடைவார்கள். உனக்கும் புண்ணியமுண்டாகும்' என்று ஆலோசனை யுரைத்து அனுப்பிவைத்தார்.

அவர் வார்த்தையை மறுக்க மனமின்றி அவ்விதவை தன்னிருப்பிடத்திற்கேகி, அங்கு ஓர் ஆற்றினருகில் விநாயகருக்குக் கோயிலொன்று சமைத்து அவருக்கு நாள்தோறும் ஆராதனை செய்வதற்கு நிலங்கள் வாங்கி அக்கோயிலுக்கு எழுதிவைத்தாள். இன்னும் பற்பல தான தருமங்கள் செய்தாள். கெர்காங்கில் கணபதி

கோயிலைக்காண்பவர் அனைவரும் அஹல்யாபாய் இராணியாரை நினைக்காமல் இருப்பதில்லை.

* * *

* * *

* * *

அஹல்யாபாய் அம்மையாரின் உன்னத பதவியையும் உலகெங்கும் பரந்த கீர்த்தியையும் பற்றி அநேகர் உரையாடுவதைக்கேட்ட * அந்தியாபாய் அவர்மீது பொறாமையுற்றுத் தன் வேலைக்காரிகளில் ஒருத்தியை அவரிடமனுப்பி அவரைக்கண்டு அவருடைய அழகைத் தனக்கு வர்ணித்துரைக்கக் கட்டளையிட்டாள்.

தன் எஜமானியின் ஏவலின் பேரில் இந்தூர் நகருக்குச் சென்று அஹல்யாபாய் அம்மையாரைப் பார்த்துவிட்டுத் திரும்பிய அப்பணிப்பெண் அந்தியா பாயை நோக்கி, 'அம்மா, அவ்வரசியார் தங்களைப்போல் அழகுடையவரல்லர்; உமது முகவசீகர வனப்பின் முன் அவர் வனப்பு சூரியன் முன் மின்மினிப் போலாம்' என்றாள்.

அஹல்யாபாய் அரசியார் தான் நினைத்ததைப் போல அத்துணை அழகுடையவர் அல்லர் என்று கேள்விப்பட்டதும் அந்தியாபாய் ஒருவாறு தேறுதலடைந்தனள். என்னே பெண்களின் பொறாமை!—அழிந்து போகும் இயல்பையுடைய இத்தேகத்தின் வனப்பைப் பெரிதென்று கருதும் மடமையை என்னென்றுரைப்பது!

---

* ரகோபாதாதாவின் மனைவி.

* * *

* * *

* * *

அஹல்யாபாய் இராணியார் தமது அரசாட்சி விஷயமாக மாதாஜி சிந்தியா (Madhajee Sindhia) என்பவரிடமிருந்து மிகுந்த உதவி பெற்றார். அதனால் சுற்றுப் பக்கங்களிலிருந்த சுதேசமன்னர் அவ்வம்மையாருக்குத் தீங்கு புரிய அஞ்சினர் என்பது சரித்திராசிரியர் துணிபு. சிந்தியாவின் நட்பினால் நலம் பெறலாம் என்றவர் எண்ணம் வீணாகவில்லை. முதன் முதல் சிந்தியாவுக்கும் அவருக்கும் நட்புண்டான விதம் இன்னதென்று தெரியவில்லை. சிந்தியா, முலஹரிராவ் காந்திராவ் முதலியவர்களின் சிறந்த நண்பராய் இருந்திருக்கலாம். அவ்விருவருக்கும் ஏற்பட்டிருந்த நட்பு முதிர முதிர, அஹல்யாபாய் அம்மையார் அவருக்கு முப்பது இலட்ச ரூபாய் வரையில் கடன் கொடுக்கலானார். அத்தொகையை அவர் திருப்பிக் கொடுத்து விட்டதாகத் தெரியவில்லை. அவர் அஹல்யாபாய்க்குச் செய்த உபகாரத்திற்கு அது பதிலுபகாரமாய்விட்டது போலும்!

* * *

* * *

* * *

அஹல்யாபாய் அம்மையார் வயிற்றில் இரு குழந்தைகள் உதித்தனர் என்றும் அவர்களில் மல்லிராவ் இறந்து விட்டானென்றும் முன்னமே கூறியிருக்கிறோம். அரசியாரின் மற்றொரு குழந்தை பெண் குழந்தை; அவள் அதற்கு முக்தாபாய் என்று நாமகரணம் சூட்டி

அதைப்போற்றி வளர்த்து வந்தனர். முக்தாபாய் யுக்த வயதடைந்ததும் அவளை அவள் நிலைமைக்கேற்ற இடத்தில் விவாகஞ் செய்து கொடுத்தார். விவாகமான சில வருஷங்களுக்குள் அப்பெண்ணின் புருஷன் இறந்து போனான். அவன் இறந்து போவதற்கு முன்னர் அவள் வயிற்றில் பிறந்திருந்த ஒரே ஆண்குழந்தையும் இறந்து போயிற்று.

புருஷனைப் பறிகொடுத்த முக்தாபாய் துக்க மிகுதியால் தன் தாயாரை அணுகி, 'அம்மா! என் குழந்தையும் கணவனும் இறந்த பிறகு நான் உயிருடன் இருப்பதில் பிரயோசனம் ஒன்றுமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும், இவ்யாக்கை,

'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது'

ஆதலால், நான் உடன் கட்டையேறி மரிக்கிறேன்" என்று தன்னுள்ளத்தை ஒளிக்காமற் சொன்னாள்.

அஹல்யாபாய் :—'கண்மணி, உன் வார்த்தைகளைக் கேட்க என்னுடல் நடுங்குகிறது. என் மனம் கவல்கிறது. நான் என்ன செய்வேன். நரைதிரை மிகுந்த எனக்கு இவ்வயோதிக தசையில் உன்னினும் உற்றதுணை வேறு ஒருவருமிலர். அவ்விதமிருக்க நீ என்னை விட்டுப்பிரிய எங்ஙனம் மனந்துணிந்தாய். முக்தாபாய், வேண்டா, நீ உடன் கட்டை ஏறி மரிப்பதை என் பொருட்டுத் தவிர்ப்பாய்' என்று அவளை வேண்டிக்கொண்டார்.

முக்தாபாய்:—அம்மா, தாங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லை. நானாவது, உமக்குத்துணையாய் இருப்பதாவது! இவ்வுலகில் யார் யாருக்குத்துணை. நம்மனைவருக்குந் தோன்றாத் துணைவராய் இருந்து வருபவர் பண்டரிநாதரன்றோ!

'மரணமடையாமல் இவ்வுலகில் நிலைத்து நிற்பவர் யார்? நாம் முடிவில் கூற்றுவனுக்கு இரையாவது நிச்சயம். இளம்பிராயத்தில் விதவையான நான் ஏன் வீண் அபவாதத்திற்கு ஆளாகி நிற்கவேண்டும். என் இன்னுயிராம் கணவர் இறந்தபிறகு நான் உயிரற்ற உடலானேன். உயிரற்ற உடலால் இவ்வுலகத்தாருக்கு ஆவதென்ன!—மேலும், தாங்கள் இன்னும் சிறிது காலத்தில் இறந்துவிடப்போகிறீர். உமக்குப் பிறகு ஏழையேன் நிலைமை என்னவாகும் என்பதை யோசித்துப்பாரும்.

'கைம்மை நோன்பு கைக்கொண்டு காலமெல்லாம் கடுந்துயரடைவதைக் காட்டிலும் இன்னே இறந்துபட்ட என் கணவருடன் தீப்பாய்ந்து உயிர் துறத்தல் சிறந்ததெனத் தோன்றுகிறது. யாவும் அறிந்த உமக்கு இளம்பிராயத்தாளாகிய நான் யாது கூறவேண்டியதிருக்கிறது' என்றாள்.

அஹல்யாபாய் அம்மையார் தமது புதல்வியைத் தடுக்க எவ்வளவோ முயன்றார். அம்முயற்சி யாதொரு பயனுமில்லாது போயிற்று. அவள் தான் பிடித்த பிடியை விடவேயில்லை. அவள் தன் கணவன் சவத்துடன் சுடுகாடு சென்றாள்.

துக்க முகத்துடன் அவளைத்தொடர்ந்து சென்ற அஹல்யாபாய் அம்மையாரை இருவர்பிராமணர் தாங்கிச் சென்றனர். அவருடைய அருமருந்தன்ன மகள் முக்தா பாய் மயானத்தை யடைந்ததும் குறித்த தோரிடத்தில் சரேலென்று, உட்கார்ந்து, இறந்துபோன கணவன் தலை யைத்தூக்கித் தன் மடிமீது வைத்துக்கொண்டாள். அங் கிருந்த ஆட்கள் தங்கள் கைகால்கள் நடுங்க அவள் மீதும் அவளுடைய புருஷன் சவத்தின்மீதும் கட்டை களை அடுக்கினர்கள். இப்பயங்கரமான காட்சியைக் காண்பதற்கென்று இந்தூர் நகரவாசிகள் அனைவரும் உருண்டு திரண்டு ஓடோடியுஞ் சென்று அம்மயானத் தைக் குறுகி நின்றார்கள். அவர்கள் கண்களில் நீர் கல கலவென்று கொட்டிற்று. அதுசமயம், உடல் முழு வதும் கட்டையால் மூடுண்டிருந்த அப்பெண் கடவுளைத் துதித்தவண்ணம் இருக்க, சுற்றத்தார் அச்சவத்திற்குக் கொள்ளிவைத்தனர். கட்டைகள் எரியத்தலைப்பட்டன. அவளைச் சுற்றிலும் தீப்பரந்தெழுந்தது. சுற்றி நின்றோர் கதறியழுதனர். தமது மகள் உயிருடன் தீக்கிரையாவ தைக் காணச் சகிக்க மாட்டாமல் அஹல்யாபாய் அம்மை யார் அவள் மீதுள்ள வாஞ்சையால் முன்னோக்கிச் சென்று அவளைத்தீயினின்றும் காப்பாற்ற யத்தனித்தார். ஆனால், அருகில் நின்ற இருபிராமணர் அவர் அவ்விதஞ் செல்லாதபடி அவரைக்கெட்டியாய்ப் பிடித்துக்கொண் டார்கள். தீயோ கொழுந்துவிட்டெரிந்தது. சிலமணி நேரங்களுக்குள் சதிபதிகள் இருவரும் வெந்து சாம்ப ராயினர்.

பிறகு அஹல்யாபாய் அம்மையார்,

'காவலன் மகளே கணங்குழை மடவாய்
.... யாத்தின் வித்தோய்
பெண் விளக்காகிய பெருமலரும் பேதாய்
பொன்னே திருவே, யன்னே யரிவாய்
நங்காய் நல்லாய் கொங்கார் கோதாய்
தேனேர் கிளவி சிறுமுதுக் குறைவி'

போதியோ! நான் இனி எங்ஙனம் வாழ்வேன். எவ்வாறு உய்வேன்' என்று பிரலாபித்தார். அவரும் அவரைச் சூழ்ந்து நின்ற நகரமாந்தரும் அருகிலிருந்த ஆற்றில் குளித்தார்கள். பொழுது சாய்ந்தது. அனைவரும் அரண்மனையைச் சேர்ந்தனர்.

அஹல்யாபாய் அம்மையார் தனிமையாய் நின்றார். அநேக நாட்களாக அவர் துக்க சாகரத்தில் அழுந்தி யிருந்தார். அன்னபானாதிகளை வெறுத்தார். பிறருடன் வார்த்தை யாடுவதைத் தவிர்த்தார். பலநாட்கள் பறந்தன; ஆயினும் முக்தாபாயின் உருவமும் மனவலிமையும் அவ்வம்மையாரின் இதயத்தை விட்டகலவில்லை. அவர் தமது புதல்வியின் ஞாபகத்தின் பொருட்டு இந்தூரில் ஒருசிறந்த சமாதி நிரூமித்தார்.

*   *   *
*   *   *
*   *   *

இவ்விதம், 'மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்' என்பதை உணர்ந்து இந்தூர் ராஜ்யத்தை அஹல்யாபாய் அம்மையார்,

'............ நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுந்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்று'

முடையவராயிருந்து 'இல்லோர் கையற' முப்பது வருஷம் ஆண்டு வந்து தமக்கு அறுபதாம் வயதில் அதாவது, 1795-ஆம் ஆண்டில் காலமாயினர்.

அவரைப்போல் நற்குணங்கள் அனைத்தும் ஓர் உருக்கொண்டு இவ்வவனியில் அவதரித்து, தேசபரிபாலனஞ் செய்துவந்த இராணிகள் வெகு சிலரே. இந்திய தேசமுழுவதும் யுத்தங்களால் இரத்த வெள்ளத்தில் மூழ்கியிருந்த காலத்தில் அவ்வம்மையார் தமது புத்தி சாதுர்யத்தாலும் ராஜரிக நிர்வாக மேம்பாட்டினாலும் அந்நிய நாட்டரசரிடம் பூண்டிருந்த நட்பினாலும் இந்தூர் ராஜ்யத்தில் சமர்தானமே நிலைபெற்றிருக்கச் செய்த விஷயம் எவரும் பாராட்டத் தக்கதன்றோ!

அவருடைய குடும்பத்தில் நேர்ந்த விவகாரங்களும் துன்பங்களும் ராஜ்ய பரிபாலன விஷயத்தில் சம்பந்தப்படவேயில்லை. தமது உயிருக்குயிரான இருமக்கள்—மல்லிராவ், முக்தா பாய்—தமக்கு முன்னர் உயிர்துறந்தும் அவர் மனத் தளர்வடையாமல் யாவும் ஈசன் செயலென விடுத்து, நாட்டின் க்ஷேமமே எல்லாவற்றினும் மேலானதெனக்கருதி செங்கோல் செலுத்திவந்த விஷயம் அவருடைய அரசியலின் உயர்வைக் குறிக்கின்றது.

அவ்வரசியாரின் செங்கோன் முறைமையை அனுப

வித்தறிந்த இந்தூர் ராஜ்ய குடிஜனங்களில் இந்துக்களும் மகம்மதியரும் அவரைத் தெய்வ அமிசமென்றே தம் கருத்துட்கொண்டனர். அவர் இறந்தபோது அவர்கள் அடைந்த வருத்தம் இத்துணையென்று அளவிட்டுரைக்க எவராலும் முடியாது;

'கிள்ளை யொடு பூவை யழுத கிளர் மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென் சொல்ல
...................................'.

'ஆவு மழுதவன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுத புனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப் போர்
மாவு மழுதன....................'.

'மாதாநுங் கலுழ மங்கலமுஞ் சிந்தித்தம்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்சிவப்பத் தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடியொப்பார்'.

என்று இந்தூர் வாசிகள் அனைவரும் பலவிதமாய் ஏங்கினர். அவரைப்போன்ற இராணியார் தங்களுக்கு எப்போது கிடைக்கப்போகிறார் என்றனர். அந்நகர மாந்தர் வாய்விட்டழுத பேரொலி விண்ணுலகை அடைந்ததென்னலாம்.

*　　　*　　　*
*　　　*　　　*
*　　　*　　　*

கடைப் பகுதி

பின் சந்ததியார்

அத்தியாயம்—1.

ஞாபகச் சின்னம்.

'அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுன்
டாக்கினோர் நீதிமன்ன
ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரகாங்கள் செய்த பெரியோர்
தனை யொப்பிலாப் புதல்வனைப் பெற்றபேர் பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வேந்தாகு மாறாத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்களோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுத்த வொரு பத்தினி மடத்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளிந்
மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத
மனிதரிவ ராகுமன்றே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயனீடு
மலைமேவு குமரேசனே'............குமரேச சதகம்.

இடைப்பகுதியின் முதல் அத்தியாயத்திற் கூறிய மஹேசுவர நகரில் அஹல்யா பாய் அம்மையாரின் பிரேதம், அவரிஷ்டத்தின்படியே தகனஞ்செய்யப்பட்டது. அவருடைய பிரேதச் சாம்பல் அங்கிருக்கும் ஒரு கோட்டை

யுள் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. அத்திவ்விய நகரில் இருக்கும் கட்டடங்களிற் பல கோயில்களேயாகும். அக்காலத்துச் சிற்பிகளின் வேலைத் திறமையைக் கண்களிக்கப் பார்த்தற்குரிய இடம் மஹேசுவரம் என்று சொல்லலாம். ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகள் சென்றும் அக்கோயில்கள் சிதைந்து போகாமல் இப்போது சமைத்தவைகளாகவே தோற்றுகின்றன.

அக்கோயில்களில் நருமதை நதிக்கு அருகில் அதிக சித்திர வேலைப்பாடமைந்த சிறந்த ஒரு கோயிலுள் இலிங்கமொன்றும் அந்த இலிங்கத்திற்குப் பின்புறத்தில் அஹல்யா பாய் அம்மையாரின் உருவச் சிலையொன்றும் இருக்கின்றன. அக்கோயிலின் உட்புறத்திலுள்ள ஒரு சுவரில் புதைக்கப் பெற்றக் கருங்கல்லில்,

'ஸ்ரீ கணேசருக்கு நமஸ்காரம் இராஜாதிராஜனுக்கு நமஸ்காரம், நருமதா தேவிக்கு நமஸ்காரம்.

'1. இங்கிலவுலகில் ஹோல்கார் வமிசமொன்றிருக்கிறது. அவ்வமிசத்தார் ராஜ்ய நிர்வாகத்தில் சமர்த்தர்; சத்துருக்களை நிர்மூலப் படுத்துவதில் வல்லவர்; திரவியத்திற்கு மூல புருஷர்; வென்றி மறமும், மனவமைதியும் இன்னும் இதர நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றவர்.

'2. இவ்வமிசத்தில் வீராதிவீரனும் கல்வி அவதாரத்தை நிகர்த்தவனுமான முலஹரி ராவ் அவதரித்தான். அவன் பாம்பின் தோல் போன்ற [illegible] [illegible] [illegible] [illegible] முன்னர் குதிரையும்

உடையவன். இம்மன்னன் மிலேச்சர்களைத் தன் கத்திக்கிரையாக்கினன்.

'3. அவன் புதல்வன் காந்தி ராவ் என்பவன் வீரத்தில் அவனினும் குறைந்தவனல்லன். அவன் இன்பநுகர்ச்சியில் சர்ப்பசயன விஷ்ணுவை நிகர்த்தவன்.

"4. காந்திராவின் மனைவியென்னும் பாக்கியம் பெற்று, அவனுக்குரிய பணிவிடைகளைக் குறைவறச் செய்துவந்த அவள் (அஹல்யா பாய்) தன் குற்ற மற்ற குணவிசேஷத்தால் அநசூயை, அருந்ததி முதலிய கற்பரசிகளை நமக்கு ஞாபக மூட்டுகிறாள்.

'5. அழகில் கௌதம மகரிஷியின் மனைவி அகலிகையை நிகர்த்த அவ்வம்மை இவ்வுலகில் மனிதரைக் காப்பதற்கும், சேனாபலத்தால் கலகங்களை அடக்குவதற்கும் அவதரித்தாள்.

'6. தன்னுயர்ந்த பதவிக்கு அஹல்யா பாய் அம்மை தயவைப் பெற்றவனும், உதார குணம் பொருந்தியவனும் ஸுபேதார் எனப் பெயர்பெற்றவனும், செல்வமும் நன்னடக்கையும், தைரியமும் ஒருங்கே அமையப் பெற்றவனுமான,

'7. துக்காஜி என்பவன் (அவ்வம்மைக்குப் பிறகு) தான் ஆண்ட விஸ்தாரப்புற்ற ராஜ்யத்திற்கு அணிகலனென விளங்கினன். அவனுக்குப் பிறகு கீர்த்தி மிகுந்த அவன் குமாரன் பல நகரங்களைக் கைப்பற்றி, அநேக பகை மன்னரிடமிருந்து திறை வாங்கி, இன்னும் இதர பகைவர்களை வெட்டி வீழ்த்திய ஜஸ்வந்த் ராவ்

என்பவன்................................" என்று இன்னும் பற்பல விஷயங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

இக் கல்வெட்டிலிருந்து, மூலஹரி ராவ், காந்தி ராவ் அஹல்யா பாய், துக்காஜி ஹோல்கார், ஜஸ்வந்த் ராவ் முதலியவர்களின் வரலாற்றைச் சுருக்கமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

* * *

* * *

* * *

அத்தியாயம்—2.

அஹல்யா பாய் அம்மையார், காத்தரின் இராணியார்.

'இன்றோர் காறு மெல்வளையார் தம்மிறை யோரைக்
கொன்றிலில்லை கொல்லுதியோ நீ கொடியாளே'—
[கம்பராமாயணம்.

'பேதை யுன்றனை யாருளர் பழிபடப் பிறந்தார்'—
[கம்பராமாயணம்.

*   *   *
*   *   *

இருந்தஇடந் தெரியாதிருந்த ருஷியா (Russia) தேசத்தை முன்னுக்குக் கொண்டுவந்த முதலாம் பீற்றர் (Peter the great) இறந்த அநேக வருஷங்களுக்குப் பிறகு இரண்டாம் காத்தரின் (Catherine II 1762-96) என்னும் அரசியார் ருஷிய தேசத்தின் உரிமை பெற்று அரசாண்டு வந்தார்.

சிற்சில விஷயங்களில் அஹல்யா பாய் அம்மையாரை அந்த ருஷிய தேச இராணியாருக்கு ஒப்பிடலாம். ஆயினும் அநேக விஷயங்களில் அவர்கள் வேறுபட்டனர்கள்.

காத்தரின் அரசியார் ஐரோப்பாவிலுள்ள ருஷிய தேசதகை ஆண்டுவந்த காலத்தில் அஹல்யாபாய் அம்மையார் இந்தியாவிலுள்ள இந்தூர் ராஜ்யத்தை ஆட்சிசெய்து வந்தார். இவ்விரு அரசியரும் வெவ்வேறு நாட்டினராயினும் ஒரே காலத்தவர்; புத்தி சாதுர்யத்தில் ஒற்றுமையுடையவர்.

இருவரும் விதவைகள். தேச நன்மையைக் கருதினவர்கள். அஹல்யா பாய் அம்மையார் தமது நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டுக் கோட்டை கொத்தளங்களும் தர்ம சாவடிகளும், கோயில் குளங்களும் நிருமாணித்தார். தானதருமம் செய்தார். இந்தூர் ராஜ்ய முழுமையும் சமாதானம் நிலைபெற்றிருக்கச் செய்தார். காத்தரின் அரசியாரும் ருஷியாவில் அவ்விதமே அநேக சீர்திருத்தங்கள் செய்தார். பாடசாலைகள் பல ஏற்படுத்தினார். வியாபார விருத்திக்குகந்த பல விஷயங்கள் செய்து முடித்தார்.

ஆனால் அவ்விருவரும் பின்வரும் விஷயங்களில் மாறுபட்டனர்:

முன்னமே கூறியபடி இருவரும் விதவைகள்; ஆயினும், அஹல்யாபாய் அம்மையார் புருஷனை இழந்தது தெய்வ சங்கற்பம். அவர் புருஷன் சுத்த வீரனேபோல் யுத்த களத்தில் இறந்தது எவரும் அறிந்தவிஷயம். காத்தரின் இராணியாரோ எனில் ருஷியா தேசத்தரசுரிமை பெறுவதற்காகவே இரகசியமாகத் தம் புருஷனைக் கொல்லுவித்தார். அவ்வரசியாரின் தூண்டுதல் பேரில் அவர் காதலுக்கிலக்கான இருவர் மூன்றும் பீற்றரைக் கொன்றனர்.

அஹல்யாபாய் அம்மையார் கடவுள் பக்தி மிகுந்தவர். அவர் கடவுளுக்குப் பயந்தே ஒவ்வொரு காரியத்தை

யும் செய்துவந்தார். காத்தரின் அரசியாரோ எனில் கடவுள் பக்தியற்றவரென்று சொல்வதற்கில்லை; அஹல்யாபாய் அம்மையாரிடமிருந்த அத்துணை பக்தி அவரிடம் இருந்ததில்லை என்று சொல்லலாம்.

அஹல்யாபாய் அம்மையார் அந்நிய நாட்டு மன்னரைப் பகைத்துக்கொண்டால் தமது குடிகள் சமாதானமாய் வாழ இயலாது என்றெண்ணங்கொண்டு இதர நாடுகளைக் கைப்பற்ற ஆவல் கொள்ளவில்லை. தமது கைக்குள் அடங்கிய நாடே போதுமானதென்று திருப்தியடைந்திருந்தார். ஆனால், காத்தரின் அரசியாரோ இடம்பத்தில் பிரியம் வைத்தவர். தமக்கு வெளிநாட்டரசர் அஞ்சி நடக்கவேண்டு மென்னும் கருத்துடையவ ரானதுபற்றி அவர் ருஷியாவைச் சூழ்ந்திருந்த நாடுகளைக் கைவசப்படுத்த முயன்றார். அம்முயற்சி வீண்போகவில்லை. தமது சேனாபலத்தால் அநேக மன்னரைத் தோல்வியுறச்செய்து அவர்களைத் தமக்குத் தொண்டு புரியச்செய்தார். அவருடைய திறமையால் புதிய நாடுகள் பல ருஷிய ஆளுகைக்குட்டன.

இந்தூர் இராணியார் பொறுமையும் அடக்கமும் பொருந்தியவர். அவர் அரச பதவியடைந்திருந்தும் அச்சமுதலிய நற்குணங்கள் நிறைந்தவராயிருந்தார். பிறர் தம்மை எக்காரணத்தைக்கொண்டும் புகழ்ந்து பேசுதல் தகாதெனும் கொள்கையுடையவரென்று கூறியிருக்கிறோம். அவர் தமது மனசாட்சிக்கு விரோதமாய் ஒரு பாவகாரியமும் செய்ததில்லை. இவ்விஷயங்களில் ருஷிய அரசியார் அவருக்கு நேர்விரோதமானவர். காத்தரின்

கர்வமிகுந்தவர்; ஆண்தன்மையுடையவர். இவ்விரு குணங்கள் நிறைந்தவர் அடக்கமாயிருப்பது எவ்விதம்? அவர் பிறர் முன்னிலையில் தம்மைத்தாமே புகழ்ந்து பேசிக்கொள்வதுமன்றிப் பிறரும் தம்மைப் புகழ்ந்து பேசவேண்டு மென்றும் அவாவுமுடையவர். பாவகாரியங்களை மனங்கூசாமல் செய்யத்துணிந்தவர்; அவரைப் போன்றவர் எவருமிலர்.

இந்தூர் ராஜ்யத்தைக் காட்டினும் கர்த்தரின் ஆளுகைக்குட்பட்ட ருஷியா தேசம் பன்மடங்கு விஸ்தீரணமுடையது. இரண்டு தேசங்களில் வாழ்ந்துவந்த, அதாவது—இவ்விரு அரசியரின் கீழடங்கிய குடி ஜனங்களின் நடையுடை பாவனைகளும் வேறு. காத்தரின் ஆண்டுவந்த ஜனங்கள் கிறிஸ்தவ மதஸ்தர்; அஹல்யாபாய் அரசாட்சி செய்துவந்த குடிகள் இந்துக்களும் மகம்மதியருமாவர்; அவரவர்களுடைய பழக்க வழக்கங்கள் வெவ்வேறு. இரு நாடுகளின் சீதோஷ்ண ஸ்திதியும் மாறுபாடனது.

காத்தரின் அரசியார் வயிற்றில் முதலாம் பவுல் (Paul I) பிறந்தான். அஹல்யாபாய் இராணியார் வயிற்றில் மல்லிராவும் முக்தாபாயும் பிறந்தனர். காத்தரின் இறந்த பிறகு முதலாம் பவுல் ருஷிய நாட்டுச்சக்கரவர்த்தியாயினன். ஆனால், மல்லிராவும் முக்தாபாயும் அஹல்யாபாய் அம்மையாரின் முற்பவ வினையால், அவர் உயிருடன் இருக்கும்போதே இறந்துபோயினர். அது காரணம் பற்றி, அவ்வம்மையாருக்குப் பிறகு முலஹரிராவ் கால்வழியிற் றோன்றியவர் எவரும் இந்தூர் நாட்டின் அரசுரிமையைப் பெறுவதற்கியலாது போயிற்று.

ராஜரிக முறைமையில் அவ்விருவர் அநுசரித்து வந்த வழிகள் வேறுபட்டன வாயினும், அவையாவும் தேச நன்மையின் பொருட்டுக் கையாளப்பட்டுவந்தன. அவ்விரு இராணியாரும் தத்தம் குணங்களில்வேற்றுமை யுடையவராயிருந்தனர். சுருங்கச் சொல்லின், அஹல்யா பாய் அம்மையார் இலக்குமியை நிகர்த்தார். காத்தரின் காளியை யொத்து விளங்கினர்.

அத்தியாயம்—4.

பின் சந்ததியார்.

'வளம்பெற வேண்டாதார் யார் யாருமில்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றல்'—நாலடியார்.

அஹல்யாபாய் அம்மையார் விண்ணுலகடைந்த பிறகு, இந்தூர் ராஜ்ய உரிமையைப் பெறுவதற்கு அவர் வயிற்றிலுதித்தவர் எவருமிலர். ஆதலால், அவருடைய தளகர்த்தனயிருந்த துக்காஜி ஹோல்கார் பழம்பிறப்பிற் செய்த பெருந்தவத்தின் வல்லமையால் இந்தூர் ராஜ்ய பாரம் தாங்க நேர்ந்தது.

1795-ஆம் வருஷத்தில் கல்வியாலும் வீரத்தாலும் ஆட்சி முறையாலும் பிரதாபத்தாலும் சிறந்தவனென்று புகழ்பெற்று விளங்கிய துக்காஜி வெகு ஆடம்பரத்துடன் இந்தூரில் அரியணை அமர்ந்தான்.

அஹல்யாபாய் அம்மையார் உயிருடன் இருக்கும் போதே இரகுநாதராவ் தனக்குவிரோதியான நானு பட்னு விஸ் (Nana Fadna Vis) என்பவனைத் தொலைக்க வேண்டி, இந்தூர் நாட்டுக்குவந்து துக்காஜியின் உதவியை நாடினன்; ஆனால், துக்காஜி, அவன் தன்னை நாடி வருவதற்கு முன்னமே நானுபட்னுவிஸ் பக்கம் சேர்ந்து கொண்டிருந்தான். அதையறிந்ததும் இரகுநாத ராவ் அங்கிருந்தால் தன்னுயிருக்கே ஆபத்து வருமென் றெண்ணி, எவருக்கும் சொல்லாமல் கூர்ஜ்ஜரத்துக்கு

(Guzaret) ஓடிப்போனான். இன்னொரு முறை மாதோஜி சிந்தியா என்பவனுக்கு உதவி செய்யத்தீர்மானித்த நானா பட்னவிஸ் துக்காஜியுடன் சேர்ந்துகொண்டு டில்லி அரண்மனையைக் கைப்பற்றியிருந்த குலாம் காதர் (Gulam Kadir) என்னும் ரோஹில்லா (Rohilla) ஜாதியானை யுத்தத்தில் முறியடித்து, உயிர்தப்பிப் போகலா மென்று ஓடின அவனைப் பிடித்துக்கொன்றான்.

வென்றி மறஞ்சிறந்து விளங்கிய துக்காஜி வயோதிக தசை யடைந்ததால், இந்தூர் ராஜ்யத்தை நெடு நாட்களாக ஆளவில்லை. இந்தூர் ராஜ்யத்தில் அவன் அரசாட்சி இரண்டு வருஷமே நிலைத்திருந்தது. அப்போது அவன் அஹல்யாபாய் அம்மையாரின் ராஜரிக நிர்வாக முறைமையில் யாதொரு மாறுதலும் ஏற்படுத்தவில்லை. அவனும் அவ்வம்மையாரைப்போலவே அரசாட்சி செய்து வந்தான். ஆனால் அவனுக்கு இந்தூர் ராஜ்ய விஸ்தீரணத்தைச் சிறிது அதிகப்படுத்த வேண்டுமென்னும் ஆவல் இருந்தது. அவ்வாவல் நிறைவேறாதுபோயிற்று.

துக்காஜி தன்னிறுதி நாட்களில், பீஷ்வா இரண்டாம் மாதவராவ் (1774-1795) ஆணையின் பேரில் தவுலத் ராவ் சிந்தியா, மாதோஜி போன்ஸலே ஆகிய இவ்விரு மகாராட்டியத் தலைவருடன் சேர்ந்துகொண்டு நைஸாம் அலிக்கு (Nizam Ali) விரோதமாக அமராடினான். அப்போரில் வெற்றியடைந்தான். அதுவே அவனடைந்த வெற்றிகளில் கடைசியானது.

சில நாட்களுக்குப்பின் துக்காஜி திடீரென்று இறந்து போனான். இந்தூர் ராஜ்ய உரிமையின் பொருட்டு

அவன் புதல்வர் ஒருவரோடொருவர் சண்டையிட ஆரம்பித்தனர். இந்தூர் ராஜ்ய முழுமையும் அல்லோல கல்லோல மாயிருந்தது. இந்தூர் நகரில்,

'மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட மறிந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கனருயங்கினை நருகிச் சோர்ந்தனர்
துக்க நின்றறிவினைச் சூறை யாடவே'

*   *   *
*   *   *

கடைசியில், துக்காஜியின் அபிமான பாரியாள் வயிற்றில் பிறந்த ஜஸ்வந்த் ராவ் ஹோல்கார் என்பவன் இந்தூர் ராஜ்யத்தின் உரிமை பெற்றான். சில நாட்களுக்குள் அவனுக்கும் சிந்தியாவுக்கும் யுத்தம் நேர்ந்தது. அவ்யுத்தத்தில் முதன்முதல் ஜஸ்வந்த் ராவ் தோல்வியுண்டான். இந்தூர் நகரத்தை எதிரியின் சேனாவீரர் சூறையிட்டனர். ஆனால்,

ஆடுகோ டாகி யதரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணே களிறணைக்குங் கந்தாகும்
வாழ்தலு மன்ன தகைத்தே யொருவன்றன்
றாழ்வின்றித் தன்னைச் செயின்.'

என்பதே போல் அவ்வீரன் மனத் தளர்வடையாமல் தன்னைப் பலவிதங்களிலும் பலப்படுத்திக்கொண்டு பழிக்குப் பழிவாங்கத் தீர்மானித்து, 1802ஆம் வருஷம் பூனா என்னுமிடத்தில் சிந்தியாவைச் சந்தித்து அவனை முதுகு காட்டி யோடச் செய்தான். சிந்தியா யுத்த களத்தை விட்டோடியதும் அவனைச் சேர்ந்திருந்த பீஷ்வா ஜஸ்

வந்த் ராவ் பலாட்டியன் என்பதை யுணர்ந்து ஒன்றுஞ் செய்ய முடியாமல் தன்னிருப்பிடத்தை யடைந்தான் * * * * * * சில நாட்களுக்குப் பிறகு அப்பீஷ்வா (இரண்டாம் பாஜி ராவ்) அங்கிலேயரின் உதவியின் பேரில் பூனாவுக்குத் திரும்பி வந்தான். பீஷ்வாவுக்கு உதவியாக அங்கிலேயர் வருவதை யுணர்ந்த ஜஸ்வந்த் ராவ் தன் சேனைகளை அழைத்துக்கொண்டு இந்தூருக்குப் போனான்.

இரண்டு வருஷங்கள் சென்றன. 1803ஆம் வருஷத்திலிருந்து 1805ஆம் வருஷம் வரையில் இரண்டாவது மகாராட்டிய யுத்தம் (Second Maharatta War) நடைபெற்றது. அவ்யுத்தத்தில் சேராமல் அதன் முடிவு என்னவாகுமென்று பார்த்துக்கொண்டிருந்த ஜஸ்வந்த் ராவ் அங்கிலேயருடன் ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாக ஏற்பட்டது. அவன் கூறிய நிபந்தனைகள் அங்கிலேயர் ஒப்புக்கொள்ளக் கூடாதவைகளாயிருந்தன. அதனால் அங்கிலேயருக்கும் அவனுக்கும் யுத்தம் நேர்ந்தது.

1804ஆம் வருஷம் நவம்பர்மீ 13உ ஜஸ்வந்த் ராவ் சேனைகள் திக் (Dig) என்னுமிடத்திற்கருகில் முறியடிக்கப்பட்டன. மகாராட்டியரின் எண்பத்தேழு துப்பாக்கிகள் அங்கிலேயர் கைவசப்பட்டன. சில நாட்களுக்குப்பிறகு பரக்காபாத் (Furrukhabad) என்னுமிடத்தில் ஜஸ்வந்த் ராவ் மறுபடியும் தோற்றுப் போயினன். 'திக்' என்னும் கோட்டையை அங்கிலேயர் முற்றுகையிட்டுத் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள். தக்ஷிண தேசத்திலும் மாளவத்திலும் ஜஸ்வந்த் ராவ் ஆளுகைக்குட்பட்டி

ருந்த சில மாகாணங்களும் கோட்டைகளும் அங்கிலேய தளகர்த்தர் 'மர்ரே' (Murray) 'வாலஸ்' (Wallace) என்பவர்களிடம் சிக்கின.

ஜஸ்வந்த் ராவுடன் ஆரம்பித்த யுத்தம் ஒரு முடிவுக்கு வருவதற்குள் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக (Governor-General) இருந்த 'மார்க்குயுஸ் வெல்லெஸ்லி' (Marquis Wellesly) இங்கிலாந்துக்குத் (England) திரும்பிப்போக நேர்ந்தது. அவருக்குப் பிறகு அவர் உத்தியோகத்தை வகித்த 'ஸர் ஜார்ஜ் பார்லோ' (Sir George Barlow), என்பவர் ஜஸ்வந்த் ராவ் ஹோல்காருடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்.

அதன் பிறகு ஜஸ்வந்த் ராவ் இந்தூருக்குத் திரும்பினான். சில நாட்கள் சென்றபின் அவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது.........பித்தம் பிடித்தவன் ராஜ்யநிர்வாகத்திற்குரியவனல்லன்; ஆதலால் அவனுக்குப் பதிலாக அவனுடைய அபிமான பாரியாள் துளசிபாய் என்பவள் இந்தூர் ராஜ்யத்தை ஆண்டு வந்தாள்.

பைத்தியங் கொண்ட ஜஸ்வந்த் ராவ் 1811-ஆம் வருஷம் இறந்துபோனான். அவன் புதல்வன் முலஹரிராவ் சிறுவனாயிருந்ததால் துளசிபாயே அரசியாய் இருந்தாள். இந்தூர் ராஜ்யத்தில் சிலர் அவளுக்கு விரோதமாய்க் கிளம்பினர். அவளுடைய சேனாவீரரும் உத்தியோகஸ்தரும், தங்களுக்குஉரிய சம்பளத்தைச் சரியாகப் பெறாமையால் அவளுக்குக்கீழ்ப்படிந்து நடக்கவில்லை.

* * *
* *

இச்சந்தர்ப்பத்தில், துளசிபாய் புத்திசாதுர்ய மற்றவளான படியால், ஆங்கிலேயருடன் நட்புரிமை பூண்டொழுக விரும்பினாள். அதையறிந்த இந்தூர் சேனை வீரரில் சிலர் அவளைப் பிடித்து, சிப்ரி (Sipri) நதிக்கருகே கொண்டுபோய் சிறிதும் இரக்கமின்றி அவள் தலையை வெட்டி உடலை அந்நதியில் எறிந்து விட்டனர்.

பிறகு ஆங்கிலேயருக்கும் இந்தூர் ராஜ்ய சேனைக்கும் 1817-ஆம் வருஷம் டிசம்பர்மீ மஹித்பூர் (Mahidpur) என்னுமிடத்தில் கொடியயுத்தம் நடந்தது. முல ஹரிராவ், காந்திராவ், துக்காஜிஹோல்கார் முதலிய வீரர் நடத்திச் செல்லாத இந்தூர் நாட்டுச்சேனை சந்திரனில்லாத ஆகாயம் ஒளியிழத்தல் போலவும், மணமில்லாத மலர் சூடலாகாதவாறு போலவும், நதியில்லாத நாடு வசிக்கத்தகாமல் வளமும் அழகும் ஒழிதல் போலவும், நல்ல தந்திகள் பொருந்தி இனிய ஓசையற்ற வீணை செவிக்கு இன்பம் [illegible]ாமை போலவும், செல்வமற்ற வாழ்வு சுகமில்லா[illegible] போலவும், நல்லெண்ணமில்லாதமனம் பாவத்திற்கு இடமாதல் போலவும், வேதவிதியில்லாத வேள்வி பயன் கொடாதவாறுபோலவும், ஒளியிழந்து வலியழிந்து அழகொழிந்து துணிவகன்று வெகு எளிதில் தோல்வியுற்றோடிற்று.

இவ்யுத்தம் மந்தேசுவர உடன்படிக்கையினால் ஒரு முடிவுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கைப்படி ஹோல்

கார் ராஜ்யம் முன்னிருந்த விஸ்தீரணத்தில் பெரிதும் குறைந்து விட்டது. அந்த ராஜ்யத்திலுள்ள சில ஜில்லாக்களை ஆங்கிலேயரும் அவர்களுக்கு நண்பராயிருந்த சிற்றரசர் பலரும் பகிர்ந்து கொண்டனர்.

* * *
* * *
* * *

இதனோடு அஹல்யாபாய் சரித்திரத்தை நிறுத்தி விடுகிறோம்.

இந்தூர் ராஜ்ய விவகாரங்களை இன்னும் அறிய விரும்புவோர் முடிந்த நூல்களில் கண்டுகொள்க.

முற்றுப் பெற்றது.

224695